
# பொருளியல் நோக்கு

ஜூலை
1993

மக்கள் வங்கி வெளியீடு

# விலங்குகளை



# கொடுமைப்படுத்துதல்



## அதனை தடுப்பது எப்படி?

# முன்னோட்டம்

குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகள் என்போர் தவிர, பிராணிகள் உலகில் வாழும் மிகவும் அப்பாவிகளான ஜீவன்களாக இருந்து வருகின்றன. இருந்த போதிலும், அவை மனிதனின் கைகளில் சொல்லொணாக் கொடுமைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் இலக்காகி வருகின்றன. இத்தகைய அட்டூழியங்களை – குறிப்பாக இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் – மிக எளிதில் தவிர்த்துக் கொள்ள முடியும். ஆனால், உலகெங்கிலும் இந்தத் துன்புறுத்தல்களும் கொடுமைகளும் பரவலாக இடம்பெற்று வருகின்றன. வேட்டையை ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகக் கருதுவது தொடக்கம் திமிங்கிலங்களை கொன்று குவிப்பது வரையில், "டிரேய்ஸ்" பரிட்சார்த்தம் (முயல்களை பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு உற்பத்திப் பொருட்களினதும் பாதுகாப்பான நிலையை பரிட்சித்துப் பார்த்தல்; இந்தப் பரிட்சார்த்தத்தின் போது முயல்களின் கண்களில் இரசாயனப் பொருட்கள் விடப்படுகின்றன. இதன் விளைவாக ஒவ்வொரு வருடத்திலும் ஆயிரக் கணக்கான முயல்கள் பலியாகின்றன) தொடக்கம் (இலங்கையை உள்ளிட்ட நாடுகளில்) ஆடு, மாடு வெட்டும் கூடங்களில் அநாவசியமான விதத்தில் மிகவும் கொடூரமான வழிமுறைகளை உபயோகித்து விலங்குகளை உணவுக்காக வெட்டும் வெறுக்கத்தக்க நடைமுறை வரையில் இவை விரிந்து செல்கின்றன.

உலகில் எந்த ஒரு பிரதான மதமும், விலங்குகளை கொடுமைப் படுத்துவதனை அனுமதிக்கவில்லை. ஆனாலும், கொடுமைகள் தினமும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. "அனைத்துப் பிராணிகளும், தம்மீது கொடுமை இழைக்கப்படும் பொழுது கலக்கமடைகின்றன; அனைத்துப் பிராணிகளும் மரணத்தைக் கண்டு அச்சம் கொள்கின்றன. உங்களையே நீங்கள் உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள்; கொடுமைகளை இழைக்காதீர்கள். உயிர்க்கொலை புரியாதீர்கள்" என்கிறது தம்மபதம். "நாங்கள் (அதாவது, பூமியில் வாழும் அனைத்துப் பிராணிகளும்) இறைவனின் சிருஷ்டிகளாகும்" என்கிறார் புனித பிரான்சிஸ். "உயிருள்ள ஒரு பிராணி மீது இரக்கம் காட்டுபவர்களுக்கு நிச்சயமாக மறுமையில் ஈடேற்றம் கிட்டுகிறது" என திருத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். பிராணிகளை நாம் பராமரிக்கும் விதம் தனிநபர்களின் (அவர்களது மத நம்பிக்கைகள் அல்லது மத நம்பிக்கை இன்மை என்பன என்னவாக இருந்த போதிலும்) அக்கறைக்கு மட்டும் உரிய ஒரு விடயமல்ல; மாறாக, முழு மனித சமுதாயமும் இந்த விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது. "ஒரு சமூகத்தின் பண்பட்ட இயல்பினை, அச்சமூகம், பிராணிகள் மீது காட்டும் அன்பு, கருணை, அக்கறை என்பவற்றிலிருந்து மதிப்பிட்டுக் கொள்ள முடியும்" என மகாத்மா காந்தி மிகவும் பொருத்தமாகவே கூறியுள்ளார்.

தொடக்கத்திலேயே, நாங்கள் ஒரு விஷயத்தை மிகவும் தெளிவாக இங்கு எடுத்துக் கூற வேண்டியுள்ளது. அதாவது, இந்த இதழின் நோக்கம் முற்று முழுதான புலால் மறுப்புக்கான போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதோ அல்லது குறிப்பிட்ட சில மாமிச வகைகளை புசிப்பதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என வாதாடுவதோ அல்ல என்பதே அந்த விடயமாகும். இது ஒரு தனி நபரின் மனச்சாட்சியின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம் என்பதே எமது கருத்தாகும். மாறாக, மனிதர்கள் விலங்குகளை அணுகும் விதத்தில் ஓரளவுக்கு மாற்றத்தை எடுத்துவரச் செய்வதும், இந்த விடயம் தொடர்பாக இலங்கையில் வாழும் எமக்கு முக்கியத்துவம் பொருந்தியதாக உள்ள குறிப்பிட்ட சில பிரச்சினைகளை வாசகர்கள் முன் வைப்பதுமே இந்த இதழின் நோக்கமாக உள்ளது.

இவற்றில் முதலாவது விடயம், இலங்கையின் ஆடு, மாடு வெட்டும் கூடங்களில் நிலவிவரும் வெறுக்கத்தக்க கொடூரம் சூழ்ந்த நிலைமைகளாகும். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றின் முன்னேற்றம், வெட்டப்படும் விலங்குக்கு இழைக்கப்படும் வேதனையை மிகக் குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பினை இப்போழுது அளித்துள்ளது. பல நாடுகள் மனிதாபிமானம் மிக்க ஆடு, மாடு வெட்டல் முறைகளை இப்பொழுது பின்பற்றி வருகின்றன. வெட்டப்படுவதற்கு முன்னர் விலங்கினை உணர்விழக்கச் செய்து, அதன் மூலம் சம்பந்தப்பட்ட விலங்கு வேதனையை உணராவண்ணம் வெட்டும் முறையை இப்போழுது பல நாடுகள் பின்பற்றி வருகின்றன. மேலும், உணவுக்காக வெட்டப்படும் விலங்குகள் அனுபவிக்கும் வேதனையை ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கான பல சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் இந்நாடுகள் இப்பொழுது ஏற்றுக் கொண்டுள்ளன. விலங்குகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள உலகின் பல்வேறு பாகங்களிலும் வாழும் பிரஜைகள் உணவுக்காக கொல்லப்படும் விலங்குகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளையும் எடுத்து வருகின்றார்கள்.

மாற்றங்களை எடுத்து வரும் இந்தக் காற்று, துரதிஷ்டவசமாக இலங்கையை முற்றிலுமாக தவிர்த்துச் சென்றுள்ளது போல் தோன்றுகின்றது. எமது ஆடு, மாடு வெட்டும் கூடங்களில், நாம் இன்னமும் மிகவும் கொடூரமான ஈவிரக்கமற்ற முறைகளையே பயன்படுத்தி வருகின்றோம். இது வெட்டப்படும் விலங்குகளுக்கு சொல்லொணா வேதனையை அளிப்பது மட்டுமன்றி, இறைச்சியின் தரத்திலும் கூட பாதிப்பினை ஏற்படுத்த முடியும். அதிக அளவு செலவு இல்லாமல் நவீன முறைகளை நிறுவிக் கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும், இந்த நிலைமை தொடர்ந்தும் நீடித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமையை எடுத்து வந்துள்ள காரணங்களை (அது அறியாமையாக இருந்தாலும் சரியே, அக்கறையின்மையாக, சோம்பலாக அல்லது பிறரைக் கொடுமைப்படுத்துவதில் மகிழ்ச்சியடையும் மன நிலையாக இருந்தாலும் சரியே) புறமொதுக்கி விடுவதற்கும், காருண்யத்துடன் கூடிய விலங்குகளை வெட்டும் முறைகளை அறிமுகப் படுத்துவதன் மூலம் எமது ஆடு, மாடு வெட்டும் கூடங்களை நவீனமயப்படுத்துவதற்கும் இப்பொழுது காலம் வந்துள்ளது. நாட்டின் மிகப்பெரிய ஆடு, மாடு வெட்டும் கூடங்களை நிர்வகித்து வரும் கொழும்பு மாநகர சபையே இந்த விடயத்தில் முன்னணிப் பங்கினை வகிக்க வேண்டியதாக உள்ளது.

காருண்யத்துடன் கூடிய விலங்கு வெட்டும் முறைகளை பின்பற்ற வேண்டுமென்பதனை ஆதரித்துப் பேசுவதன் மூலம் பல்வேறு பிரிவினரிடமிருந்தும் தாக்குதல்களை எதிர்கொள்ளும் நிலை எமக்கு ஏற்படும் என்பதனை நாம் நன்கு அறிவோம். விலங்குகளை உணவுக்காக வெட்டுவது என்பது ஒரு போதுமே காருண்யம்

(32 பக்கம் பார்க்க)

மலர் 19 இதழ் 4 ஜூலை 1993

# பொருளியல் நோக்கு

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 2.
இலங்கை.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவுகளையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-[illegible]

## உள்ளே

### விசேஷ அறிக்கை

### விலங்குரிமைகள்


| | | |
|---|---|---|
| ஹென்றி ஸ்பைரா | 2 | விலங்குரிமைகள் : மலர்ந்து வரும் ஒரு புரட்சி |
| ஜோர்ஜ் கொடிதுவக்கு | 5 | விஷவாயு அடிப்பதற்கு பதிலாக மாற்று வழிகள் |
| நந்தன அத்தபத்து | 7 | வாயில்லாப் பிராணிகளுக்கு மனிதன் இழைத்து வரும் கொடுமைகள் |
| டி. எச் பாலசந்திர | 9 | விலங்குகளுக்கும் உரிமைகள் உண்டு |
| மல்லிகா பெரேரா | 12 | விலங்குகளை கொடுமைப்படுத்துவதனை தடுத்தல் |
| பிலிப் நுகூச்சி | 14 | புற்றுநோய் ஆராய்ச்சியில் விலங்குகளைப் பயன்படுத்து வதற்கு பதிலான மாற்றுவழிகள் |
| ஜெரி மேசன் | 16 | சித்ரா பெஸ்பரோடா : கைவிடப்பட்ட விலங்குகளின் தோழி |
| ஜோன் பெற்றிஸியானி<br>எதல் தேர்ஸடன் | 18 | ஒழுங்குவிதிகளா? அல்லது மாற்று ஆராய்ச்சியா? |
| ஜோர்ஜ் பெரேரா | 22 | பணவீக்கமும் ஏற்றுமதித் துறையின் செயற்பாடும் |
| பீ. ஸ்டீவன் பெர்னாண்டோ | 26 | சனசக்தி வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் |
| எஸ். அன்ரனி நோபேர்ட் | 30 | கடலில் எண்ணெய் மாசுபடல் |


வாசகர் கவனத்துக்கு

"பொருளியல் நோக்கு" (மலர் 1 இதழ் 2/3) மே/ஜூன் 1993 இரட்டை இதழ் வெளியிடப்படவில்லை என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

புகைப்படங்கள் உதவி :
"கல்காவ மித்துரோ"
திரு. பந்து குணரத்ன

அட்டைப்படம் வடிவமைப்பு :
நிர்மல குணவிக்கும்

# விலங்குகளின் உரிமைகள்: மலர்ந்து வரும் ஒரு புரட்சி

ஹென்றி ஸ்பைரா

ஹென்றி ஸ்பைரா இன்றைய உலகின் முன்னணி விலங்குரிமை ஆதரவாளர்களில் ஒருவராவார். அவர் கடந்த பதினைந்து வருட காலமாக ஐக்கிய அமெரிக்காவில் விலங்கு விடுதலைத் துறையில் மிகுந்த செயல் முனைப்புடன் இயங்கி வருகின்றார். அவரும் அவர் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு வரும் விலங்குரிமைகள் தொடர்பான சர்வதேச கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் பிராணிகளைப் பயன்படுத்தி வருவோருடன் நேரடியாகப் பல மோதல்களில் ஈடுபட்டு வந்திருப்பதுடன், கணிசமான அளவில் வெற்றிகளையும் ஈட்டி வந்துள்ளனர். உதாரணமாக, பூனைகளின் பாலியல் செயற்திறனை அவதானிக்கும் பொருட்டு, வேண்டுமென்றே அவற்றின் உடல்களைச் சிதைக்கும் பரீட்சார்த்தம் அமெரிக்க அருங்காட்சியகத்தினால் சுமார் 20 வருடகாலம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. விஞ்ஞானத்தின் அநாவசியமான இந்தக் குரூரத்தினை தடுத்து நிறுத்துவதற்காக அவர் மேற்கொண்டு வந்த இடையறாத போராட்டங்களின் விளைவாக, இறுதியில் இப்பரீட்சார்த்த முறை நிறுத்தப்பட்டது.

நான் எனது சிறுபிராயத்திலிருந்தே போக்கிடமற்ற அப்பாவிகளின் பக்கம் சார்ந்தவனாகவே இருந்து வந்துள்ளேன். எனது பிந்திய முப்பதுகளின் போது ஐரோப்பாவுக்குச் சென்ற ஒரு சிநேகிதி அவருடைய பூனையை என்னிடம் விட்டுச் சென்றார். அது, நான் நட்புக் கொண்ட முதல் பிராணியாகும். ஒருபுறத்தில் ஒரு செல்லப் பிராணியைக் கொஞ்சிக்கொண்டு, மறுபுறத்தில், ஒரு பிராணியின் இறைச்சியை புசிப்பது ஓர் உசிதமான செயலாக எனக்குத் தோன்றவில்லை. அதன் பின்னர், விலங்குகளின் விடுதலை தொடர்பாக பீட்டர் சிங்கர் என்பவர் எழுதிய கட்டுரையை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தக் கட்டுரையில், ஏனையோருக்குத் தீங்கு விளைவிப்பது மிகத் தவறானது என்றும், எந்த விலங்குகளுக்கு தீங்கு இழைக்க முடியும், எந்த விலங்குகளுக்கு தீங்கு இழைக்கக் கூடாது என்பது தொடர்பாக முடிவெடுக்கும் உரிமை எமக்கு இல்லை என்றும் அவர் வாதிட்டிருந்தார். எமது நாகரிகத்தின் தலை சிறந்த பாரம்பரியமாக இருந்து வரும் "பிறர் குறித்து அன்பும் அக்கறையும் காட்டுதல்" என்ற விடயத்துடன் அவருடைய கருத்துக்கள் பொருந்திச் செல்வனவாக இருந்தன. இது நீதி நியாயம் சார்ந்த ஒரு விடயமே தவிர, உணர்வு சார்ந்த ஒரு விடயமாக இருக்கவில்லை.

மனிதர்களுக்கும் மனிதர் அல்லாத பிராணிகளுக்கும் இடையே ஒன்றாக இணைக்கப்பட முடியாத இடைவெளி எதுவும் இல்லை என்பதனை பூனைகளுடனும் நாய்களுடனும் நன்கு பழகியுள்ளவர்கள் அறிவார்கள். பொதுவான பல உணர்ச்சிகள் இவ்விரு தரப்பினருக்கும் இருந்து வருகின்றன. இந்தப் பிராணிகள், எம்மைப் போலவே வேதனையையும், நோவினையும் தவிர்த்துக் கொள்ளவே விரும்புகின்றன; இந்த வாழ்க்கையிலிருந்து ஓரளவு சந்தோசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவை விரும்புகின்றன. அதாவது, தீங்கிழைக்கப்படாதிருக்கும் உரிமையையும், தனது சொந்த சந்தோசத்தை அனுபவிக்கும் உரிமையையும் இது திருஷ்டாந்தப்படுத்துகின்றது. "அவற்றுக்கு நல்லனவற்றையும் தீயனவற்றையும் பகுத்தாராய முடியுமா? அல்லது வாய் பேச முடியுமா? என்பதல்ல இங்குள்ள பிரச்சினை; அவை வேதனையடைய முடியுமா? என்பதே இங்குள்ள கேள்வியாகும்" என ஜெரமி பெந்தம் சரியாகவே சுட்டிக் காட்டியிருந்தார்.

எனவே, உடல் வேதனை என்று வரும் பொழுது மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையில் எத்தகைய வித்தியாசமும் இருப்பதில்லை. பிறிதொரு பிராணியின் உடல் மீதும் உள்ளத்தின் மீதும் உரிமை கொண்டாடுவதற்கும் ஆதிக்கம் செலுத்துவதற்கும் நாம் யார்? இங்கு நாங்கள்

"மக்கள் குறிப்பிட்ட ஒரு நேரத்தில், குறிப்பிட்ட ஒரு அளவிலான மாற்றங்களை மட்டுமே ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருந்து வருகின்றார்கள். .......... இன்று முடியுமானவற்றை இன்று நாம் மேற்கொள்வோம். கால ஓட்டத்தின் போது, நாளைய தினத்தில் இன்னும் அதிகமான மாற்றங்களை நாம் எடுத்து வருவோம்."

– ஹென்றி ஸ்பைரா

காருண்யம் குறித்துப் பேசவில்லை. நியாயமான முறையில் எழுப்பப்படக் கூடிய மிகச் சரியான ஒரு கோரிக்கை குறித்தே நாம் பேசுகின்றோம். பச்சிளம் பாலகர்களும் வயது முதிர்ந்தோரும் எவ்விதமான தற்காப்புக்களும் அற்றவர்களாக இருந்து வருவதனால் அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைப் பார்த்து நாங்கள் அதிர்ச்சி அடைகின்றோம். பிராணிகளும் இதே வகையைச் சேர்ந்த ஜீவன்களாகவே இருந்து வருகின்றன. விலங்குகளின் உரிமைகளுக்கு ஆதவாகப் போராடுவதென்பது, ஒரு கொள்கை நெறியாக இருந்து வருகின்றது. எவ்வகையிலும் தம்மைத் தற்காத்துக் கொள்ள முடியாத நிலையிலிருந்து வரும் அப்பாவி விலங்குகள் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்கும், விஞ்ஞானப் பரீட்சார்த்தங்கள் என்ற பெயரில் அவற்றைக் கொடுமைப்படுத்துவதற்கும், அவற்றை உணவு மேசைக்கு எடுத்து வருவதற்கும் அனுமதிக்கும் விஷயத்தில் நாம் இன்னின்ன விலங்குகளை அனுமதிக்க முடியும், இன்னின்ன விலங்குகளை அனுமதிக்க முடியாது என்ற ஒரு தெரிவு அடிப்படையில் செயற்பட முடியாது.

> "ஒரு சமூகத்தின் பண்பட்ட தன்மையை, விலங்குகள் மீது அது காட்டி வரும் அன்பு, கருணை மற்றும் அக்கறை என்பவற்றிலிருந்து மதிப்பிட்டுக் கொள்ள முடியும்."
>
> – மகாத்மா காந்தி

சமூகப் போராட்டங்களில் நான் மிகுந்த முனைப்புடன் ஈடுபட்டிருந்த தசாப்தங்களில் என்னை உந்தித் தள்ளிய உந்து விசை, "எனது உரிமைகளைப் பறித்து யாரும் என்னை அடிமைப்படுத்த முடியாது" என்பதாகும். இதே போல ஏனையவர்களை அடிமைப்படுத்துவதனையும் நான் விரும்பவில்லை. என்னைப் பொறுத்தவரையில், விலங்குகளின் விடுதலை என்பது மனித, விடுதலையின் ஒரு நீட்சியாகவே தோன்றுகின்றது. விலங்கு விடுதலை ஆதரவாளர்கள், (மனிதனை உள்ளிட்ட) அனைத்துப் பிராணிகளுக்கும் சிறப்பான ஒரு வாழ்க்கைத் தரம் அமைய வேண்டுமென்பதிலேயே கரிசனை கொண்டுள்ளார்கள். எதிர்ப்புச் சக்தி எதுவுமற்ற, எளிதில் ஊறுபடத்தக்க, ஒடுக்கப்பட்ட, மனிதனின் மேலாதிக்கத்தின் கீழ் துன்புறும் அனைத்து விதமான பிராணிகளுடனும் நாம் எம்மை இனங்கண்டு கொள்கிறோம். மனிதன் அல்லாத பிராணிகளே மிகப் பரந்த அளவில், மிகச் செறிவான முறையில், முறையான ஓர் ஒழுங்கில் அனைத்துக்கும் மேலாக அனைவரினாலும் சமூகரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விதத்தில் சொல்லொணாக் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் ஐக்கிய அமெரிக்காவில் சுமார் 5 கோடி விலங்குகள், ஆராய்ச்சிக்காகவும் பரீட்சார்த்தங்களுக்காகவும் கல்விப் போதனைக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 600 கோடி விலங்குகள், அவை இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கு முன்னர் நரக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இங்குள்ள அடிப்படைப் பிரச்சினை, விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதன் மூலம் சந்தோசப்படும் வக்கிர புத்தி படைத்த ஒரு சில நபர்கள் குறித்ததல்ல; விலங்குகளை உணவுப் பொருட்களாகவும், ஆய்வுகூடக் கருவிகளாகவும் கருதி வரும் எமது சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பே இங்குள்ள மூலாதாரப் பிரச்சினையாகும். விலங்குகளின் துன்பங்கள் பொருட்படுத்தக் கூடியவை என்ற வகையில் இப்பொழுது பரவலான ஒரு அங்கீகாரம் ஏற்பட்டுள்ள போதிலும், உலகளாவிய ரீதியில் விலங்குகள் மீது இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளையும், வேதனைகளையும் குறைத்து விடுவதற்கு அது இன்னும் முக்கியமான பங்களிப்பு எதனையும் நல்கிவிட வில்லை. ஆண்டுதோறும் பண்ணைகளில் இறைச்சிக்காக வெட்டப்படும் சுமார் 600 கோடி விலங்குகள் தொடர்பாக அது எந்த விதமான சாதகமான தாக்கத்தையும் எடுத்து வந்திருப்பதாகத் தெரியவில்லை.

இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? மிகத் தாக்கமான சமூகப் போராட்டங்களின் அடிச்சரடாக ஓடும் மாதிரிகள் எவை?

அதிகாரக் கட்டமைப்பினால உருவாக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குள் ஒருவர் மிகக் கண்ணியமான முறையில் தனது போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் மட்டும், எத்தகைய உரிமைப் போராட்டங்களும் வெற்றி கொள்ளப்படவில்லை என்பதனையும், அத்தகைய போராட்டங்களுக்கூடாக முக்கியமான சீர்திருத்தங்கள் எவையும் சாதித்துக் கொள்ளப்படவில்லை என்பதனையும் அனுபவம் காட்டுகிறது. இதற்கான காரணம் மிக வெளிப்படையானதாகும். அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள், வெளியில் இருப்பவர்கள் தமது அதிகாரத்தை எடுத்துக் கொள்ளக்கூடிய விதத்தில் அல்லது தம்முடன் சேர்ந்து அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் விதிமுறைகளை வகுத்துக் கொள்வதில்லை. மனித உரிமை இயக்கங்களின் போராட்டங்களின் போது மிகவும் தாக்கமானவையாக இருந்து வந்திருக்கும் வழிமுறைகளின் அடிப்படையிலேயே நாம் எமது உத்திகளை வகுத்துக் கொண்டுள்ளோம்.

## அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்

எமது முதல் இலக்கு நிவ்யோர்க் நகரில் அமைந்திருந்த கீர்த்தி மிக்க அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகமாகவே இருந்தது. இந்த நிறுவனம், தொடர்ச்சியாக சுமார் 20 வருட காலமாக பூனைகளின் பாலுணர்வு முறைகள் குறித்த மிகக் கொடூரமான (பயனற்றது என நாம் கருதிய) பரீட்சார்த்தங்களை மேற்கொண்டிருந்தது. நாங்கள், 1975ல் தகவல்களைப் பெறும் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டத்தின் கீழ், இந்தப் பரீட்சார்த்தங்கள் குறித்த அனைத்து விதமான செய்திட்ட யோசனைகள், முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றைப் பெற்றுத் தருமாறு விடுத்த ஒரு வேண்டுகோளுடன் எமது போராட்டத்தினை ஆரம்பித்தோம். இந்த ஆவணங்களைப் பெற்றுக் கொண்ட நிலையில், அருங்காட்சியக அதிகாரிகளுடன் இந்த விடயம் தொடர்பாக பேச்சு வார்த்தைகளை நடத்த முயற்சித்தோம். ஆனால், எம்முடன் பேசுவதற்கு அவர்கள் மறுத்து விட்டார்கள்.

இந்தத் தடையினை எதிர்கொண்ட நாங்கள், அருங்காட்சியகத்தின் ஆவணங்களை மிகப் பரவலாகச் சுற்றில் விடத் தொடங்கினோம். இந்த ஆவணங்கள், பூனைகளின் பாலியல் செயற்றிறனை அவதானித்து, அதன் மூலம் இந்தத் தகவலினை மனித அனுபவத்திற்கு மாற்றும் பொருட்டு பூனைகளின் மூளைகளின் குறிப்பிட்ட பாகங்களை அகற்றுவதன் மூலம் அந்த அப்பாவிப் பிராணிகளை குருடாக்குவதற்கும், செவிடாக்குவதற்கும் அவற்றின் வாசனை உணர்வினை, அழித்துவிடுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தெளிவாக எடுத்துக் காட்டின. இந்த வகையான ஆராய்ச்சி முயற்சிகள் மனிதனுக்கு எத்தகைய நிவாரணத்தையும் அளிக்காத அதே வேளையில், விஞ்ஞானத்துக்கு ஓர் அவப்பெயரை மட்டுமே

எடுத்து வருகின்றன என்ற விடயத்தை நாம் சுட்டிக் காட்டினோம். சுமார் 18 மாத காலமாக ஒவ்வொரு வார இறுதியிலும் அருங்காட்சியகத்துக்கு வெளியே நின்று நாங்கள் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தோம்.

அருங்காட்சியகம் எமது வேண்டுகோளுக்கு இணங்க மறுத்த போதிலும், 121 காங்கிரஸ் உறுப்பினர்கள், இந்தப் பரிசோதனைகளை தேசிய சுகாதார நிறுவனம் நிதிப்படுத்துவது குறித்துக் கேள்வி எழுப்பிய பொழுது நிர்ப்பந்தம் அதிகமாகியது. மேலும், எமது போராட்டத்துக்கு ஆதரவான ஓர் அறிக்கை "சயன்ஸ்" சஞ்சிகையில் 1976ம் ஆண்டு வெளியிடப்பட்டது. தேசிய சுகாதார நிறுவனம் இந்தப் பரிசோதனைகளுக்கான நிதிப்படுத்தலை நிறுத்தியதை அடுத்து, இந்த ஆய்வுகூடம் ஒழிக்கப்பட்டது. எமது எதிர்ப்பு பூனைகளை நோவிலிருந்தும் வேதனையிலிருந்தும் காப்பாற்றியது. மேலும், கணிசமானளவில் பெறுபேறுகளைப் பெறமுடியாத சந்தர்ப்பங்களில், ஆராய்ச்சியின் பெயரால் விலங்குகளை வதைக்கும் ஆராய்ச்சியாளர்கள் பொதுமக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்ற செய்தியையும் இது முன் வைத்தது.

எமது இந்தப் போராட்டத்தின் போது, விலங்குகளை உபயோகப்படுத்தாமல் பாதுகாப்புப் பரீட்சார்த்த முறைகளை கண்டறிவதற்கான அவற்றின் விஞ்ஞான ஆற்றல்களை பயன்படுத்துமாறு இந்த வட்டாரங்களிடம் நாம் வேண்டுகோள் விடுத்தோம்.

### "டிரேய்ஸி" பரிசோதனை

இரசாயனப் பொருட்களின் தீங்கின் அளவினை அளவிடுவதற்கு உயிருள்ள முயல்களின் கண்களில் அவற்றைச் செலுத்தி, அதனால் ஏற்படும் சேதத்தை அறிந்து கொள்ளும் பரீட்சார்த்தத்துக்குப் பதிலாக விலங்குகள் சம்பந்தப்படாத மாற்று ஆராய்ச்சி வழிமுறைகளை உபயோகப்படுத்துவது பயனுள்ளதாக இருக்குமென பிந்திய 1970 களில் பிரிட்டிஷ் ஆராய்ச்சிப் பாதுகாப்புக் கழகத்தின் தலைவரான டேவிட் ஸ்மித் தெரிவித்திருந்தார். விஞ்ஞான சமூகத்தின் தலைவர்களில் ஒருவரிடமிருந்து வந்த இந்த யோசனையை அடிப்படையாகக் கொண்டு, ஒப்பனைப் பொருட்கள் கைத்தொழிலின் ஜாம்பவான் நிறுவனமான "ரெவ்லன்" கம்பனியிடம் "டிரேய்ஸி" பரிசோதனைக்குப் பதிலாக மாற்றுப் பரிசோதனைகளைக் கண்டறியுமாறு நாங்கள் வேண்டுகோள் விடுத்தோம்.

முதலில் "ரெவ்லன்" நிறுவனம் இந்த விஷயத்தில் அதிக ஆர்வம் காட்டவில்லை. அதன் பின்னர், நாங்கள், "அழகின் பெயரில் "ரெவ்லன்" எத்தனை முயல்களை குருடாக்கி வருகின்றது" என்ற தலைப்பிலான முழுப்பக்க விளம்பரங்களை வெளியிட்டோம். அத்துடன், "டிரேய்ஸி" பரிசோதனையின் புகைப்படங்களையும் பரவலாக விநியோகம் செய்தோம். இதனையடுத்து, இதற்கு எதிரான பொது மக்களின் கோபம் கிளர்ந்தெழுந்தது. ஒருவருட காலத்துக்குள், "மாற்றம் தவிர்க்க முடியாதது" என்பதனை உணர்ந்து கொண்ட இந்த நிறுவனம், முதலாவது "டிரேய்ஸி" மாற்று ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்துக்கு நிதி வழங்கியது. அடுத்து, இரண்டாவது மிகப் பெரிய ஒப்பனைப் பொருள் உற்பத்திக் கம்பனியான "அவென்" நிறுவனத்தை அணுகினோம். இந்நிறுவனம், ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் விலங்குகள் மீதான பரீட்சார்த்தங்களுக்குப் பதிலாக மாற்று வழிமுறைகளைக் கண்டறியும் மையமொன்றைத் துவக்கி வைப்பதற்கான ஆரம்ப நிதிகளை வழங்குவதற்கு இணங்கியது.

நாங்கள் "ரெவ்லன்" நிறுவனத்துக்குச் சவால்விடக்கூடிய விளம்பரங்களை வெளியிட்டு சுமார் பத்தாண்டுகளின் பின்னர் ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டது. அந்நிறுவனம், நூறு சத வீதம் விலங்குகள் மீது பரீட்சார்த்தம் நடாத்தப்படாத தனது ஒப்பனைப் பொருட்கள் தொடர்பான முழுப்பக்க விளம்பரங்களை மகளிர் சஞ்சிகைகளில் 1990 ஏப்ரலில் வெளியிட்டது.

> *"உற்பத்திப் பொருட்களும் அவற்றின் ஆக்கக் கூறுகளும் மனிதர்களின் உபயோகத்துக்கு பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்துவதற்கு இப்பொழுது பல சிறந்த வழிகள் இருக்கின்றன. அவ்வாறிருக்கையில், ஆயிரக்கணக்கான உயிரினங்கள் துன்புறுவதற்கு மனிதனின் தற்பெருமை காரணமாக அமைவது திகைப்பூட்டுவதாகும்."*
>
> *- அனிட்டா றொடிக்ட்*

இந்த மாற்றுவழி ஆராய்ச்சி வழிமுறைகளை மேம்படுத்துவதில் முன்னணிப் பங்கினை வகித்து வந்த புறொக்டர் அன்ட் கெம்பல் என்ற நிறுவனம், மாற்றுவழிமுறைகளைக் கண்டறிவதற்காக 1986 தொடக்கம் சுமார் 1 கோடி 40 இலட்சம் டொலர்களை செலவிட்டு வந்துள்ளது. இந்த அமைப்பைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மாற்றுவழிமுறைகள் குறித்த நூற்றுக்குமதிகமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர். ஹொப்மன் - லாரோச் நிறுவனம் சுமார் ஏழு வருடகாலத்தில், விலங்குகளை ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்துவதனை 67 சத வீதத்தால் குறைத்துக் கொண்டுள்ளது.

ஓர் ஆராய்ச்சிப் பரிசோதனைக்கு விலங்குகளை உபயோகப்படுத்துவதற்கு முன்னர், ஆராய்ச்சியாளர்கள், உண்மையிலேயே இந்த ஆராய்ச்சி அவசியமானதுதானா? விலங்குகளைப் பயன்படுத்தாமல் இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதா? போன்ற கேள்விகளை தமக்குத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டுமென நாம் யோசனை தெரிவித்திருந்தோம். மேலும், ஆய்வுகூடங்களில் விலங்குகளைப் பயன்படுத்துவோர் (1) விலங்குகளுக்குப் பதிலாக வேறு மாற்று முறையொன்றை பயன்படுத்த வேண்டுமென்றும்; (2) பயன்படுத்தப்படும் விலங்குகளின் எண்ணிக்கையை குறைத்து விட வேண்டுமென்றும்; அல்லது (3) விலங்குகள் படும் வேதனையை குறைத்து விடக் கூடிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்றும் 1959ல் வெளியிடப்பட்ட "காருண்யத்துடன் கூடிய பரிசோதனை நுட்பங்கள் தொடர்பான கோட்பாடுகள்" என்ற நூலில் முதன்முதலில் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது.

### வருங்காலம்

கடந்த தசாப்தத்தின் போது விலங்குரிமைகள் ஒரு முக்கியமான பிரச்சினையாகக் கவனத்திலெடுக்கப்பட்டு வந்திருப்பதுடன், தொடர்புச்சாதனத் துறைகளின் கவனத்தையும் இந்த விடயம் அதிகளவுக்கு ஈர்த்து வந்துள்ளது. மேலும், பொதுமக்களிடையேயும் விலங்கு உரிமைகள் தொடர்பாக ஒரு புதிய விழிப்புணர்ச்சி தோன்றியுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் ஆண்டுதோறும் கசாப்புக் கடைக்குச் செல்லும் சுமார் 600 கோடி விலங்குகளின் உரிமைகளுக்காகப் போராட வேண்டிய தருணம் இப்பொழுது வந்துள்ளதாக நாம் நம்புகிறோம். நாங்கள் முன்சொன்ன மூன்று வழிமுறைகளையும், விலங்குணவுக் கைத்தொழிலின் மீது பிரயோகிப்பதன் மூலம் இதனை மேற்கொள்ள முடியும்.

சமூகத்தினை, புலால் மறுப்பு உணவு மாதிரியொன்றைப் பின்பற்றும் சமூகமொன்றாக நாம் நிலைமாற்றம் செய்ய வேண்டுமென்பதனை எம்மில் பலர் விரும்பும் அதேவேளையில், மக்களின் உணவுப் பழக்கங்கள் மிக மெதுவாகவே மாற்றம் கண்டு வருகின்றன என்ற உண்மையையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இந்தக் கணத்தில், பல கோடிக்கணக்கான பண்ணை விலங்குகள் மரண வேதனையில் துன்புற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இந்த வகையில், புலால் அல்லாத

(13 பக்கம் பார்க்க)

# காஸ் அடிப்பதற்குப் பதிலான செலவு குறைந்த மாற்று வழிகள்

ஜோர்ஜ் கொடிதுவக்கு

*பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னைய உபவேந்தர் பேராசிரியர் ஜோர்ஜ் கொடிதுவக்கு இலங்கை மிருகவைத்தியர்களில் மூத்தவராவர்*



மிருகங்களைச் செல்லமாக வளர்ப்பவர்கள் அறிந்திருக்க வேண்டிய நாய், பூனை நோய்கள் பலவுண்டு. இவற்றுக்கு எதிராக அவர்கள் முன்னெச்சரிக்கையாகத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இவற்றுள் விசர் நாய்க்கடி, மனக் கோளாறு, பார்வோ, லெப்டோபைரோசிஸ் என்பன குறிப்பிடத்தக்கவை. விசர் நாய்க்கடி போன்றவற்றால் மனிதருக்கு மரணம் சம்பவிக்கலாம். எனவே நீங்கள் செல்லமாக வளர்க்கும் மிருகங்ளுக்கு உரிய காலத்தில் ஊசி மருந்து எற்றுவது முக்கியமானதாகும்.

துரதிஷ்டவசமாக பலருக்கு இந்நோய்கள் பற்றித் தெரியாது. அவர்கள் தம் செல்ல மிருகங்களுக்கு ஊசி மருந்தேற்றத் தவறுவது மட்டுமன்றி, நோயுற்ற மிருகத்தைத் தொடக்கத்திலேயே மருத்துவரிடம் கொண்டு சென்று சிகிச்சையளிப்பதுமில்லை. அவ்வாறு சிகிச்சை செய்தால் அவற்றைக் காப்பாற்றலாம். உதாரணமாக, மிருகங்கள் உண்ண மறுக்கும் வரை பலர் சிகிச்சையளிப்பதில்லை. ஆனால் விஷக்காய்ச்சல் போன்ற ஒரு நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு நாய் கடுமையான காய்ச்சல் இருந்தாலும் சில நாட்கள் வரை அது உணவு உண்ணும். இறுதியில் நாய் உண்பதற்கு மறுக்கும் பொழுது, சிகிச்சையளிக்கக் கொண்டு சென்றால் காலம் கடந்திருக்கும். நாய்க்கு இரத்தச் சோகை உண்டாகியிருக்கும். அந்நிலையில் சிகிச்சையளிப்பது மிகக் கடினம். பலருக்கு விசர்நாய்க்கடி பற்றித் தெரிந்திருந்தாலும், வேறு நோய்கள் பற்றித் தெரியாது. இதன் காரணமாக, மனக் கோளாறினால் அவதிப்படும் நாய்களை விசர்நாய்கடிக்கு ஊசி மருந்து ஏற்றுவதற்காக சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு வரும் சந்தர்ப்பங்களுமுண்டு. விசர் நாய்க்கடிக்குச் சிகிச்சையளித்து நாய் இறந்து விட்டால், விசர்நாய்க்கடி மருந்து பலனளிக்கவில்லை என்றோ ஊசி மருந்து ஏற்றியதனால்தான் நாய் இறக்க நேர்ந்தது என்றோ எண்ணி எதிர்காலத்தில் அத்தகைய சிகிச்சையை நாடுவதில்லை.



**இலங்கையில் இப்பொழுது வீடற்ற நாய்களை விஷவாயு அடித்துக் கொலை செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. இவ்விதமாக ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான நாய்கள் வேதனையுடன் கூடிய மரணத்தை அனுபவித்து வருகின்றன. ஒரு வீடற்ற நாய் அலைந்து திரிவதைக் காட்டும் இந்தப் புகைப்படம் இவ்வாண்டு ஜூலை மாதத்தில் கிருலபனைக்கும் நுகேகொடைக்கும் இடையில் ஓர் இடத்தில் எடுக்கப்பட்டதாகும்.**

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய ஒரு வழி பல்வேறு நோய்களைப் பற்றியும்,நோய்த் தடுப்புச் சிகிச்சை பற்றியும் நோய் அறிகுறிகள் பற்றியும் மிருகங்களை வளர்ப்பவர்களுக்கு அறிவூட் டுவதாகும். இதற்காக நாம் வானொலி, தொலைக் காட்சி, பத்திரிகைகள் முதலியவற்றைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, உலக விலங்குகள் தினத்தையொட்டி ரூபவாஹினியில் என்னைப் பேட்டி கண்டார்கள். அப்பேட்டியில் நான் கூறிய பல விடயங்களில் இதுவும் ஒன்று. சில வானொலி நிகழ்ச்சிகளிலும் நான் பங்கு பற்றினேன். மிருக 'வைத்தியர்கள் இவ்விடயங்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதிப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதும் பயனுள்ளதாகும். இவை சுருக்கமாகவும் எளிமையான மொழியிலும் எழுதப்படல் வேண்டும். இவையனைத்தும் இந்நோய்களைத் தடுப்பதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிக்கு உதவும்.

சில ஊசி மருந்துகளின் விலை மற்றொரு பிரச்சினையாகும். உதாரணமாக, மனக் கோளாறுக்குரிய ஊசி மருந்தின் விலை 100 ரூபாவாகும். பலருக்கு இவ்வளவு விலை கொடுத்து வாங்கும் வசதியில்லை.

அடுத்து கட்டாக் காலிகளாகத் திரியும் மிருகங்களைக் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. மலடாக்குவதன் மூலம் இதனைச் செய்யலாம். இதனைச் செய்வதற்கும் உரிய முறையில் அமைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. நாம் விலங்கு நலனோம்பு சங்கத்துக்காக மாதம் ஒருமுறை இலவசமாக இதனைச் செய்கிறோம். ஆனால் இது போதியதன்று. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட ஓர் எண்ணிக்கையிலான விலங்குகளுக்கு மலடாக்கும் சிகிச்சை அளிப்பதற்குரிய திட்டமொன்றை அரசாங்க மிருக வைத்தியர்கள் செயல்படுத்தலாம் என்று எண்ணுகிறேன்.

அடுத்து ஒவ்வோராண்டும் சில கட்டாக் காலி நாய்களைப் பிடித்து அடைத்துக் கொல்லுகிறார்கள். இதற்காக ஒருவகைக் காஸ் உபயோகிக்கப்படுகிறது. இதனால் எற்படும் விளைவு மிகவும் துக்ககரமானதாகும். நாய்கள் இறக்கு முன் வெகுநேரம் வேதனைப்படுகின்றன. இதற்கு மாற்றுவழியாக ஊசி மருந்தைப் பயன்படுத்தலாம். இதற்குரிய செலவு ஒரு பிரச்சினையல்ல. ஏனெனில், ஒரு ஊசி மருந்துக்கு ரூ. 20 வரை மட்டுமே செலவாகும். அல்லது நாய்களை முதலில் உணர்விழக்கச் செய்து, பின்னர் ஊசி மருந்தை எற்றலாம். இவை காஸ் அடிப்பதற்குப் பதிலான சில மாற்று வழிகள். இவற்றைப் பயன்படுத்துவது பற்றி ஆலோசிக்கலாம்.

ஆனால் மிக முக்கியமான விடயம் மிருக நோய்கள் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதாகும். நாம் பேராதனையிலிருந்த போது, கால் நடைகளுக்கும் வேறு விலங்குகளுக்கும் ஏற்படும் பல்வேறு நோய்கள் பற்றிக் கமக்காரர்களுக்கு அறிவுட்டுவதற்கான திட்டமொன்றைச் செயல்படுத்தினோம். இத் திட்டம் கிராமசேவகர்களுடன் இணைந்து அமுல் நடத்தப்பட்டது. ஒவ்வொரு முறையும், அவர்கள் குறித்த ஒரு தொகைக் கமக்காரர்களை எமது வகுப்புகளுக்கு அழைத்து வருவர். மிருக வைத்திய மாணவர்கள் சிங்களத்தில் விரிவுரை ஆற்றுவர். கமக்காரர்கள் ஊக்கத்தோடு செவி சாய்ப்பர். திட்டம் வெற்றியளித்தது. துரதிஷ்டவசமாக பல்வேறு காரணங்களால் இத் திட்டத்தைத் தொடர்ந்து அமுல் நடத்த முடியாமற் போயிற்று. இத்தகைய திட்டங்கள் இன்று தேவைப்படுகின்றன. நாம் பொதுமக்களிடம் சென்று அவர்களையும் இதில் பங்குகொள்ளச் செய்ய வேண்டும். இக்கமக்காரர்கள் எங்களுக்குத் தேவையான பாலை உற்பத்தி செய்கின்றனர். ஆனால் இவர்களுக்குத் தேவையான அறிவூட்டுவதற்கு விலங்கு வேளாண்மை, கால்நடைச் சுகாதாரக் கவனிப்பு பற்றிய விடயங்களை விளக்கும் பிரசுரங்கள் சிங்களத்திலும் தமிழிலும் போதியளவு கிடைப்பதில்லை.

# வாயில்லாப் பிராணிகளுக்கு மனிதன் இழைத்து வரும் கொடுமைகள்

டாக்டர் நந்தன அத்தபத்து

**டாக்டர் நந்தன அத்தபத்து "ஸத்வமித்ர" என்ற விலங்குப் பாதுகாப்பு அமைப்பின் ஸ்தாபக உறுப்பினரும் அதன் கால்நடை மருத்துவ ஆலோசகருமாவார்.**

ஆண்டுதோறும் சுமார் 3000 தொடக்கம் 4000 வரையிலான நாய்கள் விஷவாயுக் கூடங்களுக்கு அனுப்பப் படுகின்றன; வேறும் பல விலங்குகள் மிகவும் கொடூரமான முறையில் கொல் லப்பட்டு வருகின்றன. இந்த அநியா யங்களைத் தடுப்பதற்கு பெரும் எடுப்பில் எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரியவில்லை. அதனால் வீடற்ற நாய்களின் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அவற்றின் அளவினைக் குறைத்துவிடக் கூடிய இந்த செய்திட்டத்தை ஆரம்பிப்ப தற்கு நாம் முடிவு செய்தோம். நாங்கள் இப்பொழுது மிகச் சிறுஅளவிலேயே செயல்பட்டு வருகின்றோம். ஆனால், செல்லப் பிராணிகளை வைத்திருக்கும் அனைவரும் தமது பிராணிகளுக்கு தடுப் பூசிகளைப் போட்டுக்கொள்ள வேண்டு மென்ற முயற்சியில் நாங்கள் வெற்றி பெறக் கூடியதாக இருந்தால் பத்துவருட காலத்தில் வீடற்ற நாய்களின் எண் ணிக்கையை குறைத்துக் கொள்ளக்கூடிய தாக இருக்கும்.

## மலடாக்குதல்

ஆதரவளிப்போர் எவருமின்றி வீதிகளில் அலைந்து திரியும் நாய்கள் மற்றும் மாடுகள் போன்ற வாயில்லாப் பிராணிகளுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பு வதே எமது பிரதான நோக்கமாகும்.

இவ்விதம் அலைந்து திரியும் விலங்கு களின் எண்ணிக்கையை குறைத்துவிடும் நோக்கத்துடனேயே நாங்கள் விலங்கு மருந்தகத்தினை ஆரம்பித்தோம். ஆனால், மலடாக்கல் என்பது செலவு கூடிய ஒரு நடைமுறையாக இருந்து வருகின்றது. இதற்கு 500 தொடக்கம் 1000 ரூபா வரையில் செலவு பிடிக்கின்றது. பெரும் பாலான மக்கள் குறிப்பாக வறியோர் இந்தத் தொகையைச் செலவிடக் கூடிய நிலையில் இருக்கவில்லை. ஆனால், தமக்குத் தேவையான உணவைக் கூட பணம் கொடுத்து வாங்க முடியாத நிலையில் இருந்து வரும் சில வறிய மக்கள், இந்த அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான பணத்தை சேர்த்துக் கொண்டிருந்த சில சந்தர்ப்பங்களையும் காணக் கூடியதாக இருந்தது. முக்கிய மாக இந்த அறுவை சிகிச்சையின் முக்கியத்துவத்தை நாம் அவர்களுக்கு விளங்க வைக்கும் பொழுது, அதனை மேற்கொள்வதற்கு அவர்கள் இணங்கு கிறார்கள். மரக்கறிகளை விற்கும் ஒரு பெண்மணி தனது நகைகளை அடகு வைத்து தனது செல்லப் பிராணிக்கு அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வரு கின்றது. இந்த வகையைச் சேர்ந்த மக்களுக்கு உதவுவதே விலங்குகள் மருந்த கத்தின் குறிக்கோளாகும். இங்கிலாந்தில் விலங்கு நலன்கள் தொடர்பாகச் செயற் பட்டுவரும் ஒரு பெண்மணி எமக்குச் சிறிது பணம் தந்துதவினார். அதன் பின்னர் தான் "ஸத்வமித்திர" என்ற விலங்கு நலன்புரி தாபனத்தை அமைக் கும் எண்ணம் எமக்கு ஏற்பட்டது. இந்த அமைப்பு இன்னமும் அதன் தொடக்க கட்டத்தில் இருந்துவரும் மிகவும் சிறிய ஓர் அமைப்பாக உள்ளதுடன் 10, 15 உறுப்பினர்கள் மட்டுமே சேர்ந்துள்ளனர். ஆனால், எமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதற்கும் பொதுமக்களின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்கும் நாம் எதிர்பார்க்கிறோம்.

சமீபத்தில் நாம் ஏற்பாடு செய் திருந்த ஒரு விலங்கு மருத்துவ முகாமின் போது 6 பெண் விலங்குகள் மீது மல டாக்கல் அறுவை சிகிச்சையை மேற் கொண்டோம். அடுத்து மொரட்டுவை யில் ஒரு முகாம் நடத்துவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது. ஒரேயொரு கால் நடை மருத்துவரினால் இப்பணிகள் அனைத் தையும் மேற்கொள்ள முடியாது. எனி னும், கடந்த முறை நாங்கள் ஒரே நாளில், ஆறு அறுவைச் சிகிச்சைகளை செய்து முடித்தோம். இலவசமாக வழங்கும் சேவையை மிகச் சிறப்பான முறையில் வழங்க வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

## திமிங்கிலங்கள்

விலங்குகளுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வது மட்டும் எமது நோக்கமல்ல. விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை தடுத்து நிறுத்துவதும் எமது குறிக்கோளாக வுள்ளது. ஒரு பிராணி துன்பத்தில் தவித்துக் கொண்டிருக்கும் பொழுது நாங்கள் அதற்கு உதவ முயல்கிறோம். திமிங்கிலங்களை கொன்று விடுவது தொடர்பான விடயத்தையும் நாங்கள்

*"தனது எஜமானனின் வீட்டு வாசலருகே பட்டினியில் கிடக்கும் ஒரு நாய் அரசின் அழிவினை முன்னுணர்த்துகின்றது."*

– விலியம் பிளேக்





**எமது ஆடுமாடு வெட்டும் கூடங்களில் காலத்துக்கொவ்வாத, ஈவிரக்கமற்ற நடைமுறைகள் இன்னமும் பின்பற்றப்பட்டு வருவதுடன், அதன் காரணமாக, வெட்டப்படும் விலங்குகள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.**

கவனத்தில் எடுத்துள்ளோம். இது குறித்துப் பல தப்பெண்ணங்கள் நிலவி வருகின்றன. உதாரணமாக, திமிங்கிலங்கள், கடலில் வாழும் சிறிய மீன்களை உணவாக உட்கொண்டு வருவதனால் காலப்போக்கில் மனித நுகர்வுக்குத் தேவையான மீன் வளங்கள் அருகிப் போய்விட முடியும் என ஒரு விஞ்ஞானி குறிப்பிட்டிருந்தார். இது அர்த்தமற்ற ஒரு பொய் நம்பிக்கையாகும். எப்பொழுதுமே இயற்கையில் ஒரு சமநிலை நிலவி வருகின்றது. திமிங்கிலங்களினால் முழு உணவுத் தொகுதியையும் அழித்து விட முடியாது.

### மாடுவெட்டுதல்

இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவது குறித்து கருத்தரங்கொன்றினை ஏற்பாடு செய்வதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம். இதனை நிறுத்திவிடுமாறு நாம் அரசாங்கத்திடம் கோரப்போவதில்லை; கருணையுடன் கூடிய வெட்டும் முறைகளை அறிமுகப்படுத்தி வைக்குமாறு நாம் வேண்டிக் கொள்கிறோம். அதாவது, விலங்குகளை வசப்படுத்தும் துப்பாக்கிக் குண்டு முறையைப் பயன்படுத்தி, வெட்டுவதற்கு முன்னர் விலங்கினை உணர்விழக்கச் செய்யும் முறையை அறிமுகப்படுத்த வேண்டுமென நாம் கேட்கின்றோம். இவ்விதம் விலங்கு உணர்விழக்கச் செய்யப்படும் பொழுது, அது எத்தகைய வேதனையையும் அனுபவிப்பதில்லை."இது ஒரு செலவு கூடிய நடைமுறை" என மாநகர சபை அதிகாரிகள் கூறி வருகின்றனர். ஆனால், 'அது அவ்விதம் செலவு கூடிய ஒரு நடைமுறையல்ல; அவர்கள் இதில் ஆர்வம் காட்டுபவர்களாக இருந்தால் இத்தகைய ஒரு துப்பாக்கியை நாம் வாங்கிக் கொடுக்க முடியும். ஒரு ஆடுமாடு வெட்டும் கூடத்துக்கு ஒரு துப்பாக்கி போதுமானது. பேராதனைப் பல்கலைக் கழகம் போதனைக்கென இத்தகைய மூன்று துப்பாக்கிகளை வைத்துள்ளது. ஒரு துப்பாக்கிக்காகும் செலவு சுமார் 15,000 ரூபா வரையிலேயே உள்ளது. மாநகர சபையைப் பொறுத்தவரையில் இதனை ஒரு பெரிய தொகையாகக் கருதமுடியாது.

தற்பொழுது மாடுகளை வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் இறைச்சியின் தரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றன. இது விஞ்ஞான பூர்வமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு விலங்கு திகிலடைந்து தன் கண் முன்னால் ஏனைய விலங்குகள் வெட்டிக் கொல்லப்படும் கொடூரத்தை காணும் பொழுது அதன் உடலில் "ஹிஸ்டமின்" என்ற ஒருவித இரசாயனத் திரவம் சுரந்து சுற்றுக்கு விடப்படுகின்றது. (மனிதர்களுக்கும் கூட இது ஏற்படுகின்றது). எனவே, இந்த நிலையில், விலங்குகள் வெட்டப்படும் பொழுது இந்தத் திரவம் இரத்தத்தில் ஓடுகின்றது. அது இறைச்சியின் நிலையில் சேதத்தினை எடுத்து வருகின்றது.

### ஹலால் இறைச்சி

"ஹலால்" என்ற பதத்தின் பொருள் என்ன என்பதனை முஸ்லிம்கள் நன்கு அறிவார்கள். ஆனால், முஸ்லிம் அல்லாத பெரும்பாலானவர்கள் இது குறித்த ஒரு தெளிவான விளக்கத்தினைப் பெற்றிருக்கவில்லை. ஹலால் இறைச்சியை விரும்பி வாங்கும் முஸ்லிம் அல்லாத பெரும்பான்மையினர், "இந்த இறைச்சி சிறந்த சுகாதார நிலைமைகளின் கீழ் வெட்டப்பட்ட விலங்குகளில் இருந்து வருகின்றது" என்ற எண்ணத்திலேயே அவ்விதம் செய்கின்றார்கள். எமக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் இறைச்சி - அது ஹலால் இறைச்சியாக இருந்தாலும் சரி, அல்லது ஹலால் அல்லாத இறைச்சியாக இருந்தாலும் சரி - ஒரே விதமான சுகாதார நிலைமைகளின் கீழ் வெட்டப்படும் விலங்குகளிலிருந்தே வருகின்றது என்பதே உண்மையாகும்.

முஸ்லிம் ஒருவர், விதிக்கப்பட்டுள்ள ஓதல்களை நடாத்தி, இரத்தம் வழிந்து செல்லுமாறு விலங்கின் குரல் வளையை அறுத்து அதனை மரணிக்கச் செய்வதன் மூலம் கிடைக்கும் இறைச்சியே "ஹலால் இறைச்சி" என்று அழைக்கப்படுகின்றது. ஓதல்கள் எவையும் இன்றி முஸ்லிம் அல்லாத ஒருவரினால் அறுக்கப்பட்ட விலங்குகளிலிருந்து வரும் இறைச்சியே ஏனைய வகையைச் சேர்ந்த இறைச்சியாகும்.

விலங்கினைக் கொல்வதற்கு எந்த முறையைப் பயன்படுத்தினாலும் மொத்த இரத்தத்தினையும் விலங்கிலிருந்து வழிந்தோடச் செய்துவிட முடியாது. சுமார் 60 சதவீதமான இரத்தம் வழிந்தோடுவதுடன் 40 சதவீதமான இரத்தம் வெட்டப்பட்ட விலங்கின் உடலிலேயே தங்கிவிடும். எனவே இறைச்சியின் தரம் ஒரே விதமானதாகவே இருக்க முடியும்.

---

*"விலங்குகளை ஆய்வுகூடக் கருவிகளாகவும் உணவுப் பொருள்களாகவும் கருதுவதை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்."*

*- ஹென்றி ஸ்பைரா*

---

# விலங்குகளுக்கும் உரிமைகள் உண்டு

டி. எச். பாலச்சந்திர

திரு. பாலசந்திர "கல்காவ மித்துரோ" (வண்டியிழுக்கும் மாடுகளின் நண்பர்கள்) என்ற அமைப்பின் தலைவராக இருந்து வருகிறார். இந்த அமைப்பு 1982ல் நிறுவப்பட்டது. விலங்குகளுக்கு (குறிப்பாக வண்டி யிழுக்கும் எருதுகளுக்கு) இழைக்கப்பட்டு வரும் சித்திரவதைகளையும் கொடுமைகளையும் தடுத்து நிறுத்துவதே இதன் நோக்கமாகும். இது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமொன்றாக உள்ளது.

மனிதர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய உரிமைகள் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை ஐ.நா.மன்றமும் அங்கீகரித்துள்ளது. ஆனால், விலங்குகளின் உரிமைகள் தொடர்பாக இலங்கையில் தற்பொழுது நிலவிவரும் சட்டங்கள் அனைத்தும் தொடர்பற்றவையாகவும், காலாவதியானவையாகவும் இருந்து வருவதுடன், அவை அனுஷ்டிக்கப்படுவதுமில்லை; அமுல் செய்யப்படுவதுமில்லை. கசாப்பு (அதாவது, ஆடுமாடு வெட்டும் கூடங்கள் எவ்வாறு பராமரிக்கப்படுதல் வேண்டுமென்பது குறித்த) கட்டளைச் சட்டம், விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதனை தடுக்கும் கட்டளைச் சட்டம், எருமை மாடுகளை பாதுகாக்கும் கட்டளைச் சட்டம், (விலங்குகளினால் இழுக்கப்படும் வண்டிகள் சம்பந்தப்பட்ட) வாகனங்கள் கட்டளைச் சட்டம் போன்றவற்றை இவை உள்ளடக்குகின்றன. இந்தச் சட்டங்கள் அனைத்தும் அநேகமாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட சட்டவாக்கங்களாகவே உள்ளன. கடந்த ஆறு ஏழு வருட காலமாக, இச்சட்டங்களை மாற்றியமைக்கக் கோரியும், சர்வதேச தர நிர்ணயங்களுக்கு இணையான விதத்தில் அவற்றை எடுத்துவர வேண்டிய தேவையை வலியுறுத்தியும் நாங்கள் போராடி வந்துள்ளோம். இறுதியில், அரசாங்கம் இதற்கு இணக்கம் தெரிவித்தது. சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் நாங்கள் ஜனாதிபதியிடம் மிகப் பிரமாண்டமான மனுவொன்றினைக் கையளித்தோம். அவர் அதனை உள்நாட்டு அமைச்சுக்கு நெறிப்படுத்தியுள்ள

உணர்விழக்கச் செய்வதனால் விலங்கு இறக்காதவரை, அவ்வாறு செய்து அறுப்பது இஸ்லாம் மார்க்கத்துக்கு எவ்வகையிலும் முரணானதல்ல. ஒரு விலங்கு உயிருடனிருக்கையில் அதனை அறுப்பது முற்றிலும் சட்ட முறையானது என்று இஸ்லாம் கூறுகிறது. "இல்லாமா ஸக்கைதும்" அதாவது "நீங்கள் கொல்வதைத் தவிர" என்று குர்ஆன் கூறுகிறது.

மறுபுறம், உயிருடன் இருக்கையில் ஒரு மிருகத்தை அறுப்பதனால் இரத்தம் வழிந்தோடுகிறது. அவ்வாறு செய்ய வேண்டும் என்பதே சட்டத்தின் தேவைப்பாடு. உணர்விழக்கச் செய்வதனால் மிருகம் வேதனையடைகிறது என்றால் அது நிச்சயம் தடை செய்யப்பட்டதாகும். ஆனால், அறுப்பதனால் ஏற்படும் வேதனையைத் தடுப்பதற்காக அவ்வாறு செய்யப்படுமானால் நிச்சயம் அது செய்யப்பட வேண்டியதும் போற்றத்தக்கதுமாகும்.

அறுப்பதை இலகுவாக்குவதற்குரிய நோவில்லாத எம்முறையும் விரும்பத்தக்கதாகும். "படைப்புகள் மீது கருணை காட்ட வேண்டும் என்று ஒவ்வொரு முஸ்லிமும் வேண்டப்படுகிறார்; கொல்லும் பொழுது நீங்கள் கருணை காட்ட வேண்டும்; அறுக்கும் பொழுது மென்மையாக அறுக்க வேண்டும்; கத்தியை நன்றாகத் தீட்டிக் கொள்வதுடன் அறுக்கப்படும் மிருகத்துக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்" என்பது நாயக வாக்கு.

(ஒப்பம்) செய்க் அமீன் அல் கோலி

அங்கீகரிக்கப்பட்டது.

(ஒப்பம்) செய்க் முஹம்மத் அபிபி (ஒப்பம்) அலி அல் கிலானி


(ஒப்பம்) செய்க் முனீர் அல் ஹிலாலி தலைமை ஆசிரியர், காடிஸ் பாடசாலை.

துடன், அந்த அமைச்சு இப்பொழுது புதிய சட்டவாக்கங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றது.

அரசாங்கம், காருண்யத்துடன் கூடிய ஆடு, மாடு வெட்டும் முறைகளை அறிமுகம் செய்துவைக்க வேண்டுமென்றும் நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளோம். வெளிநாடுகளிலுள்ள சில இஸ்லாமிய சமய நிறுவனங்கள் கூட இந்த காருண்யத்துடன் கூடிய ஆடு, மாடு வெட்டும் முறைகள் இஸ்லாமிய போதனைகளுக்கு முரணானவையல்ல என்பதனைத் தெரிவித்துள்ளனர்.

வண்டியிழுக்கும் மாடு, மனிதனின் ஆகக்கூடிய கொடுமைக்கு இலக்காகி வரும் ஒரு விலங்காகவுள்ளது. வண்டி மாட்டைப் போல வேறு எந்த ஒரு விலங்கும் இவ்வளவு நீண்ட காலத்துக்கு மூக்கணாங்கயிறு கட்டப்பட்ட நிலையில் காலந்தள்ள வேண்டி நேரிடுவதில்லை. இந்த விலங்குகள் இதன் காரணமாக அனுபவிக்க வேண்டிய நேரிடும் நோவினையும், எரிச்சலினையும் உங்களால் கற்பனை செய்து பார்த்துக் கொள்ள முடியும். இந்த மூக்கணாங் கயிறு மனிதன் விலங்குகளுக்கு இழைத்துவரும் சொல்லொணாக் கொடுமைகளை எடுத்துக் காட்டும் ஒரு குறியீடாக உள்ளது. வண்டியிழுக்கும் மாடு இராப்பகலாக வெயிலிலும் மழையிலும் மனிதனுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதற்குப் போதிய உணவும் தங்குவதற்குப் பொருத்தமான இடமும் கிடைப்பதில்லை. மாட்டுவண்டிகள் மிதமிஞ்சியளவில் சுமைகளை ஏற்றிக் கொண்டு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. ஆனால், இறுதியில், இந்த அப்பாவிப் பிராணிகளின் வாழ்க்கை கசாப்புக் கடைக்காரர்களின் கைகளிலேயே முடிவு பெறுகின்றது. இது எந்தவொரு நாகரிகமடைந்த மனிதனும் செய்யக்கூடாத செயலென நாம் நம்புகிறோம். இந்த விலங்குகளை அவற்றின் எடைக்கு ஏற்ப விலை கொடுத்து (சுமார் 7000 ரூபா வரை) நாங்கள் வாங்குகிறோம். தோட்டங்கள் வைத்திருக்கும் எமது உறுப்பினர்கள் அவற்றைப் பராமரிக்கின்றார்கள். இந்த விதத்தில் சுமார் 100 விலங்குகளை காப்பாற்றியுள்ளோம். பால் தரும் பசு மாடுகளும் கூட இதேவிதமான ஒரு பரிதாப நிலையையே எதிர்கொள்கின்றன. நாமெல்லோரும் பாலை அருந்துகின்றோம்.

## உங்கள் சவர்க்காரமும், ஷாம்பூவும் அழுக்கு நீக்கியும் கோடிக் கணக்கான பிராணிகளின் உயிர்களைக் கழுவி விடுகின்றன.



பல வீட்டுப் பாவனைப் பொருட்களும் அலங்காரப் பொருட்களும் விலங்குகள் மீது வேதனை தரும் முறைகளில் பரீட்சிக்கப்படுகின்றன. சில உற்பத்திப் பொருட்கள் பாதுகாப்பான இயற்கை ஆக்கக் கூறுகளைக் கொண்டவை. அவை மிருகங்கள் மீது பரீட்சிக்கப்படுவதில்லை.

துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படாத உற்பத்திப் பொருட்களின் நிரலைப் பெற்றுக்கொள்வதற்குத் தொடர்பு கொள்க:

துன்புறுத்தலற்ற அழகு,
175, மேற்கு 12ஆம் வீதி,
நிவ்யோர்க், 10011

பெரும்பாலான சிறு பிள்ளைகள் குழந்தைப் பருவத்திலிருந்தே பால் அருந்தி வருகின்றார்கள். கடைசியில் இந்தப் பசுக்களுக்கு என்ன கதி நேரிடுகின்றது? இறைச்சியைப் புசிக்க வேண்டாமென நாம் கூறவில்லை; மாட்டிறைச்சி தொடர்பான பிரச்சினை ஒரு வேறுபட்ட வகையைச் சேர்ந்த பிரச்சினையாக உள்ளது என்பதனையே நாங்கள் கூறுகின்றோம். பெரும்பாலான நாடுகள் இறைச்சி மாடுகளுக்கென விசேஷ பண்ணைகளை வைத்துள்ளன. வண்டியிழுக்கும் மாட்டின் இறைச்சியையும், பால் மாட்டின் இறைச்சியையும் புசிக்க வேண்டாமென்றே நாம் கூறுகிறோம். அது மிகவும் கொடுமையான ஒரு செயலாகும். வயது முதிர்ந்த விலங்குகளுக்கென சரணாலயமொன்றை நிறுவு

வது எமது நோக்கங்களில் ஒன்றாகும்.

"விலங்குகள் மீது அட்டூழியங்களைப் புரியாதீர்கள்! ஏனெனில், அவற்றுக்கும் உரிமைகள் உண்டு" என்பதே எமது வேண்டுகோளாகும். உண்மையில், இயற்கை நிலையில் விலங்குகளும் மனிதர்களைப் போலவே சமமான உரிமைகளைக் கொண்டுள்ளன. இப்பொழுது மனிதன் அதிஉயர் பிறவியாகத் தன்னை நிலைநாட்டிக் கொண்டுள்ளதுடன், ஏனைய அனைத்தையும் தனது ஆதிக்கத்தின் கீழ் எடுத்து வந்துள்ளான். "இந்த வாயில்லாப் பிராணிகளை நாம் கொடுமைப்படுத்த முடியும்" என்பது அதன் பொருளல்ல; அவற்றைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

*"எம்மில் பெருந்தொகையானவர்கள் இயக்கங்களில் இணைந்து கொண்டுள்ளோம். மிருகங்களின் உரிமைகளுக்காகப் போராடும் இயக்கங்களில் மட்டுமல்ல; வேறு பலவற்றிலும் சேர்ந்து கொண்டுள்ளோம். இதற்குக் காரணம் நாம் மற்றவர்களின் நிலையில் நம்மை வைத்து நோக்குவதாகும். நான் ஒரு கறுப்பனாக, ஒரு பெண்ணாக அல்லது மனிதனல்லாத விலங்காக இருந்தால் மற்றவர்கள் என்னை எவ்வாறு நடத்த வேண்டுமென்று விரும்புவேன்."*

*- ஹென்றி ஸ்பைரா*

மகிந்த தேரர் தேவநம்பியதீச மன்னவிடம், "ஓ மன்னா! வானில் பறக்கும் பறவைகளும், விலங்குகளும் இந்த நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் வாழ்வதற்கும் சஞ்சரிப்பதற்கும் சமமான உரிமைகளைக் கொண்டுள்ளன. பூமி மக்களுக்கும் மற்றும் அனைத்துவிதமான பிராணிகளுக்கும் உரித்தானதாகும். நீங்கள் அதன் பாதுகாவலராக மட்டுமே உள்ளீர்கள்" என எடுத்துக் கூறியிருந்தார். இந்த வகையில் விலங்குகளின் உரிமைகள் தொடர்பாகவும், விலங்கு நலன் பேணல் தொடர்பாகவும் இலங்கைக்கு ஒரு சிறந்த பாரம்பரியமுள்ளது. மிகப் புராதன இயற்கை சரணாலயம் எமது நாட்டிலேயே இருந்தது. மிகப் பழைய கால்நடை மருத்துவ மனைகள் இந்நாட்டில் இருந்தன.

நான் தொடக்கத்தில் கூறியது போல, விலங்குரிமைகள் தொடர்பாக சில சட்டவாக்கங்கள் உள்ளன. ஆனால், அவை ஓர் ஒழுங்கில் அமைந்திருக்கவில்லை. அத்துடன் செயற்படுத்தப்படுவதுமில்லை. விதிக்கப்படக்கூடிய அபராதங்கள் அற்ப தொகைகளாகவே உள்ளன. உதாரணமாக, இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளை ஒரு லொறியில் போக்குவரத்துச் செய்யும்போது பத்து மாடுகளை மட்டுமே அவ்விதம் எடுத்துச் செல்ல முடியும். ஆனால், ஒரு லொறியில் 30, 40 மாடுகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இந்தப் பயணத்தின் போது மாடுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றன. அவற்றின் கால்கள் முறிந்துவிடுகின்றன. சில விலங்குகள் இடையில் செத்துப் போவது கூட உண்டு. ஆனால், பொலீஸாரினால் இந்த லொறிகள் மறிக்கப்பட்டு, பிடிக்கப்படுமிடத்து இந்தக் குற்றத்துக்காக ரூபா 200 லிருந்து 300 வரையிலேயே அபராதம் விதிக்கப்படுகின்றது. அத்துடன், சம்பந்தப்பட்ட விலங்குகள் உரிமையாளருக்கு திருப்பி அளிக்கப்படுகின்றன. இந்த வகையான குற்றங்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமென நாங்கள் யோசனை தெரிவித்துள்ளோம். பல்வேறு சர்வதேச விலங்குரிமை அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் இங்கு வந்து, இங்குள்ள நிலைமைகளைக் கண்ணுறும்போது, பெருமளவுக்கு அதிர்ச்சியடைகிறார்கள். "இது ஒரு பௌத்த நாடுதானா" என்று எம்மிடம் கேட்கிறார்கள்.

முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர் திரு. லோரன்ஸின் உதவியுடன், விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்பாக பொலீஸ் நிலையங்களுக்கு 1986ல் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி வைக்கக்கூடிய வாய்ப்பு எமக்குக் கிட்டியது. (இச்சுற்றறிக்கை பெட்டிச் செய்தியில் தரப்பட்டுள்ளது). அது எமது முக்கியமான சாதனைகளிலொன்றாகும். கட்டுக்குருந்தையில் அமைந்துள்ள பொலீஸ் பயிற்சி நிலையத்தில் விரிவுரைகளை நிகழ்த்துமாறு நாம் அடிக்கடி கேட்கப்படுகின்றோம். விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை தடுத்து நிறுத்துவதனை, பொலீஸ் பயிற்சி நிலையத்தின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக சேர்த்துக் கொள்ளச் செய்வதற்கு இப்பொழுது நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

போதிய அளவில் கள உதவியாளர்கள் இல்லாதிருப்பது நாங்கள் எதிர்நோக்கி வரும் மிக முக்கியமான பிரச்சினையாகும். "யாரேனும் ஒருவர் ஒரு விலங்கினை துன்புறுத்துவதைக் கண்டால் பொலீஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்யுங்கள்" என்றே நாம் பொதுமக்களுக்குக் கூறி வருகின்றோம். விலங்குகளைத் துன்புறுத்துவது சட்டப்படி ஒரு குற்றமாக இருந்து வருவதனால் பொலீஸ் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. உண்மையிலேயே விலங்குகளுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளை நாம் தடுத்து நிறுத்த வேண்டுமானால் அதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பும் சுறுசுறுப்பான பங்கேற்பும் எமக்கு அவசியமாகும்.

"கல்காவ மித்துரோ" அமைப்பின் "விலங்கு நலன்புரி கல்வி ஆராய்ச்சி நிதியம்" என்ற பெயரில் நாம் ஒரு நிதியத்தைக் கொண்டுள்ளோம். எமது அமைப்பு அங்கீகாரம் பெற்ற ஓர் அறக்கொடையாக இருந்து வருவதனால் அதற்கான கொடைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகின்றது. விலங்குகள் துன்புறுத்தப்படுவதனை உடனடியாக எமக்கு தெரியப்படுத்துவதற்கு வகை செய்யும் விதத்தில் 24 மணிநேர முறைப்பாட்டு அலகு ஒன்றினை ஸ்தாபித்துக் கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம். முறைப்பாடுகள் இருக்கும் பட்சத்தில், ஏனைய குற்றச் செயல்களைப் போலவே இவற்றையும் பொலீஸ் கையாளும்.

*"அவை பகுத்தறிய முடியுமா அல்லது அவற்றுக்குப் பேச முடியுமா என்பதல்ல பிரச்சினை. அவை துன்பப்படலாமா என்பதே பிரச்சினை."*

*- ஜெரமி பென்தம்*

# விலங்குகளுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை தடுத்தல்

மல்லிகா பெரேரா

(தலைவர், விலங்கு நலன்புரி பாதுகாப்பு சங்கம்)

விலங்குகளுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளைத் தடுப்பதற்காக இலங்கையில் சில சட்டவாக்கங்கள் உள்ளன. மிகவும் கொடூரமான முறையில் மாடுகளை வாகனங்களில் ஏற்றிச் செல்பவர்களுக்கும் வண்டியிழுக்கும் மாடுகளை துன்புறுத்துபவர்களுக்கும் நீதிபதிகள் தண்டனைகளை வழங்கும் பல வழக்குகள் குறித்து அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆனால், நாய்களுக்கும் பூனைகளுக்கும் இழைக்கப்பட்டுவரும் சித்திரவதைகளை தடுத்து நிறுத்துவதற்கு சட்ட வழிமுறைகள் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் இருந்துள்ளனவா என்பது எனக்குத் தெரியவில்லை. பூனைகளுக்கும் நாய்களுக்கும் சித்திரவதை செய்வதனை நிரூபித்துக் காட்டுவது மிகவும் சிரமமாக இருப்பதே இதற்கு ஒரு வேளை காரணமாக இருக்க முடியும். உதாரணமாக, நாய்கள் நீண்ட காலத்துக்கு நிரந்தரமாக ஓரிடத்தில் கட்டி வைக்கப்படுகின்றன. வெய்யிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் அவை சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றன. ஆனால் அது ஒரு சித்திரவதை செயலாகக் கருதப்படுவதில்லை. மேலும், "சித்திரவதை செய்யப்பட்டுள்ளது" என்பதனை நிரூபிப்பதற்கு சாட்சியங்கள் அவசியமாகும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் சாட்சிகளைப் பெறுவது சிரமமாகவுள்ளது.

இங்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல விரும்புகின்றேன். கொதிநீர் ஊற்றப்பட்டு, தீப்புண்களைப் பெற்றிருந்த ஒரு நாய்க்குட்டி எமக்குக் கிடைத்தது. அதன் உடலில் பெரியதொரு காயமும் இருந்தது. ஆனால், இந்தக் கொடுமையை செய்தவரை நாம் காணவில்லையாதலால் அதனை நிரூபிக்க முடியாதிருந்தது. மக்கள், கால விரயம் போன்ற காரணங்களினால் இவற்றில் தம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளவும் விரும்புவதில்லை.

மக்கள் வேண்டுமென்றே கொடுமைகளைச் செய்து வருகின்றார்களென நான் நினைக்கவில்லை. பூனைக் குட்டிகளை ஒரு பையில் போட்டு கடலில் வீசி எறிந்து விடுவது போன்ற கொடுமைச் செயல்களை அவர்கள் செய்ய மாட்டார்கள். இந்த நாட்டில் குறிப்பாக பூனைகளுக்கும் நாய்களுக்கும் கொடுமைகள் இழைக்கப்பட்டு வருவதற்கான ஒரு காரணம் பொருளாதார அடிப்படையானதாகும். ஒரு பெண் நாய் வருடத்துக்கு இரண்டு முறை குட்டிகளை பிரசவிக்கின்றது. பூனைகளின் இனப்பெருக்கம் இதைவிடவும் தீவிரமாகவுள்ளது. எனவே, இந்த மேலதிகக் குட்டிகளை எவரும் விரும்புவதில்லை; அவை கோவில்களிலோ குப்பைத் தொட்டிகளிலோ போடப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் மக்கள் வீடு மாறிச் செல்லும் பொழுது, வசதியீனங்கள் காரணமாக இப்பிராணிகளை விட்டு விட்டுச் செல்கின்றனர். இதுவும் ஒரு கொடூரமான செயலாகும். ஒரு வீட்டுடன் பரிச்சயமாகியிருக்கும் விலங்குகளினால் புகலிடம் எதுவுமின்றி தன்னந்தனியாக நின்று தாக்குப்பிடிக்க முடிவதில்லை. இதுதவிர, சில பணக்கார வீடுகளில் செல்லப் பிராணிகளுக்குப் போதியளவில் உணவு அளிக்கப்படாத சம்பவங்களும் காணப்படுகின்றன. இதற்குப் பொருளாதாரம் ஒரு காரணமல்ல. அவர்கள் விலங்குகளை பொருட்படுத்தாமல் இருப்பதே இதற்கான காரணமாகும். சிறு பிள்ளைகள் நாய்கள் மீதும் பூனைகள் மீதும் கற்களை எறிந்து அவற்றை துன்புறுத்தும் சம்பவங்களுமுள்ளன. இத்தகைய சந்தர்ப்பங்களில், பெற்றோரும் ஆசிரியர்களும், விலங்குகள் மீது கருணை காட்ட வேண்டிய அவசியத்தை பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

நாங்கள், 1975ல் விலங்குகளுக்கான சரணாலயத்தை ஸ்தாபித்தோம். மனிதர்களின் துன்புறுத்தல்களுக்கு இலக்காகிவரும் நாய்க்குட்டிகளினதும் பூனைக்குட்டிகளினதும் ஒரே சரணாலயமாக இது உள்ளது. எமது சரணாலயத்தின் வெளிக்கதவுகளுக்கு வெளியே நாய்க்குட்டிகளும் பூனைக்குட்டிகளும் விட்டுச் செல்லப்படுவது அடிக்கடி காணக்கூடிய ஒரு நிகழ்வாக இருந்து வருகின்றது. இவை பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பெண்பால் விலங்குகளாகவுள்ளன. இவற்றைப் பராமரிப்பதில் இவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து எமக்கு எந்தவிதமான உதவிகளும் கிடைப்பதில்லை. ஆனால், நாம் அவற்றை ஏற்று, அவற்றுக்கு உணவையும் மருத்துவ வசதிகளையும் அளித்து முடியுமான சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு இல்லங்களையும் பெற்றுக் கொடுக்கின்றோம். அத்துடன், பெண்பால் விலங்குகளை வளர்ப்பதற்குக் கையளிக்கும் பொழுது, அவற்றுக்கு இலவசமாக கருத்தடை அறுவைச் சிகிச்சையும் செய்து கொடுக்கின்றோம்.

ஓடும் வாகனங்களிலிருந்து எமது வளவுக்குள் நாய்க்குட்டிகள், பூனைக்குட்டிகள் என்பவற்றை சிலர் வீசி எறிந்துவிட்டுச் சென்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. தம்மிடமிருக்கும் மேலதிக நாய்க்குட்டிகளையும் பூனைக்குட்டிகளையும் செலவு எதுவுமின்றி அப்புறப்படுத்த விரும்புகிறவர்களே இவ்விதம் செய்கின்றார்கள். ஏனெனில், புதிய விலங்குகளை பெற்றுக் கொள்ளும் பொழுது சிறிய கட்டணமொன்றினை

---

**அஹ்மதிய்யா சமூகத்தினரின் கருத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம் :**

**ஒரு விலங்கு உணர்விழக்கச் செய்யப்பட்டு, உயிருடனிருக்கையில் ஹலால் முறைப்படி அறுக்கப்பட்டால் இரத்தம் நன்றாக வழிந்தோடும். இவ்வாறு அறுக்கப்பட்ட விலங்கு "ஹலால்" என்பதன் வரைவிலக்கணத்துக்கு உட்பட்டதாகும். அறுக்கு முன் மயக்குவது அனுமதிக்கப்பட்டது மட்டுமன்றி, அது இஸ்லாமிய ஹலால் முறையான அறுப்பு முறைக்கு எவ்விதத்திலும் முரண்பட்டதாகாது.**

நாம் அறவிட்டு வருகின்றோம். எனினும், அந்தக் கட்டணம் எந்த வகையிலும் எமது செலவினை ஈடுசெய்யக் கூடியதாக இருப்ப தில்லை. இங்குள்ள பிரச்சினை, பெரும்பாலான மக்கள் பிராணிகளிடம் போதியளவில் அன்பு காட்டுவதில்லை என்பதாகும். அதனால்தான் அவர்கள் அப்பிராணிகளை ஓடும் வாகனங்களி லிருந்து தூக்கி எறிந்து விடுகிறார்கள். தாம் விரும்பி வளர்க்கும் பிராணிகளிடம் மட்டும் அன்பினைச் சொரிந்து, ஏனைய பிராணிகளுக்கு கொடுமைகளை இழைக்கக் கூடியவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், உண்மையிலேயே பிராணிகள் மீது அன்பு காட்டும் ஒருவர் அனைத்துப் பிராணிகள் மீதும் அன்பு காட்டக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

நாம் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினை போதிய இடவசதி இன்மையாகும். மேலும், விலங்குகளைப் பராமரித்தல், அவற்றுக்கு உணவூட்டுதல், சிகிச்சையளித்தல், பெண் விலங்குகளை மலடாக்குதல் போன்றவற்றுக்காக பெருமளவு மீளவரும் செலவு ஏற்படுகின்றது. விலங்குப் பிரியர்கள் எமக்கு உதவக்கூடிய ஒரு வழி,எமது கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்வதாகும். விலங்கு நலன்புரி பாதுகாப்புக் கழகம் இங்கிலாந்தில் அமைந்துள்ள இதனையொத்த ஒரு கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எமது கழகத்தில் சுமார் ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளனர். ஓர் உறுப்பினர் வருடத்துக்கொருமுறை உணவளிப்பதாக இருந்தால், பிராணிகளுக்கு உணவு அளிக்க வேண்டிய எமது பரச்சினை தீர்ந்து விடும். துரதிர்ஷ்டவசமாக அது அவ்விதம் இடம் பெறவில்லை. நாளொன்றுக்கு எமக்கு 7 கிலோ அரிசி தேவைப்படுகின்றது. விலங்குப் பிரியர்கள் எமக்கு அரிசியையும் ஏனைய உணவுப் பொருட்களையும் தந்து உதவினால், அதன் மூலம் நாம் சேமிக்கும் பணத்தைக் கொண்டு அதிகளவிலான பிராணிகளுக்கு எம்மால் உதவக்கூடியதாக இருக்கும்.

இந்த விடயத்தில் ஜீவகாருண்யம் குறித்த கல்வி ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்த ஆண்டு முடிவுக்குள், ஜீவகாருண்யக் கல்வியை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். மேலும், விசர்நாய் தொல்லைக்கெதிரான தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித்திட்டமொன்றினையும் இலவசமாக மேற்கொள்ள உள்ளோம். இது தவிர, பிராணிகள் மீது அன்புகாட்ட வேண்டிய முக்கியத்துவத்தை சிறுவர்களிடம் வலியுறுத்திக் கூறும் விரிவுரைகளையும், வீடியோப் படக் காட்சிகளையும் அறிமுகம் செய்து வைப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

விலங்குகளை மலடாக்கும் அறுவைச் சிகிச்சை சற்று செலவு கூடியதாக இருந்து வருவதனால் இந்த விடயத்தில் நாம் எமது உறுப்பினர்களுக்கு உதவி வருகின்றோம். இந்த அறுவை சிகிச்சை கொடுமையானது என பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆனால், அது உண்மையல்ல; இந்த அறுவை சிகிச்சை, வேண்டாத நாய்க்குட்டிகளும் பூனைக்குட்டிகளும் பிறப்பதனை மட்டுமே தடுத்து வருகின்றது.

**அறுக்கப்பட முன், உணர்விழக்கச் செய்யப்பட்ட விலங்கின் மாமிசத்தை உண்பதற்குக் குர்ஆனில் ஆட்சேபணை எதுவுமில்லை என்று 1969ல் தன்சானியாவின் முன்னைய காதி பகிரங்கமாகக் கூறியுள்ளார். தாருஸ்ஸலாமிலுள்ள ஆடு, மாடு வெட்டும் கொட்டில் ஒன்றில் உணர்விழக்கச் செய்யும் கருவி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டதனையடுத்து, முன்னைய காதியின் கருத்துப் பெறப்பட்டது. அவரது கருத்தைத் தன்சானியாவின் தற்போதைய சிரேட்ட காதியும் பின்னர் அங்கீகரித்துள்ளார். புகழ் பெற்ற ஓர் இஸ்லாமிய நிறுவனமான கெய்ரோ காதிப் பாடசாலைப் போதனாசிரியர்களும் இதுபோன்ற ஒரு கூற்றை வெளியிட்டுள்ளனர். இங்கிலாந்திலுள்ள வோக்கிங் பள்ளிவாசல் இமாமும் இத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளார்.**

*"யாரோ ஒருவர் எனக்கு ஒரு பூனை தந்தார். அந்தப் பூனையுடன் விளையாடுவதோ மற்றொரு விலங்கின் மீது கத்தியையும் முள்ளையும் பிரயோகிப்பதோ எனக்கு மகிழ்ச்சியூட்டவில்லை."*

*- ஹென்றி ஸ்பைரா*

( 4 பக்கத் தொடர்ச்சி)

உணவை உட்கொள்வதற்கான தார்மீகக் காரணங்களிலும், குறைந்தளவில் விலங்குணவினை உட்கொள்வதிலும், மக்கள் புலால் உணவினை உண்ணும் வரையில் இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கான வழிமுறைகளை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தக்கூடிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் எமக்கு அவசியமாகும்.

இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளின் வளர்ப்பு, போக்குவரத்து மற்றும் வெட்டும் முறைகள் என்பன தொடர்பான யதார்த்தங்கள் குறித்து பொதுமக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி காணப்படவில்லை. "நாங்கள் எந்த விலங்கின் இறைச்சியை புசிக்கின்றோமோ, அதற்காக, அந்த விலங்கினை நாமே வெட்டுவதாக இருந்தால், புலால் மறுப்பவர்களின் எண்ணிக்கை மிகத் துரிதமாக உயர்ந்து செல்லும்" என எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால், பெரும்பாலான மக்கள், வெட்டப்படும் விலங்குகளின் தீனக் குரல்களை கேட்பதுமில்லை; அவைபடும் துன்பங்களை நேரில் பார்ப்பதுமில்லை. தென் சென்ட்போல் இறைச்சி விலங்குப் பண்ணைகளின் சில காட்சிகளை அமெரிக்க விலங்குரிமை ஆதரவாளரான பெக்கி சான்ட் லெடெட் வீடியோவில் பதிவு செய்திருந்தார். காயம்பட்ட, உடல் ஊனமடைந்த விலங்குகள் சங்கிலியால் கட்டப்பட்டு இறைச்சிக் கூடங்களுக்கு இழுத்து வரப்பட்ட மிகப் பரிதாபகரமான காட்சிகளையும், நோயுற்ற விலங்குகள் படும் சொல்லொணா இன்னல்களையும் இந்த வீடியோ தொகுப்பு மிகவும் தத்ரூபமாக எடுத்துக் காட்டியது. அமெரிக்க வலைப்பின்னல் தொலைக்காட்சி அமைப்பிலும் இந்தப் படங்கள் காட்டப்பட்டன.

பெரும்பாலான மக்கள், விலங்குகள் படும் துன்பங்கள் தமது கவனத்துக்கு எடுத்துவரப்படுமிடத்து அதனை நிச்சயமாக ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். எனவே, இதனை நாங்கள் பொது மக்களின் கவனத்திற்கு எடுத்துவர வேண்டியுள்ளது. "ஒருவருக்கு ஏற்படும் காயம் நம் அனைவருக்கும் ஏற்படும் காயமாகும்" என்பதனை நாம் உணர்கிறோம். இதேபோல, பொதுமக்கள் மத்தியில் இந்தக் காருண்ய உணர்வு தொடர்பான ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்க வேண்டிய பணி எம்மைச் சார்ந்துள்ளது.

# புற்றுநோய் ஆராய்ச்சியில் விலங்குகளுக்குப் பதிலாக வேறு மாற்று வழிகளை பயன்படுத்துதல்

பிலிப் நொகூச்சி

இந்தக் கட்டுரையைச் சமர்ப்பிப்பதில், பலர் எனக்களித்துள்ள உதவிகளுக்கு நன்றி கூற வேண்டியவனாக உள்ளேன். முதலில், டாக்டர் ஜோன் பெற்றிஸியானி அவர்களுக்கு நான் பெருமளவுக்குக் கடமைப்பட்டுள்ளேன். அவர் என்னை விஞ்ஞானப் பணியில் வளர்த்தெடுத்து, ஆலோசனைகள் வழங்கியது மட்டுமன்றி, முதன்முதலில் எனக்குத் தொழிலும் வழங்கினார். இரண்டாவதாக, டௌடிங் பிரபு நிதியம் மற்றும் விலங்கு ஆராய்ச்சிகளுக்குப் பதிலான மாற்றுவழிகளைக் கண்டறிவதற்கான அமெரிக்க நிதியம் என்பவற்றுக்கு நான் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மூன்றாவதாக, 'எனது பெரும்பாலான ஆராய்ச்சிகளில் உறுதுணையாக நின்ற எனது சகாக்களான ஜோய்ஸ் ஜோன்சன் மற்றும் வோல்டர் பிரவுண் ஆகியோருக்கு இங்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கட்டுரை, புற்றுநோய் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்பட்டுவரும் மாற்று வழிகள் குறித்த அனைத்துமடங்கிய ஒரு தொகுப்பாக இருக்கவில்லை. மாறாக, தெரிவு செய்யப்பட்ட தனியொரு அணுகுமுறையாக மட்டுமே இது உள்ளது. முதலில், "புற்றுநோய்" என்பதற்கு ஒரு வரைவிலக்கணத்தைக் கொடுக்க வேண்டியுள்ளது. உடம்பின் குறிப்பிட்ட சில அங்கங்களில் உயிரணுக்களைக் கொண்ட கழலைகள் வளர்ச்சியடைந்து, இந்தக் கழலைகள் உடம்பின் திசுக்களில் பரவி உடம்பெங்கும் புற்றினைப் பரவச் செய்வதே புற்றுநோயாகும். இது இறுதியில், நோய்கண்டவரை மரணத்துக்கு இட்டுச் செல்கின்றது.

உடற்கூறு நோய்க் கூறியல், புற்றுநோய் ஆராய்ச்சிக்கான (அதேபோல இதற்கென விலங்குகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வேறு மாற்றுவழிகளைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகளுக்கும்) ஒரு மிகச்சிறந்த அணுகுமுறையை வழங்குகின்றது. முதலில், நோய்க்கூறு ஆய்வு புற்று எங்கு ஆரம்பமாகின்றது என்பதனையும், அது உடலெங்கும் எவ்விதம் பரவுகின்றது என்பதனையும் காட்டுகின்றது. இரண்டாவதாக, திசுக்களினதும் உடல் உறுப்புக்களினதும் நுண்ணாய்வுப் பரிசீலனை, நோய் பரவும் மாதிரிகளையும் கழலையின் சிதைக்கப்பட்ட கட்டமைப்பினையும் எடுத்துக் காட்டுகின்றது. மூன்றாவதாக, நோய்க் கூறியல் ஆய்வுப் பெறுபேறுகள் நோயாளியின் சிகிச்சை வழிமுறையுடன் இணைத்து நோக்கப்படுகின்றன. இதன் மூலம் குறிப்பிட்ட ஒரு வகையான புற்றுநோயின் உயிரியலைப் புரிந்து கொள்வதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த அணுகுமுறை ஒரு சக்தி வாய்ந்த முறையாக இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. உண்மையிலேயே அறுவை நோய்க் கூறியல் மருத்துவர் இறுதி முடிவினை வழங்குகின்றார். அவருடைய முடிவு, சந்தேகிக்கப்படும் உறுப்புச் சிதைவு அறுவை சிகிச்சையின் மூலம் நீக்கப்பட்டுவிடுமா அல்லது இல்லையா என்பதனை நிர்ணயம் செய்து விடுகிறது. என்னைப் பொறுத்தவரையில், உடற் கூற்றியல் சார்ந்த நோய்க் கூற்றியல் புற்றுநோயின் அழிவுகரமான தாக்கங்கள் குறித்த அழியாத ஒரு சித்திரத்தை ஏற்படுத்தி வருகின்றது. ஒரு வைத்தியர் மருத்துவமனையில் நோயாளி ஒருவருக்கு சிகிச்சையளித்து, அதன் பின்னர் அந்த நோயாளியின் பிரேத பரிசோதனையில் பங்கேற்கும் பொழுது புற்றுநோயின் நிகழ்வுப் போக்கினை புரிந்து கொள்வதற்கு முயற்சிப்பதில் எதிர்கொள்ளக் கூடிய சவால்களை மிகத் தெளிவாகக் கண்டு கொள்கின்றார். எனினும், நோய்க் கூறியல் பகுப்பாய்வுடன் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான பிரச்சினை, அது, மிக எளிதில் நேரடியான விஞ்ஞான விசாரணைக்கு எம்மை இட்டுச் செல்வதில்லை என்பதாகும். குறிப்பிட்ட ஒரு கேள்வியை எழுப்பி, குறிப்பிட்ட ஒரு காரணம் குறிப்பிட்ட ஒரு தாக்கத்தை எடுத்து வருகின்றதா என்பதனைக் கண்டறிவதற்கு, மாற்றமடையக் கூடிய பல்வேறு நிலைமைகளை மனிதர்கள் மீது எளிதில் உருவாக்கிக் கொள்ள முடியாது.

இந்தப் பயிற்சியையடுத்து இரண்டு வருட காலப் பயிற்சிக்காக நான் உயிரியல் ஆராய்ச்சிப் பணியகத்துக்குச் சென்றேன். புற்றுநோய் தொடர்பான ஆராய்ச்சியை தொடர்ந்தும் மேற்கொள்வதில் எனக்கு ஆர்வம் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான், ஜோன் பெற்றிஸியானி, விலங்குகளுக்குப் பதிலாக இரண்டாவது மாற்று வழியொன்றினை எனக்கு எடுத்துக் கூறினார். அதாவது, மனித உயிரணுக்களை செயற்கையாக வளர்த்தெடுக்கும் முறையை அவர் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். மனித உயிரணுக்களை மனித உடலுக்கு வெளியே உருவாக்கி எடுக்கும் முயற்சிகள் 1907ம் ஆண்டளவிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்த பொழுதிலும், அது, 1950 களிலேயே ஓர் அளவுக்கு வெற்றி கண்டது.

ஷாஜஹான் பள்ளிவாயில், வோக்கிங், சரே. இங்கிலாந்து

**இஸ்லாமிய சட்டப்படி உண்பதற்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து விலங்குகளும் இரத்தம் வெளியேறுமாறு அறுக்கப்பட வேண்டும். "வேதனையில்லாமல் கொல்லும் முறை" இஸ்லாமிய போதனைகளுக்கு எவ்வகையிலும் முரணானதல்ல. உணர்விழக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கருவி விலங்கை மயங்கச் செய்கிறதேயன்றிக் கொல்வதில்லை என்பதையும், அது இரத்தம் வெளியேறுவதைத் தடுப்பதோ குறைப்பதோ இல்லை என்பதையும் நான் எனது சொந்த அனுபவத்திலிருந்து கூற முடியும். இக்கருவி பயன்படுத்தப்பட்ட பிறகும் வெகு நேரத்துக்கு விலங்கின் இருதயம் துடித்துக் கொண்டிருக்கிறது. எனவே, விலங்கு மயக்கமுறச் செய்யப்பட்ட பின்னர் (விலங்கின் உடல் நிலையைப் பொறுத்து ஏறத்தாழ ஐந்து நிமிடங்களுக்குள்) ஒரு முஸ்லிமானவர், விதிக்கப்பட்ட சட்டப்படி (அதாவது, "பிஸ்மில்லாஹி அல்லாஹு" அக்பர் - மிகப் பெரியவனான இறைவனின் பெயரால் எனக் கூறி உணவுக் குழாயும் சுவாசக் குழாயும் இரு கழுத்து இரத்தக் குழாய்களும் வெட்டிப்படும் வகையில் விலங்கை) அறுப்பாரானால் பிரதான இரத்தக் குழாய் வழியாக இரத்தம் வெளியேறும். அதனால் விலங்கு முறையாக அறுக்கப்பட்டு விடுவதோடு அதன் இறைச்சி இஸ்லாமிய சட்டப்படி உண்பதற்கு அனுமதிக்கப்பட்டதாகிவிடும்.**

*ஒப்பம் : அல்ஹாபிஸ் பி. ஏ. மிஸ்ரி*
*இமாம்*

*வோக்கிங்*
*8 ஆகஸ்ட் 1968*

---

அந்தக்காலம் தொட்டு மனித உயிரணுக்கள் உருவாக்கங்கள், நோயாளிகளின் உயிரியல் இரசாயன மற்றும் பிறப்பியல் ஒழுங்கீனங்களை பிரதிபலிக்கக் கூடியவையாக இருந்து வருவதனால் சில மனித நோய்களுக்கான உபயோகமுள்ள மாதிரிகள் என்ற முறையில் அவை தமது ஆற்றலை நிரூபித்துக் காட்டியுள்ளன. எனவே, மனித உடலுக்கு வெளியே உருவாக்கப்படும் புற்று நோய் உயிரணுக்கள், புற்று நோயை ஆராய்வதற்கான ஒரு வழிமுறையை வழங்க முடியும். உதாரணமாக, மனித உடலில் குறிப்பிட்ட ஒரு பெருங்குடல் பிளவை உயிரணு வழியொன்றின் குணஇயல்புகளைக் குறித்த சில ஆய்வுகளை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். மனிதர்களுக்கு விரல் அடையாளங்கள் போன்ற தனித்துவமான குணாம்சங்கள் இருந்து வருவது போல, வளர்க்கப்படும் உயிரணுக்களிலும் இத்தகைய குணாம்சங்கள் உள்ளனவா என்பது குறித்த பரிசீலனைகளை மேற்கொள்ள முடியும். தேசிய புற்றுநோய் நிறுவனத்தின் டாக்டர் ஸ்டீபன் ஒப்ரியன் இந்த உயிரணுக்களின் தனித்துவமான குணாம்சங்களை நிர்ணயம் செய்தார்.

டாக்டர்கள் பெரோன் மற்றும் பெலகிரினோ ஆகியோர் இந்த உயிரணுக்களை மேலும் நுணுக்கமாக ஆராய்ந்தார்கள். அதனையடுத்து, டாக்டர் எலிஸபெத் ஏர்லே, கிராமோசோன்களை ஆராய்ச்சி செய்ததன் மூலம் இந்த உயிரணுக்களின் பிறப்பியல் பொருட்களின் இயல்பினை நிர்ணயம் செய்தார். இந்த நிலையில், மனித கழலை உயிரணுக்களின் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் நான் ஓர் இடர்ப்பாட்டினை எதிர்கொண்டேன். அதாவது, இந்த உயிரணுக்கள் உண்மையில் புற்றுநோய் உயிரணுக்களாக உள்ளனவா அல்லது அப்படி இருக்கவில்லையா என்பதனை நாம் எப்படிக் கூறமுடியும் என்ற பிரச்சினை எழுந்தது. சம்பந்தப்பட்ட உயிரணுக்களை, திருத்தியமைக்கப்பட்ட நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ள விலங்குகளின் மீது ஏற்றி, அவற்றின் உடல்களில் மனித புற்றுநோய் உயிரணுக்களை வளரச் செய்வதே பாரம்பரியமாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்திருக்கும் ஒரு முறையாகும். இந்த முறை ஒரு அனுகூலத்தைக் கொண்டுள்ளது. அதாவது, விலங்குகளில் வளரும் கட்டிகளை உருவாக்கும் உயிரணுக்கள் நிச்சயமாக புற்றுநோய் உயிர் அணுக்களாகவுள்ளன. ஆனால், இதே வேளையில், இந்தப் பரிசோதனையில் பேரளவிலான பல பிரதிகூலங்களும் உள்ளன. சம்பந்தப்பட்ட விலங்கினை ஓரிடத்தில் வைத்து அதற்கு உணவளிக்க வேண்டிய தேவை, புற்று நோயின் அனைத்து விதமான

( 21 பக்கம் பார்க்க)

## பிராணிகளுடன் சகவாழ்வு

வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படு முன் நீருயிர் காட்சிக் கூடம் ஒன்றில் மீன்கள் நீந்துவதைப் பார்த்துக் கொண்டிருந்த சில நோயாளர்கள், அக்காட்சியைப் பார்ப்பதற்கு அவகாசம் கிடைக்காத நோயாளர்களை விடப் பதற்றம் குறைந்தவர்களாகக் காணப்பட்டனர் என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றிலிருந்து தெரிய வந்துள்ளது. நெஞ்சுப்பைக் குருதி நாள நோயிலிருந்து குணமடைந்து வருவோரில் தம் செல்லப் பிராணிகளுடன் வாழ்வோர், தனியாக வாழ்வோரை விட, நோய்வாய்ப்பட்ட பின் ஐந்தாண்டுகளுக்கு வாழும் வாய்ப்புப் பெறக்கூடும் என்று மற்றோர் ஆய்வு காட்டுகிறது.

இவை, நாம் உள்ளுணர்வால் அறிந்துள்ளவற்றை விஞ்ஞான ரீதியாக எடுத்துக் காட்டும் அண்மைக்கால ஆராய்ச்சிக் காண்புகள் பலவற்றில் இரு உதாரணங்களாகும். எமது செல்லப் பிராணிகள் எமக்கு மகிழ்ச்சியூட்டுவதோடு அவற்றுடன் பொழுது போக்குவதை நாம் விரும்புகிறோம். அவை எமது கவலைகளைப் போக்க உதவுகின்றன. பிராணிகளுடன் பேசிக் கொண்டிருப்பதால் இரத்த அழுத்தம் குறைகிறது. ஒரு விலங்கைத் தடவிக் கொடுப்பதனால் அல்லது தூரிகையைக்கொண்டு சுத்தம் செய்வதாலும் இரத்த அழுத்தம் குறைகிறது. அத்துடன் மூச்சுவிடும் வேகம் குறைகிறது. நாடித் துடிப்பு வேகமும் குறைகிறது. விசாரத்தைப் போக்குவதற்கு எத்தனை சிறந்த வழி!

*நன்றி : 'அனிமல் வோட்ச்',*
*1992*

# மாற்றுவழிகளின் பெருக்கம் சித்ரா பெஸ்பரோடா: கைவிடப்பட்ட பிராணிகளின் தோழி

ஜெரி மேஸன்

அது ஞாயிற்றுக்கிழமை காலை வேளை; ஜன்னலுக்கு வெளியே பலத்த மழை பெய்து கொண்டிருக்கிறது. காலை உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த சித்ரா பெஸ்பரோடாவின் நெற்றியில் கவலையின் சுருக்கங்கள். அன்றைய தினம் வீட்டில் ஓய்வாக இருக்க வேண்டுமென அவர் தீர்மானித்துக் கொள்கிறார். ஆனால், காலை உணவை தனது தொண்டைக்குள் அனுப்பும் பொழுது வெளியில் பெய்து கொண்டிருக்கும் மழையை மீண்டுமொருமுறை நோட்டமிடுகின்றார். அன்றைய தினம் அவர் வெளியே போகாவிட்டால் அவருடைய நாய் உணவு உட்கொள்ளாமல், அன்பும் அரவணைப்புமின்றி வேதனைப்படக் கூடும். தனது சொந்த சௌகரியத்தை திருப்தி செய்து கொள்ள வேண்டுமென்ற அவருடைய தீர்மானம் உடனடியாகக் கரைந்து போகின்றது. அவர் வெளியே செல்வதற்கு ஆயத்தமாகின்றார்.

சித்ரா பெஸ்பரோடா நியூயோர்க் நகரின் கல்விச் சபையில் உளவியல் சிகிச்சை அளிப்பவராக பணிபுரிந்து வருகின்றார். உளரீதியில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுடன் அவர் பணியாற்றி வருகின்றார். மேலும், ஜீவகாருண்ணிய சங்கத்தின் மிக முக்கியமான ஓர் உறுப்பினராகவும் அவர் இயங்கி வருகின்றார். தனது சொந்த சமூக, பொருளாதார நெருக்கடிகளில் உழன்று தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு பெருநகரில், அவரது போராட்டம் வெளி உலகின் துளி கவனத்தையும் பெறாத நிலையிலும் கூட, இடையறாது முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. பாவனையிலிருந்து ஒதுக்கித் தள்ளப்பட்ட கழிவுப்பொருட்கள் குவிக்கப்பட்டிருக்கும் ஹார்லம் பகுதியே அவர் தெரிந்தெடுத்துள்ள போர்க்களமாகும். மனிதர்களால் புறக்கணித்து புறமொதுக்கப்பட்ட நாய்களுக்கு அவர் அன்பினையும் அரவணைப்பினையும் தருகிறார். ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளிலும் வார நாட்களில் வேலையின் பின்னரும் அவர் கழிவுப் பொருட்கள் குவிக்கப்பட்டிருக்கும் இந்த இடங்களை நோக்கி நடந்து செல்கிறார். அங்கு கைவிடப்பட்டிருக்கும் நாய்களுக்கு உணவூட்டிப் பராமரிக்கின்றார்.

பெஸ்பரோடாவின் பெற்றோர் இருவரும் பேராசிரியர்களாவார்கள். இலங்கையின் பௌத்த மேல் நடுத்தட்டு வர்க்கப் பின்னணியொன்றில் அவர் வளர்க்கப்பட்டார். இது அவரது உள்ளத்தில் விலங்குகள் மீது ஆழமான பரிவொன்றினை வேரூன்றச் செய்துள்ளது. புல்பிரைட் புலமைப் பரிசில் பெற்று 1964ல் அமெரிக்காவுக்கு வந்த சித்ரா சமூகப் பணியில் முதுமாணிப் பட்டம் பெற்றார். வெளிநாடுகளில் விரிவாகப் பயணம் செய்ததன் பின்னர், 1971ல் நியூயோர்க்கில் குடியேறினார்.

பணியிடத்தில், மதுபானத்துக்கு அடிமையானவர்கள், போதைமருந்து அடிமைகள், முன்னாள் மனநோயாளிகள் போன்றோருக்கிடையே அவர் வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்தச் சூழ்நிலையில், மிகவும் இழிவான நிலையில் வைக்கப்பட்டிருந்த செல்லப் பிராணிகள் தொகுதியொன்றை அவர் காண நேரிட்டது. பெஸ்பரோடா இந்தச் செல்லப் பிராணிகளின் சொந்தக்காரர்களிடம் விடுத்த வேண்டுகோள்கள் எவ்வித பலனையுமளிக்கவில்லை. அதனால் அவர் தானே முன்வந்து இந்த விலங்குகளை பராமரிக்கத் தொடங்கினார்.

குறிப்பாக, தட்டிக் கழிக்கப்பட்ட பொருட்கள் குவிக்கப்பட்டிருக்கும் கூடங்களில், தனியாரின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக விடப்பட்டிருக்கும் நாய்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை அவர் நேரில் கண்டார். தனக்கே உரிய தனித்துவமான மாதிரியைக் கொண்ட போராட்டத்தை இங்கு 1973ல் அவர் ஆரம்பித்தார். கடந்த இருபது வருட காலமாக நியூயோர்க் வீதிகளில், விலங்குகளுக்கான உணவுகளைத் தள்ளுவண்டியில் வைத்து அவர் தள்ளிக்கொண்டு செல்லும் காட்சி விலங்குப் பிரியர்களின் பெரும் அபிமானத்தைப் பெற்றுள்ளது.

ஆனால், சிலர் அவருடைய பணியைத் தவறாகப் புரிந்து கொண்டதுடன், அவர் மீது கடுமையான தாக்குதல்களையும் தொடுத்து வந்தனர். நகர வாழ்க்கையின் யதார்த்தமான பிரச்சினைகளை அவர் பார்க்கவில்லையென அவர்கள் குற்றம் சாட்டினார்கள். அவர்களை வென்றெடுக்கும் நோக்கில், விலங்குப் பராமரிப்புக்கான தனது பயணங்களில் அவர்கள் தன்னுடன் சேர்ந்து வரவேண்டுமென பல சந்தர்ப்பங்களில் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால், இந்த எதிர்ப்பாளர்கள் இந்த அழைப்புக்களை ஏற்கவில்லை. இந்த கழிவுப் பொருள் கூடங்களில் காவலுக்காக கட்டி வைக்கப்பட்டிருக்கும் நாய்கள் சொல்லொணாத துன்பங்களை அனுபவித்து வருகின்றன. சிறிய சங்கிலிகளினால் பிணைக்கப்பட்டிருக்கும் இந்தப் பிராணிகள் அங்குமிங்கும் அசையும்பொழுது சங்கிலி அவற்றின் கழுத்தினை நசுக்கி விடுகின்றது. நகர முடியாதிருக்கும் இந்தப் பிராணிகளினால், அவற்றின் மீது வேண்டுமென்றே இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை தவிர்த்துக் கொள்ள முடிவதில்லை. இந்த நிலையில் இத்தகைய பிராணிகளில் பெரும்பாலானவை ஆறு அல்லது ஏழு வயதை அடைய முன்னரேயே இறந்து விடுகின்றன என்று பெஸ்பரோடா தெரிவிக்கின்றார்.

கழிவுப் பொருள் கூடங்களில் இருந்துவரும் நாய்களுக்கு கருணை காட்டுவதனை உத்தரவாதப்படுத்தக்

கூடிய மிக முக்கியமான ஒரு வழி, நியூயோர்க்கின் சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரிகள் வகிக்க வேண்டியுள்ள பங்காகும். தற்பொழுது அமுல் செய்யப்பட்டுவரும் விலங்கு வதைத் தடுப்பு சட்டங்களுக்கு மேலதிகமாக நியூயோர்க் நகர சுகாதார அமைப்புக்கும் பொலிஸ் திணைக்களத்துக்கும் இடையே ஒரு கூட்டு முயற்சி இடம்பெற வேண்டுமென பெஸ் பராடோ கருதுகிறார். இந்த முறைக் கூடாக, கழிவுப் பொருட்கூடங்களை கண்காணிக்கவும் பதிவு செய்யவும் முடியும்.

உரிமம் பெற்றிராத நாய்களை வைத்திருக்கும் சொந்தக்காரர்களுக்கும், தமது சொத்துக்களுக்கு சரியாக வேலியமைத்திருக்காத நாய்ச் சொந்தக்காரர்களுக்குமெதிராக கடும் அபராதங்களை விதிக்க முடியும். மேலும், கழிவுப் பொருள் கூடங்களில் தடுப்பூசி ஏற்றாத நிலையில் நாய்களை வைத்திருக்கும் உரிமையாளர்களிடமிருந்து அமெரிக்க விலங்குவதைத் தடுப்புச் சங்கம் ஒரு கட்டணத்தை அறவிட முடியுமென அவர் கருதுகிறார். தான் சந்தித்துவரும் இந்த நிலைமைகள் சமூகத்தின் யதார்த்த நிலைமைகளிலிருந்தே தோன்றுகின்றன என்பது அவரது கருத்தாகும். அதாவது, தம்மைக் கைவிட்டிருக்கும் சமூகத்தின் மீது திரும்பத் தாக்குதல் தொடுப்பதற்கு சக்தியற்ற தனிநபர்கள், தமது கோபத்தை பிறிதொரு இடத்தில் வெளிப்படுத்திக் காட்டுவதனாலேயே இத்தகைய் நிலைமைகள் தோன்றியுள்ளதென அவர் சுட்டிக்காட்டுகிறார். மூன்று சந்தர்ப்பங்களில் தான் தாக்கப்பட்டதாக அவர் கூறுகின்றார். இப்பொழுது ஒரு தொண்டர் குழாம் அவருடைய பணிகளில் அவருக்கு உதவி வருகின்றது.

மறுபுறத்தில், அவர் 6 வயது தொடக்கம் 11 வயது வரையான உளவியல் ரீதியான பாதிப்படைந்த சிறுவர்களிடையே மேற்கொண்டு வரும் பணி, இந்த முயற்சிகளில் அவருக்கு ஊக்குவிப்பினை அளித்து வருகின்றது. விலங்குகள் மீது பரிவு காட்ட வேண்டிய அவசியத்தை இந்தப் பிள்ளைகளுக்கு அவர் போதித்து வருகின்றார். விலங்குகளைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்கான இயற்கையான உந்துதல்களை இப்பிள்ளைகள் கொண்டுள்ளனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இப்பிள்ளைகள் தமது பெற்றோரின் வீடுகளில் அடைக்கப்பட்டுள்ளதனால் இதனை அவர்களால் மேற்கொள்ள முடியாதுள்ளதென பெஸ் பரோடா கூறுகிறார்.

அமெரிக்க விலங்குவதைத் தடுப்புச் சங்கம், பெஸ்பரோடாவின் முயற்சிகளில் முழு அர்ப்பணிப்புடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. கழிவுப்பொருள் கூட நாய்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கு அவர் எடுத்துவரும் அனைத்து முயற்சிகளுக்கும் இச்சங்கம் தனது முழு ஆதரவினையும் அளித்து வருகின்றது. பெஸ்பரோடா இதுவரையில் திடசங்கற்பத்துடன் மேற்கொண்டுவந்திருக்கும் பாரிய பணி இப்பிரச்சினையை நிச்சயமாக பொது மக்களின் அரங்குக்கு எடுத்துச் செல்லும்

இது குறித்து மேலும் தகவல்களைப் பெற இந்த முகவரிக்கு எழுதவும்:

Sentient Creatures INC. P. o. Box. 765, Cathedral Station, New York.

## இஸ்லாம் - விலங்குகளின் நலனோம்பல்

### விலங்குகளும் அவற்றுக்குரிய கடமைகளும் முஹம்மத் (ஸல்) அவர்களின் நன்மொழிகள்

1. இறைவனை அஞ்சுங்கள். வாய் பேசாத விலங்குகளில் சவாரி செய்வதானால் அவை உடல் நலத்துடன் இருக்கையில் சவாரி செய்யுங்கள். அவை களைப்படைந்ததும் இறங்கி விடுங்கள்.

2. ஒரு விபச்சாரி ஒரு கிணற்றைக் கடந்து சென்றாள். கிணற்றடியில் ஒரு நாய் நாக்கை வெளியே துருத்திக் கொண்டு கடுமையான தாகத்தால் இறக்கும் தறுவாயில் இருப்பதைக் கண்டாள். அப்பெண் தனது காலணியைக் கழற்றி, அவளது அங்கியின் ஒரு நுனியில் கட்டி கிணற்றுக்குள் இறக்கி தண்ணீர் மொண்டு, அந்த நாய்க்கு அருந்தக் கொடுத்தாள். அதன் காரணமாக அவளது பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

3. ஒரு பெண் ஒரு பூனையை அது இறக்கும் வரை கட்டி வைத்திருந்ததற்காகத் தண்டிக்கப்பட்டாள். அவள் பூனைக்குத் தின்பதற்கு எதுவும் கொடுக்கவுமில்லை. உணவைத் தேடிக் கொள்வதற்கு அதனை அவிழ்த்து விடவுமில்லை.

4. "நாற்கால் விலங்குகளுக்கு நன்மை செய்வதாலோ அவற்றுக்குக் குடிப்பதற்கு நீர் கொடுப்பதாலோ எமக்கு நன்மை கிடைக்குமா?" என்று கேட்கப்பட்டது. "உயிருள்ள எந்த விலங்குக்கும் நீங்கள் அன்பு காட்டினால் நிச்சயம் இறைவனிடம் உங்களுக்கு வெகுமதியுண்டு" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

5. நிச்சயமாக இறைவனிடம் நூறு மடங்கு அன்பான இரக்கமுண்டு. அதில் ஒரு பங்கையே மனிதன் மீதும், நாற்கால் விலங்குகள் மீதும் உலகில் காணப்படும் அசையும் பொருள் ஒவ்வொன்றின் மீதும் அருளியுள்ளான். அதன் மூலம் ஒன்றன் மீது ஒன்று அன்பு செலுத்துகிறது. ஒன்றையொன்று மன்னிக்கிறது. அதனால் வனவிலங்குகள் தம் குட்டிகள் மீது அன்பு செலுத்துகின்றன. இறைவன் அவனது அன்பு நிறைந்த இரக்கத்தின் 99 பங்குகளைத் தன்னிடம் வைத்துள்ளான். அதனைக் கொண்டு அவன் இறுதி நாளன்று தனது படைப்புகள் மீது கருணை புரிவான்.

6. ஒரு கம்பளத்துடன் இறை தூதர் சன்னிதானத்துக்கு ஒருவர் வந்து பின்வருமாறு கூறினார்: "இறை தூதர் அவர்களே! நான் ஒரு காட்டு வழியாகச் சென்று கொண்டிருக்கையில் பறவைக் குஞ்சுகள் சத்தமிடுவதைக் கேட்டேன். அவற்றைப் பிடித்து எனது கம்பளத்தில் வைத்துச் சுருட்டிக் கொண்டேன். அவற்றின் தாய் என் தலையைச் சுற்றிச் சுற்றி சிறகடித்துக் கொண்டு பறந்து வந்தது. நான் கம்பளத்தை விரித்துக் குஞ்சுகளைக் கீழே விட்டேன். தாய்ப் பறவை அவற்றின் மீது வந்து விழுந்தது. மீண்டும் அவற்றைக் கம்பளத்தில் சுற்றிக் கொண்டேன். அதோ அவைதான் அந்தப் பறவைக் குஞ்சுகள்". அப்பொழுது இறைதூதர் "அவற்றைக் கீழே விடும்" என்றார்கள். கீழே விட்டவுடன், தாய்ப்பறவை குஞ்சுகளுடன் சேர்ந்து கொண்டது. பின்னர் இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தாய்க்கு அதன் குஞ்சுகள் மீதுள்ள பாசத்தைக் கண்டு நீர் ஆச்சரியப்படுகிறீரா? என்னை அனுப்பியவன் மீது ஆணையாக இக்குஞ்சுகள் மீது தாய்ப்பறவை காட்டும் அன்பைவிட இறைவன் தனது படைப்புகள் மீது அதிக அன்பு கொண்டவனாவான். அவற்றை எடுத்த இடத்திலேயே கொண்டுபோய் விட்டுவிடும். தாய்ப்பறவை குஞ்சுகளுடன் சேர்ந்து இருக்கட்டும்."

7. குர்ஆனின் கூற்றுப்படி இறைவனுடைய பார்வையில் மிருக உயிரும் மனித உயிரைப் போன்றே கணிக்கப்படுகிறது. "பூமியில் (நடமாடும்) மிருகங்களும் சிறகடித்துப் பறக்கும் பறவைகளும் (மனித இனமாகிய) உங்களைப் போன்றன்றி வேறில்லை". (VI: 88)

# ஒழுங்கு விதிகளா? அல்லது மாற்று ஆராய்ச்சியா?

ஜோன் பெற்றிசியானி இதல் தோர்ஸ்டன்

*டாக்டர் பெற்றிசியானி, ஆராய்ச்சிக்கு விலங்குகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மாற்று வழிகளை கண்டறிவதற்கான அமெரிக்க நிதியத்தின் விஞ்ஞான ஆலோசகராவார். டாக்டர் தோர்ஸ்டன் இந்த நிதியத்தின் அறங்காவலராவார்.*

ஆராய்ச்சியிலும் பரிட்சார்த்தங்களிலும் விலங்குகளைப் பயன்படுத்துவது குறித்து இப்பொழுது பொதுமக்களிடையே பரவலான விவாதமும் எதிர்ப்பும் நிலவிவரும் அதேவேளையில், இந்த விடயம் குறித்து பெருமளவுக்குத் தப்பபிப்பிராயங்களும் காணப்படுகின்றன. விலங்குரிமை இயக்கங்களுக்கிடையே மூன்று பரஸ்பர பிரத்தியேக அணுகுமுறைகளின் அடிப்படையில் இந்த விவாதமும் கருத்து வேறுபாடும் நிலவி வருகின்றது. (1) சட்டவாக்கத்துக்கூடாக விலங்குகளைப் பயன்படுத்தும் முறையை ஒழுங்குபடுத்தல்; (2) விலங்குகளை ஆய்வுக்காகப் பயன்படுத்துவதை முற்றாக ஒழித்தல்; (3) விலங்குகளுக்குப் பதிலாக வேறு மாற்று வழிமுறைகளுக்கான தேடல். மேற்குறிப்பிடப்பட்ட மூன்று அணுகுமுறைகளில் ஏதாவதொன்று மட்டுமே மிகச் சிறந்ததென்று கூற முடியாது. சிக்கலான பிரச்சினைகளுக்கு எளிமையான தீர்வுகள் கிட்டுவதில்லை. இந்த அனைத்து முயற்சிகளினதும் இறுதி நோக்கம் "ஆராய்ச்சி" என்ற பெயரில் விலங்குகள் வதைக்கப்படுவதை தவிர்த்துக் கொள்வதாகும். இதனை நாம் எமது சமூகத்தின் குறிக்கோளொன்றாக முன்வைப்போமேயானால் அதற்குப் பொதுமக்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த தசாப்தம் வரையில் ஐக்கிய அமெரிக்காவில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகள் அனைத்தும் ஆராய்ச்சி விலங்குகளுக்கு அதிக பாதுகாப்பு அளிக்கும் நோக்கிலேயே வழிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த முயற்சிகள், ஏற்கனவே, ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படும் விலங்குகளின் எண்ணிக்கையை குறைத்துவிட்டுள்ளன. நாஸி ஜேர்மனியின் மருத்துவத் துறைக் கொடூரங்கள் கண்டறியப்பட்டதனை உடனடுத்து, மனிதர்களைச் சம்பந்தப்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சித்துறை குறித்தும் இந்த அணுகுமுறையே மேற்கொள்ளப்பட்டது. மருத்துவ ஆராய்ச்சியில் மனிதர்களைப் பயன்படுத்துவது குறித்து சமூகம் காட்டி வந்த அக்கறையின் விளைவாக, இவ்விதம் ஆய்வுக்குட்படுத்தப்படும் நபர்களை பாதுகாப்பதற்கென தொடர்ச்சியாக ஒழுங்குவிதிகள் வகுக்கப்பட்டுக் கொண்டு வந்தன. அதேபோல ஆராய்ச்சிக்காக விலங்குகளைப் பயன்படுத்துவது குறித்தும் மேற்கொள்ளப்படவிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியும். தற்பொழுது விலங்குகளை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துவது தொடர்பாகக் காணப்படும் ஒழுங்குவிதிகள், அனைத்து வகையான விலங்குகளுக்கும் சமமான பாதுகாப்பினை அளிப்பதில்லை. உதாரணமாக, தற்போதைய விலங்கு நலன்புரிச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில வகையைச் சேர்ந்த பாலூட்டி விலங்குகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்பொழுது அமெரிக்கக் காங்கிரஸ் கவனத்தில் எடுத்துவரும் வல்கிரம் மசோதா தற்போதைய விலங்கு நலன்புரிச் சட்டத்தில் உள்ளடக்கப்படாத இலட்சக்கணக்கான எலிகள் மற்றும் சுண்டெலிகள் என்பவற்றையும் உள்ளடக்கியதாகவுள்ளது. எனினும், இந்த மசோதா பாலூட்டி விலங்குகள் அல்லாத ஏனைய வகையைச் சேர்ந்த விலங்குகளுக்குப் பாதுகாப்பினை அளிக்கவில்லை. விலங்கு ஆராய்ச்சி தொடர்பான ஒழுங்குவிதிகள், உலகம் தழுவிய ரீதியில் ஆராய்ச்சி விலங்குகளுக்குப் பாதுகாப்பினை அளிக்கவில்லையாயினும் ஆகக் குறைந்தது ஒரு சில விலங்குகளுக்கேனும் அது பாதுகாப்பினை அளித்துள்ளது. விலங்குகளை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துவது தொடர்பான ஒழுங்குவிதிகள் காலப்போக்கில் மேலும் விருத்தியடைய முடியுமென நாங்கள் எதிர்பார்க்க முடியும். விலங்கு நலன்புரிச் சட்டம் (1966) ஏற்கனவே திருத்தியமைக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் அணுகுமுறைகள் தொடர்ந்தும் மாற்றமடைந்து வருவதனால் இச்சட்டங்களில் எதிர்காலத்தில் மேலும் பல சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட முடியும்.

சில தனி நபர்கள், சமய அல்லது மெய்யியல் காரணங்களுக்காக எந்தவொரு விலங்கினையும் பிறருக்கு மட்டும் நன்மை தரக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது நியாயமற்றது என்று கருதி வருகின்றனர். இவர்களில் சிலர் இதற்கான ஒரே தீர்வு, விலங்குகளை ஆராய்ச்சியில் பயன்படுத்துவதனை முற்றிலும் ஒழித்துவிடுவதாகுமென்று கூறி வருகின்றனர். வேறு எந்த மாற்று முறைகளையும் அவர்கள் நிராகரிக்கின்

றார்கள். இந்த அணுகுமுறை கடந்த காலத்தில் தோல்வி கண்டுள்ளது. புதிய இரசாயனப் பொருட்களையும் ஏனைய உற்பத்திப் பொருட்களையும் அபிவிருத்தி செய்யும் முயற்சிகளுக்குப் பொதுமக்கள் ஆதரவளித்து வருகின்றனர். இந்தப் புதிய உற்பத்திகள் சார்புரீதியில் பாதுகாப்பானவை என்பதனைக் கண்டறிவதற்கு அவற்றை ஏதோ ஒரு வழியில் பரீட்சிக்க வேண்டியுள்ளது.

மேலும், புதிய மாற்று வழிமுறைகள் கண்டறியப்படும் வரையில், விலங்குகளைக் கொண்டு இந்தப் பாதுகாப்பு பரீட்சார்த்தங்களை மேற்கொள்வதனையும் பொதுமக்கள் ஆதரித்து வருகின்றனர். எனவே, இந்த ஆராய்ச்சி முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என வாதிட்டு வருபவர்கள், பண்டைய ரோமாபுரியில் அடிமை முறைக்கெதிராக இருந்த பிரஜைகளைப் போன்றவர்களாகவே உள்ளனர். ரோமாபுரியில் உடனடியாக அடிமை முறையை ஒழிக்க முடியவில்லை. ஏனெனில், அவ்விதம் செய்வதாக இருந்தால், அடிமை முறையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த முழு ரோமானியப் பேரரசிலும் பேரளவிலான ஒரு சீர் குலைவு உருவாகியிருக்கும். மேலும், "நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் காட்டுமிராண்டிகளை அடிமைப்படுத்துவது நியாயமானது" என்ற வகையில் அரிஸ்டோட்டில் ஒரு தார்மீகக் கோட்பாட்டினை முன்வைத்திருந்தார். பெரும்பாலான சமகால சமுதாயங்கள் அந்தத் தர்க்கவியலை நிராகரித்த போதிலும், ரோமப் பேரரசின் காலத்தின் அறநெறி சார்ந்த பிரச்சினைகள் இன்று நிலவி வரும் அளவுக்கு தெளிவானதாக இருக்கவில்லை என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. எனினும் அன்றைய ரோமப் பேரரசில் இந்த விஷயத்தில் பெரும்பான்மையினருடன் முரண்பட்டிருந்த சிறுபான்மைக் குழுவொன்றும் இருந்து வந்தது. இறுதியில் சிறுபான்மையினரின் அந்த நிலைப்பாடு பெரும்பான்மையினரின் நிலைப்பாடாக மாற்றமடைந்தது. ஆனால், இன்று சுமார் 2000 வருடங்களின் பின்னரும் கூட உலகில் ஆங்காங்கே அடிமை முறை நிலவி வருகின்றது. இதேபோல ஆராய்ச்சிக்கு விலங்குகளைப் பயன்படுத்தும் முறை உடனடியாக ஒழிக்கப்படமாட்டாது. ஏனெனில், இம்முறையை உடனடியாக நிறுத்தி விடுவதற்கு பொதுமக்கள் விரும்பவில்லை.

"உணவுக்காகவோ சமயரீதியான பலிக்காகவோ அல்லது மருத்துவத் துக்காகவோ விலங்குகள் கொல்லப்படக் கூடாது" என சுமார் 1800 வருடங்களுக்கு முன்னர் நியோபுலோடோனிஸ்டுகள் குரல் எழுப்பினார்கள். ஆனால், விலங்குகள் பகுத்தறிவு பெற்ற ஆத்மாக்களாக இருக்கவில்லையென்றும், அதனால் அவற்றுக்கு உரிமைகள் இல்லை என்றும் தோமஸ் அக்குவய்னாஸ் முன்வைத்த தார்மீக தர்க்கமுறை, பெரும்பாலான மனித முயற்சிகளில் விலங்குகளை எவ்வித கரிசனையுமின்றி பயன்படுத்துவதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. இன்னமும் கூட, அக்குவினாஸின் கருத்தைக் கொண்டிருக்கும் ஒரு சிலர் சமகால சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அவர்களை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. அத்துடன், பெரும்பான்மையினர், இந்தக் கருத்தை தாம் நம்புவது போலவே செயற்பட்டு வருகின்றனர். ஆனால், பெரும்பான்மையிலிருந்தும் வேறுபட்ட முறையில் இந்தப் பிரச்சினையை அணுகி வரும் ஒரு சிறுபான்மைக் குழுவினரும் இருந்து வருகின்றனர். இதன் விளைவாக சமூக முரண்பாடொன்று நிலவி வருவதுடன் பெரும்பான்மையினரின் கருத்தில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டு வருகின்றது.


ஆராய்ச்சியிலும் பரீட்சார்த்தங்களிலும் பயன்படுத்தப்பட்டு வரும் விலங்குகளின் எண்ணிக்கையில் புதிய ஒழுங்குவிதிகள் கணிசமான தாக்கம் எதனையும் எடுத்து வரப்போவதில்லை. மேலும் இம்முறையை முற்றாக ஒழித்து விடுவது உடனடி எதிர்காலத்தில் சாத்தியமானதாகவும் இருக்கவில்லை. எனவே, இந்த நிலையில் எம்முன் இருக்கும் தர்க்கரீதியான அடுத்த நடவடிக்கை நடுத்தர மட்டத்திலான சில முயற்சிகளாகும். இந்த முயற்சிகள், முதலில், பயன்படுத்தப்படும் விலங்குகளின் எண்ணிக்கையில் குறைகளை எடுத்து வந்து, இறுதியில் முழுஅளவில் பதிலீடுகளை எடுத்துவரக்கூடியதாக இருக்கும். இந்த இடத்தில்தான் மாற்றுவழி முறைகளுக்கான ஆராய்ச்சி முக்கியத்துவம் பெறுகின்றது.

மாற்றுவழி முறைகளுக்கான ஆராய்ச்சி சார்புரீதியில் ஒரு புதிய அணுகுமுறையாகவுள்ளது. எனவே, அது உடனடியாக பெறுபேறுகளை எடுத்துவரும் என்று கூறுவதற்கில்லை. எனினும், நீண்ட காலத்தில் இந்தப் பதிலீட்டு அணுகுமுறை பெரும்பாலான விலங்குகளுக்குப் பதிலீடுகளை வழங்கக் கூடியதாக இருக்கும். ஆனால், பல்வேறு பரீட்சார்த்தங்களிலும் விலங்குகளுக்குப் பதிலாகப் பயன்படுத்துவதற்கு உறுதியான மாற்றீடுகள் கண்டறியப்படுதல் வேண்டும். தற்பொழுது நிலவி வரும் பெரும்பாலான மாற்றீடுகள் குறைபாடுகளைக் கொண்டதாகவே இருந்து வருகின்றன. இந்த முயற்சிகளுக்கு மேலதிக செலவும், ஆளணியினரும் கால அவகாசமும் தேவையாகும்.

இத்தகைய மாற்றுவழிகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தகுதி வாய்ந்த விஞ்ஞானிகளுக்கு நிதி உதவிகளை வழங்கி அமெரிக்க நிதியம் உதவி வருகின்றது. விலங்குகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுவரும் சில பரீட்சார்த்தங்களுக்கு மிக எளிதில் பதிலீடுகளை உருவாக்கிக் கொள்ள முடியும். எனினும், சில மாற்று வழி முறைகளை அவ்வளவு எளிதில் உருவாக்கிக் கொள்ளமுடியாது.

ஆராய்ச்சியில் மனிதர்களையும் விலங்குகளையும் பயன்படுத்துவது மிகவும் சிக்கலான, உணர்வுபூர்வமான ஒரு சமூகப் பிரச்சினையாக இருந்து வருகின்றது. குறிப்பிட்ட சில ஆராய்ச்சிகளில் இந்தத் தேவை இருந்து வரும் வரையில் இவ்விதம் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு வரும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பாதுகாப்பினை அளிப்பதற்குச் சில ஒழுங்குவிதிகள் இருத்தல் அவசியமாகும். இப்பிரச்சினைக்கான தீர்வுகளை படிப்படியான முறையிலாயே உருவாக்கிக் கொள்ள முடியும். பொதுமக்கள் இந்த விடயம் குறித்து சரியான புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளும் பொழுது, மாற்றுவழிகளைக் கண்டறிவதற்காக விலங்குரிமை ஆதரவாளர்களும் விஞ்ஞானிகளும் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு தமது ஆதரவினை வழங்குவார்கள்.

(இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் கட்டுரையாசிரியர்களின் தனிப்பட்ட கருத்துக்களாகும்)



# மாற்று வழிகளின் பெருக்கம்

**விலங்கு உரிமைகள் சர்வதேசக் கூட்டமைப்பு இணைப்பாளரின் (ஹென்றி ஸ்பைரா) 1988ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் சில பகுதிகள்**

ஓரளவுக்கு எமது முயற்சிகளின் விளைவாக, 1987 ஏப்ரல் 9ஆம் தேதி நியுஜெர்ஸியில் நடைபெற்ற மிகவும் பிரசித்தப்படுத்தப்பட்ட கூட்டமொன்றில், பன்னிரண்டு முன்னணி நச்சியல் வல்லுநர்கள் சந்தித்தனர். இவர்களுடன் சமஷ்டி ஒழுங்கமைப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்குபற்றினர். சாதனைகளை மதிப்பிடுவதற்காகவும், நஞ்சூட்டி நடத்தப்படும் பரீட்சார்த்தங்களில் விலங்குகள் பயன்படுத்தப்படுவதற்கு மாற்றீடாக என்ன செய்யலாம் என்பதை ஆராய்வதற்காகவும் இக்கூட்டம் நடத்தப்பட்டது.

பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என நாம் நம்பும் இக்கூட்டத்தின் பக்க விளைவு மொபில், ஹொப்மன்லா றேக், எக்ஸன் கம்பெனிகளின் முன்னணி நச்சியலாளர்கள் கூட்டாக மேற்கொண்ட முன் முயற்சியாகும். உடனடியாக செயலில் பிரயோகிக்கத்தக்க நடைமுறை எவையுமிருப்பின் அவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு நச்சியல் ஆய்வுகூடங்களுக்கு இவ்வாண்டுத் தொடக்கத்தில் அழைப்பு விடுத்திருந்தனர். இவ்வாறான தொழில்நுட்ப இடமாற்றம் உடைமையுரிமைத் தகவல் அச்சுறுத்தப்படாத வகையில் கையாளப்படும். ஆகையால் இத்திட்டத்தில் அதிகமானோர் பங்குகொள்வர்.

இத்தகைய நிலையிலுள்ள விஞ்ஞானிகள் இப்பிரச்சினையில் ஈடுபடுகையில், போராட்டத்தின் பெரும்பகுதி வெல்லப்பட்டு விடும் என்று நாம் கருதுகிறோம். மாற்றுவழிகளைத் தேடுவதும் அமுல் நடத்துவதும் இப்பொழுது நாட்டின் முன்னணி நச்சியலாளர்களின் நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதியாகிவிட்டது.

## நச்சியல் கூட்டு முயற்சியில் சக்திகளை ஒரு முகப்படுத்தல்

புரொக்டர் அன்ட் காம்பில் தாபனம் அதன் எல்டீ 50 க்குரிய பதிலீட்டை ஏற்கச் செய்வதற்கு விடாப்பிடியாக முயற்சி செய்துள்ளது. அத்துடன் பிறெஸ் முயற்கண் பரீட்சைக்குரிய மாற்றீடுகளை மதிப்பிடுவதற்கான ஒழுங்கு படுத்தல் கூட்டங்களை எம்முடன் சேர்ந்து மேம்படுத்துவதில் பங்குபற்றியுள்ளது. பிறப்புக் குறைபாடுகள்,புற்றுநோய்க் காரணிகள், சுவாசப்பைச் சேதம், கண்ணெரிவு, சருமம், சுவாச ஒவ்வாமை போன்றவற்றுக்கான (விலங்குகளுட்படாத) பரீட்சார்த்தங்களை விருத்தி செய்யும் முயற்சிக்கு பி அன்ட் ஜி கம்பெனி நிதியளிக்கிறது. அத்துடன், கைத்தொழில், கல்விக் கழக, ஒழுங்கமைப்புத் துறைகளுக்கு நெறிப்படுத்தப்பட்ட மாற்றீடுகளை வழங்கவும் ஒழுங்கு செய்துள்ளது.

மொபில் கம்பெனி ஒரு கம்ப்யூட்டர் முறையை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் மிருகங்கள் மீது பரீட்சை நடத்தாமல் 95-98 சதவீத புதிய ஆக்கங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. அத்துடன் நாட்பட்ட சருமப் புற்று நோய்க்கான மிருகப் பரீட்சைகளுக்குப் பதில் பக்றீரியா பரீட்சைகளை நடத்துகின்றனர். மொபில் கையாளும் இம்முறை காரணமாக ஆண்டொன்றுக்கு 30,000 மிருகங்கள் காப்பாற்றப்படலாம்.

கோல்கேட் பாமொலிவ் நிறுவனம், பரீட்சைகளுக்கு மிருகங்களைப் பயன்படுத்துவதை ஆறு ஆண்டுக் காலத்தில் 80 சதவீதத்தால் குறைத்துவிட்டதாக அறிவித்துள்ளது. இக்கம்பெனி, நச்சியல் சங்கத்துடன் இணைந்து "மாற்றுமுறை ஆராய்ச்சி" பட்டப் பின் படிப்பு புலமைப் பரிசில் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

ஹொப்மன் - லாறோச் கம்பெனி ஒரு தீவிர மீள்பார்வை முறையை உருவாக்கி நடைமுறைப்படுத்துகிறது. இம்முறையில் விலங்குகளை உட்படுத்திப் பரீட்சைகள் நடத்துவதற்கான திட்டங்கள் மதிப்பீடு செய்து, செம்மையாக்கப்பட்டு, இறுதியாக மீள்பார்வை செய்யப்படுகின்றன. இதன் பயனாக மிருகங்களைப் பயன் படுத்துவது ஏழாண்டுக் காலத்தில் 67 சதவீதமாகக் குறைந்துள்ளது என றோச் அறிவித்துள்ளது.

எவொன் நிறுவனம், சென்ற ஆறு ஆண்டுக் காலத்தில் மிருகங்கள் பரீட்சைக்கு பயன்படுத்தப்படுவது 72 சதவீதத்தால் குறைந்துள்ளது என அறிவித்துள்ளது. இது ஒரு கம்ப்யூட்டர் முறையைக் கையாள்வதன் மூலம் சாதிக்கப்பட்டுள்ளது. இம்முறை காரணமாக ஆராய்ச்சியாளர்கள் மேலதிக மிருக பரீட்சைகள் நடாத்தாமலேயே 90 சத வீதமான ஆக்கங்களை அங்கீகரிக்க முடிகிறது. ஒரு மூன்றாண்டு ஒவ்வாமை பரிசோதிக்கும் திட்டத்துக்கும் இக் கம்பெனி நிதியளித்துள்ளது. நோய் எதிர்ப்புச் சக்தியியலில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக, இத்துறையில் புதிய மாற்று வழிகளைத் துரிதமாக உருவாக்கலாம் என்று அவொன் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

பிரிஸ்டல் மெயர்ஸ் நிறுவன முயற்சி, இறுதியாகச் சந்தைப்படுத்த முடியாதனவாக ஆகும் பொருட்களை மிருகங்கள் மீது பரீட்சிப்பதை நீக்கும் ஒருவகைத் திரைகளை உருவாக்குதலை உள்ளடக்கியுள்ளது. இதன் மூலம் காய்ச்சலைக் குறைக்கும் பதார்த்தங்கள் இல்லாதிருப்பது உறுதிப்படுத்தப்பட்டு, முயல்கள் மீது பரீட்சை நடத்துவதற்கு மாற்றீடாக்கப் படுவதோடு, இப்பரீட்சைகள் ஊட்டச் சத்து ம. கே. ஆகியவை அடங்கிய போசாக்கூட்டும் பொருட்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டு வந்தன.

## ஐ. அமெரிக்க சமஷ்டி முயற்சிகள்

தேசிய சுகாதார நிறுவனம், ஆய்வுகூட மிருகங்களின் துன்பத்தைக் குறைப்பதற்கு 10 இலட்சம் டொலர்களை ஒதுக்கும். இது, இத் துறை மிகவும் அக்கறை காட்டப்படும் ஒரு துறை என்பதை உயிர் மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்குத் தெளிவாகக் காட்டும் ஒரு சமிக்ஞையாகும்.

நுகர்வு உற்பத்திப் பொருள் பாதுகாப்பு ஆணைக்குழுவும் மாற்றீடுகள் பற்றிய அதன் கொள்கைகளை மீளாய்வு செய்கிறது. ஆணைக் குழுத் தலைவர் டெரன்ஸ் ஸ்கன்லன், "எல்லாவற்றுக்கும் பொருத்தமான மாற்றீடுகள் உருவாக்கப்படும் வரை காத்திருப்பதற்குப் பதில் குறித்த சில உற்பத்திப் பொருள் வகைகளுக்கு அல்லது இரசாயனப் பொருள் வகைகளுக்கான மாற்றீட்டுப் பரீட்சைகளை அவை செல்லுபடியானவையாக ஆக்கப்படும் பொழுதே ஏற்றுக் கொள்ளும் சாத்தியக் கூறு பற்றி ஆணைக்குழு ஆராய்வதாக" அண்மையில் கூறினார். ஒரு மாற்றீடு எல்லா இரசாயனப் பொருட்களுக்கும் பொருந்துவதாதல் வேண்டும் என்ற கோரிக்கை, மாற்றீடுகளை நடைமுறையில் ஏற்றுக் கொள்வதற்கு ஒரு பெருந்தடைக் கல்லாக இருந்து வந்துள்ளது.

தேசிய புற்றுநோய் நிறுவனம், ஒரு புதிய பரிசோதனைக் குழாய்த் திரையை உருவாக்கியுள்ளது. இதில் பல்வகை மனிதப் புற்றுநோய்க் கலங்களுக்கெதிரான செயற்பாட்டை அறிவதற்காகப் பெருந் தொகையான பதார்த்தங்கள் பரீட்சிக்கப்படுகின்றன. இத்திரை பழைய பரீட்சையைவிடச் செலவு குறைந்ததும் அதிக

திட்டவட்டமானதும் மட்டுமன்றி, பரீட்சைக்காகப் பயன்படுத்தப்படும் மிருகங்களின் எண்ணிக்கையையும் குறைக்கிறது. புற்றுநோய்க்கு எதிரான எதிர்காலத்தில் உற்பத்தி செய்யப்படக் கூடிய கலவைகளின் எண்ணிக்கையை ஆண்டொன்றுக்கு 10,000 - 20,000 ஆக அதிகரித்துள்ளது.

இது போன்ற பாரிய அளவில், தேசிய நச்சியல் நிகழ்ச்சித் திட்டமும் பரீட்சைகளுக்கு மிருகங்களைப் பயன்படுத்துவதை மாற்றி அமைப்பதற்கும் மாற்று வழிகளைக் காண்பதிலும் பெரும் முன்னேற்றம் கண்டு வருகிறது. சுற்றாடல் சுகாதாரக் கேடுகளை இனங்காண்பதற்கான புது முறைகளை உருவாக்கிச் செல்லுபடியாக்குவதற்குரிய நிகழ்ச்சித் திட்டமொன்றினூடாக இது செய்யப்படுகிறது. இவ்வாறான முன்னேற்றம் அடையப் பெறினும் இன்னும் எவ்வளவோ செய்யப்பட வேண்டியுள்ளது என்பதை அண்மைய நிகழ்ச்சிகள் சில எடுத்துக் காட்டியுள்ளன.

எல்டீ 50, டிரெயிஸ் பரீட்சைகளைத் தடை செய்வதற்கான அரச சட்டவாக்கத்தைத் தோற்கடிப்பதற்கு பாரிய கம்பனிகளும் வர்த்தக சங்கங்களும் பெருந்தொகையான வளங்களை ஒதுக்கியுள்ளன. துரதிர்ஷ்டவசமாக, இவற்றிற் பல, மாற்று வழிகளை உருவாக்கிச் செயற்படுத்துவதற்கு இத்தகைய வளங்களைப் பயன்படுத்துவதில்லை.

ஓர் ஒப்பந்த நிறுவனமான "பயோ ரிசேர்ச்" எனும் நிறுவனம் உணர்வுள்ள மிருகங்களை வேதனைமிக்க அனாவசியமான நடைமுறைகளுக்கு உட்படுத்துவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இம்மிருகங்களுக்குப் போதிய உணவும் நீரும் கொடுக்கப்படுவதில்லை என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன், பொதுமக்களின் ஆக்ரோசத்தைக் கிளப்பிவிட்ட ஒரு பிரசார இயக்கம் நடைபெற்றதைத் தொடர்ந்து பாதுகாப்புத் திணைக்களம் நாய்களையும் பூனைகளையும் சுடுவதற்குப் பதில் பன்றிகளையும் ஆடுகளையும் சுடத் தொடங்கியது. இதனைத் தமக்கு ஒரு பெரும் வெற்றியாகச் சில மிருகப் பாதுகாப்பாளர்கள் கொண்டாடினர். இப்பொழுது இத் திணைக்களம் லூசியானா பல்கலைக் கழகத்தில் மூளைக்கு ஏற்படும் காயம் தொடர்பான பரிசோதனைக்காக நூற்றுக் கணக்கான பூனைகளைச் சுடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாயமான வெற்றிகளைப் பற்றி எச்சரிக்கையாக இருப்பதும், பிரசாரங்களைத் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு அளவிடத்தக்க நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவதும் அவசியம் என்பது தெளிவு.

*நன்றி : விலங்கு விடுதலை சஞ்சிகை*

---

*(15 பக்கத் தொடர்ச்சி)*

உயிர் அணுக்களையும் விலங்குகளில் வளர்க்க முடியாத நிலை, உயிர் அணுக்கள் வளர்வதற்கு நீண்ட காலமெடுத்தல் போன்றவற்றையும் இவை உள்ளடக்குகின்றன. பெருங்குடல் புற்றுநோய் விலங்குகள் மீது 100 சதவீதம் கழலைகளை ஏற்படுத்தின என்றும், ஒரு விலங்கின் மீது பத்து இலட்சம் உயிர் அணுக்கள் செலுத்தப்படும் போதே இவ்விதம் ஏற்படுகின்றது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், இதை விடக் குறைந்த அளவில் உயிர் அணுக்கள் ஏற்றப்பட்ட பொழுது, சுண்டெலிகளிலும் பார்க்க பெரிய எலிகள் அதிகளவுக்கு கழலைகளை உருவாக்கிக் கொள்ளும் போக்கினை காட்டியது தெரியவந்தது. மேலும், பத்து இலட்சம் உயிர் அணுக்கள் ஏற்றப்பட்ட நிலையிலும் கூட பெரிய எலிகள் சுண்டெலிகளிலும் பார்க்க அதிகளவுக்கு சுறுசுறுப்பைக் காட்டின.

நம்பகமான மாற்று பரிசோதனையொன்றை வளர்த்தெடுப்பது புற்றுநோய் ஆராய்ச்சியில் மிகுந்த பயனுள்ளதாக இருக்குமென்று தெரியவந்தது. இச் சந்தர்ப்பத்தில் ஜோன் பெற்றிஸியானி யூகோஸ்லாவியாவுக்கு ஒரு பரிமாற்ற விஜயத்தை மேற்கொண்டார். அந்த விஜயத்தின் பொழுது, கருவிலிருக்கும் கோழிக்குஞ்சுகளின் தோல் மீது பரவக் கூடிய புற்றுநோய் உயிரணுக்களின் ஆற்றலை அளவிடக்கூடிய ஓர் அங்கீவியினை வளர்க்கும் முறையை டாக்டர் பெக் அவருக்கு எடுத்துக் காட்டினார். டாக்டர் பெற்றிஸியானி இதனை எனக்கு எடுத்துக்கூறி, இந்த முயற்சியில் ஈடுபடுமாறு எனக்கு ஊக்கமூட்டினார். மேலும், இந்தச் செய்திட்டத்தில், எனது ஆய்வு கூடத்தில் ஒரு பட்டதாரி மாணவர் பணி புரிவதற்கான நிதி உதவியையும் அவர் டௌடிங் பிரபு நிதியத்திலிருந்து பெற்றுத் தந்தார். இந்தக் கொடையின் பொதுவான கோட்பாடுகளுக்கு இணங்கிய விதத்தில், இந்த மாணவர் விலங்குகள் மீதான பரீட்சார்த்தங்களில் ஈடுபடவில்லை.

பரீட்சிக்கப்பட வேண்டிய உயிர் அணுக்கள் ஒரு சாதாரண ஜீவிக்குள் தடுப்பூசி மூலம் ஏற்றப்பட்டு, அந்த மூலக் கூறுடன் செயற்படுவதற்கு அவை விடப்பட்டமையே இந்த முறையின் அடிப்படை வழிமுறையாக இருந்தது. புற்றுநோயிலிருந்து பெறப்பட்ட உயிர் அணுக்கள் வளர்ச்சியடைந்து சாதாரண திசுக்களில் பரவும் அதே வேளையில், சாதாரண உயிரணுக்கள் அவ்விதம் பரவுவதில்லை என்பதே இங்குள்ள எடுகோளாகும். கருவிலிருக்கும் ஒன்பது நாள் வயதுடைய கோழிக்குஞ்சுகளின் முதுகிலிருந்து சிறு தோல் பகுதிகள் பெறப்பட்டு இந்தத் தோல் பகுதிகள் ஊட்டமளிக்கும் கூழ்மீது வைக்கப்படுகின்றன. பரீட்சிக்கப்பட வேண்டிய உயிர் அணுக்கள் தோலுக்குள் ஊசி மருந்து மூலம் ஏற்றப்படுகின்றன. மூன்று நாட்களின் பின்னர் இந்த வளர்ச்சிகள் அறுவடை செய்யப்பட்டு, நுண்ஆய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. உயிர் அணுக்கள் இல்லாத இந்தத் தோல் வளர்ச்சிப் பகுதிகள் ஒரே சீரான ஒழுங்கு முறையில் அமைந்த ஒரு கட்டமைப்பினைக் காட்டுகின்றன. ஆனால் பெருங்குடல் கழலை உயிரணுக்கள் சேர்க்கப்படும் பொழுது கழலை உயிர் அணுக்கள் ஒழுங்கீனமான பெரிய வடிவங்களில் அமைகின்றன. மேலும், தோல்மீது புற்றுநோயின் அதிக பரவலினையும் அது காட்டுகின்றது. மறுபுறத்தில் சாதாரண உயிர் அணுக்களில் சிறிய வளர்ச்சிகளும் சிறிய அளவிலான பரவலுமே காணப்படுகின்றன.

எமது ஆய்வு தவிர மேலும் பல குழுக்களும் தமது ஆய்வு கூடங்களில் பல ஆய்வுகளை மேற்கொண்டு வந்தன. குறிப்பாக, ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் நோமன் பிரஸ்மன் இத்தகைய ஆய்வுகளில் ஈடுபட்டவர்களில் முக்கிய மானவராவார். புற்றுநோய் ஆய்வில் விலங்குகளுக்குப் பதிலாக மாற்று வழிகளைப் பயன்படுத்தும் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

# பணவீக்கமும் ஏற்றுமதித்துறை மற்றும் அதன் செயற்பாடு என்பவற்றுடனான அதன் தொடர்பும்

ஜோர்ஜ் பெரேரா

## பணவீக்கம்

பணவீக்கத்தை தடுத்து நிறுத்துவதனை குறிப்பாக இரண்டாவது உலகப் போரின் பின்னர் மேலைத்தேசப் பொருளாதாரங்கள் மிக முக்கியமான பேரண்டப் பொருளியல் கொள்கைக் குறிக்கோள் ஒன்றாக கவனத்திலெடுத்து வந்துள்ளன. ஆனால், விடாப்பிடியாக நிலைத்து வரும் பணவீக்கமென்ற காட்சியுண்மை இப்பிரச்சினைக்கு ஒரு புதிய பரிமாணத்தை சேர்த்துள்ளது. இப்பிரச்சினைகளை, இப்பொழுது, பாரம்பரியத் தீர்வுகளை ஏற்பனவாக இருந்து வரவில்லை. அதாவது, பணவீக்கத்தைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தும் பொருட்டு ஒரு பேரண்டப் பொருளியல் குறிக்கோளினை தியாகம் செய்து வந்த நடைமுறை இனியும் செல்லுபடியாகக் கூடியதாக இருக்கவில்லை. இலங்கையைப் போன்ற ஒரு வளர்முக, திறந்த பொருளாதாரத்தில் பணவீக்க நிகழ்வுப்போக்கு ஒரு சிறப்பு முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. வளர்ச்சியடைந்த மேலைய நாடுகளில் தோன்றி இங்கு இறக்குமதி செய்யப்படும் பணவீக்கத்தை தடுத்து நிறுத்த முடியாத அதன் இயலாமையும், இலங்கைப் பொருளாதாரத்தின் பேரண்ட மாறிகள் அனைத்திலும் அது எடுத்து வரும் பேரளவிலான எதிர்மறைத் தாக்கமும் இதற்கு ஓரளவு காரணமாக இருந்து வருகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில், 1970கள் வரையில் பணவீக்கம் பொதுவாக ஒரு பாரிய பிரச்சினையாகக் கருதப்பட்டு வரவில்லை. 1970க்கு முற்பட்ட இரண்டு தசாப்த காலத்தின்போது விலையேற்றங்கள் (1950–51 தவிர) மிதமான அளவிலேயே இடம்பெற்றுக் கொண்டிருந்தன (இலங்கை மத்திய வங்கி, 1975). எனினும், 1970களின் தசாப்தத்தின் போது, முதலாவது மற்றும் இரண்டாவது எண்ணெய் விலையேற்ற அதிர்ச்சிகள் காரணமாக இலங்கையைப் போன்ற எண்ணெய் உற்பத்தி செய்யாத வளர்முக நாடுகளில் பணவீக்கம் ஒரு முக்கியமான பிரச்சினையாக எழுச்சியடைந்தது. இந்தச் சூழ்நிலையில், வீக்க விகிதம் திடீரென செங்குத்தாக அதிகரித்தது. உதாரணமாக, இந்த நாடுகளின் பணவீக்க விகிதம் 1977/78 காலத்தில் 24 சதவிகிதமாக இருந்து, 1979/80 காலப்பிரிவின் போது 32.5 சதவிகிதமாக உயர்ந்தது. எனவே, இலங்கை அரசாங்கம், 1970களின் தொடக்கத்திலேயே, வளர்ச்சியின் செலவில், விலை ஸ்திரத் தன்மையையும் கொடுப்பனவு சம நிலையையும் பேணிக் கொள்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற் கொண்டது (கொலம்பகே, 1986). நாணய ஸ்திரத்தன்மையுடன் இணைந்த விதத்தில் விலை ஸ்திரத் தன்மையைச் சாதித்துக் கொள்வது முக்கியமான குறுங்காலக் குறிக்கோளாக இருந்து வந்தது (கருணாசேன, 1988).

## பணவீக்கமும் ஏற்றுமதித் துறையும்

நாட்டின் பணவீக்க நிகழ்வுப் போக்கு, பொருளாதாரத்தின் திறந்த தன்மை, நாட்டின் உள்நாட்டு நிதிப்படுத்தும் பிரச்சினை என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட பெருந்தொகையான உள் மற்றும் வெளிக் காரணிகளின் ஒரு விளைவாகவே இருந்து வருகின்றது.

இந்தப் பின்புலத்தில், ஏற்றுமதித் துறையின் செயற்பாடு பணவீக்கத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளது. ஏற்றுமதி செயற்பாட்டின் குறிப்பிட்ட சில அம்சங்கள், பணவீக்கப் போக்குகளை மேலும் தூண்டி விடக் கூடியவையாகவோ அல்லது பணச்சுருக்கத் தாக்கத்தினை எடுத்துவரக் கூடியவையாகவோ இருந்து வருவதே இதற்கான காரணமாகும். இறக்குமதி விலை அதிகரிப்புக்களுடன் அதிகரித்தளவிலான பணவீக்கம், வரவு செலவு பற்றாக்குறைகள் போன்ற ஏனைய மிக முக்கியமான காரணிகள் சேரும் பொழுது தோன்றும் தேறிய விளைவே நாட்டின் பணவீக்க மட்டங்களை நிர்ணயம் செய்கின்றது. ஏற்றுமதித் துறை மீதான பணவீக்கத் தூண்டல் காரணிகள் தொடர்பாக பார்க்கும் பொழுது, ஏற்றுமதி விலைகளும் சம்பாத்தியங்களும் வெளிப் பொறிமுறைகளுக்கூடாக விலை அதிகரிப்புக்களை தூண்டி வருவதனை காண முடிகிறது. அதேவேளையில், பெருந்தோட்டத் துறையின் வேதன அதிகரிப்புக்களும் ஏற்றுமதி ஊக்குவிப்புத் தொகுதியின் பெறுமதியிறக்கமும் உள்ளக பொறிமுறைகளுக்கூடாகத் தமது தாக்கத்தை எடுத்து வருகின்றன. ஏற்றுமதி விலைகள் சர்வதேச சந்தைகளின் விலைகளுக்கூடாக உலகளாவிய பணவீக்கத்தை ஊடு கடத்துகின்றன. அதேவேளையில், ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள், விருத்தியடைந்த நடைமுறைக் கணக்கு நிலுவைகளுக்கூடாக பொருளாதாரத்தில் ஒரு மிதமிஞ்சிய கேள்வியைத் தூண்டுவதன் மூலம் பணவீக்கத்தை தூண்டி விடுகின்றன. இது கேள்வித் தாக்கமாகும். மேலும், இந்த விலை அதிகரிப்புக்கள் பண நிரம்பலின் (திரவத் தன்மை தாக்கம்) அதிகரிப்புக்கூடாகவும், சமூகத்துக்குத் தேவையான கொள்வனவுச் சக்தியை அளிப்பதற்கூடாகவும் பண வருமானத்தினை பெருக்கமடையச் செய்கின்றன.

மறுபுறத்தில், ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள், அவை எந்த அளவுக்கு ஏற்றுமதி மூலம் நிதிப்படுத்தப்பட்ட இறக்குமதிகளுக்கூடாக கேள்வியில் காணப்படும் இடைவெளியை நிரப்பக் கூடியவையாக இருக்கின்றனவோ அந்த அளவுக்கு பணச் சுருக்கத் தாக்கத்தை கொண்டுள்ளன. மேலும், இந்த ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள், வேறு சந்தர்ப்பங்களில், விரிவாக்கல், வங்கித் தொழில் மூலங்களில் தங்கியிருக்கும் உள்ளூர் வருமான மூலங்களுக்கும் பங்களிப்புச் செய்ய முடியும். கொரியாவின் பொருளாதாரச் செழிப்பு நிலையின் ஆரம்ப கட்டங்களில் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களினால் உரு

வாக்கப்பட்ட பணவீக்க நெருக்குதல், பொருளாதாரத்தின் வருமானப் பெருக்கத்தினால் மட்டும் ஏற்படவில்லை. இறக்குமதி செலாவணி கட்டுப்பாட்டு வரையறைகளை அகற்றி, அதன் மூலம், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கக் கூடியதாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் கேள்வியில் ஏற்பட்டிருந்த அமுக்கத்தினை குறைத்துவிடுவதற்கு அதிகாரிகள் தவறியிருந்தமையினாலும் இந்நிலைமை தோன்றியிருந்தது (கொரயா, 1975). எனினும், செழிப்பு நிலையின் பிந்திய கட்டங்களின் போது பணவீக்கத்தைத் தடுக்கும் பொருட்டு, அரசாங்கம் இறக்குமதி தாராளமயமாக்கலை எடுத்து வந்தது (சிறிசேன, 1976). எவ்வாறிருப்பினும், ஏற்றுமதிகள், அவசியமான இறக்குமதிப் பொருட்களை போதியளவில் வழங்குவதன் மூலமும், பண வீக்க மூலங்களின் தாக்கத்தை குறைத்து விடுவதன் மூலமும் அதிகரித்து வரும் பணவீக்கத் தாக்கத்துக்கு எதிரான ஒரு சக்தியாக செயற்பட்டு வரக்கூடியதாக இருந்த போதிலும், முன்சொன்ன வழிகளில் ஏற்றுமதிச் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் பாரிய அளவிலான பணவீக்கத் தாக்கத்தினை நாம் புறக்கணித்துவிட முடியாது. ஏற்றுமதித் துறையின் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட இந்தப் பணவீக்கத் தாக்கங்களின் செல்வாக்கினை, புறம்பாகப் பிரித்து எடுத்துக் காட்டுவதற்கு இங்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

## நாட்டின் பொது விலைகளில் ஏற்றுமதி விலைகளின் தாக்கம்

நாட்டின் பிரதான பாரம்பரிய உற்பத்திப் பொருட்களான தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பொருட்கள் என்பவற்றின் உலகச் சந்தை விலைகள், இந்தப் பண்டங்களின் உள்நாட்டுச் சந்தை விலைகள் மீது நேரடிச் செல்வாக்கினை எடுத்துவரக் கூடியதாக இருப்பதுடன், அதன் மூலம், நாட்டின் பொது விலை மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்து வருகின்றது. இந்த விலை அதிகரிப்புக்கள், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் மொத்த விலைச் சுட்டெண் என்பவற்றில் பிரதிபலிக்கின்றன. இந்த இரு சுட்டெண்களும் ஏற்றுமதிப் பண்டங்கள் தொடர்பாக முறையே 5%, 22.5% என்ற நிறையேற்றங்களைக் கொண்டுள்ளன. இந்தப் பண்டங்களுக்கு நிலவி வரும் உலகச் சந்தை விலைகளின் அடிப்படையில், ஏற்றுமதி விலை, இந்த விலைச் சுட்டெண்கள் மீது சாதகமான அல்லது பாதகமான தாக்கத்தை எடுத்து வர முடியும். உலக முதல் நிலைப் பண்டங்களின் வியாபாரத்தில் முழு அளவிலான ஒரு செழிப்பு நிலை நிலவி வந்த 1960களின் கடைசிப்பகுதி தொடக்கம், உயர்ந்த ஏற்றுமதி விலைகளினால் தொடர்ச்சியான ஒரு ஏறுமுக பணவீக்க அமுக்கம் காணப்பட்டது. ஓரிரு வருடங்களில் மட்டுமே ஏற்றுமதிப் பொருட்களுக்கான சந்தை விலை வீழ்ச்சி காரணமாக வாழ்க்கை செலவுச் சுட்டெண்ணில் சிறிதளவு தாக்கம் மட்டும் அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. அதாவது, 1967 தொடக்கம் 1989 வரையிலான 23 வருடங்களின் போது, ஒன்பது வருடங்களில் மட்டுமே ஏற்றுமதி விலைகளில் வீழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன (மத்திய வங்கி அறிக்கைகள்). எவ்வாறிருப்பினும் ஏற்றுமதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த குறைந்த நிறையேற்றம் காரணமாக, கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண்ணினால் அளவிடப்படும் வாழ்க்கைச் செலவில் ஏற்றுமதி விலைகள் எடுத்து வந்த தாக்கம் மிச் சிறு அளவினதாகவே இருந்தது. மறுபுறத்தில், ஆரம்ப சந்தைப்படுத்தும் மட்டத்தில் விலைகள் அதிகரித்துச் செல்வதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று, (இது மொத்த விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்படுகின்றது) இந்தச் சுட்டெண்ணில் ஏற்றுமதிப் பண்டங்களுக்கு சார்பு ரீதியில் வழங்கப்பட்டிருந்த உயர் அளவிலான நிறையேற்றத்தின் விளைவாக பிரதான ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்டிருந்த அதிகரிப்பாகும். எனவே, இக்காலப் பிரிவில் ஏற்றுமதி விலைகளிலிருந்து ஓரளவுக்கான பணவீக்கத் தாக்கம் தோன்றியுள்ளது என்பதனை இது எடுத்துக்காட்டுகின்றது.

## கேள்வி மற்றும் திரவத் தன்மை தாக்கம்

ஏற்றுமதி வருவாய்கள் மேலதிகமான கூட்டு மொத்தக் கேள்வியை உருவாக்கும் ஆற்றலை கொண்டிருப்பதனால், ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் பண வீக்கத்துடன் ஒரு சாதகமான தொடர்பினை கொண்டிருப்பதாக பொதுவாக வாதிக்கப்பட்டு வருகின்றது. பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் வழங்கல், விலையுடன் சம்பந்தப்பட்ட வகையில் குறைந்தளவு நெகிழ்ச்சித் தன்மையை கொண்டிருக்கும் பொழுது இந்தக் கேள்வித் தாக்கம் ஏற்படுகின்றது.

இலங்கையின் விடயத்தில், பணவீக்கத்தின் மீதான ஏற்றுமதி வருவாய்களின் ஆரம்பத் தாக்கம், வங்கித் துறையின் வெளிச் சொத்துக்கள் அதிகரிக்கப்பட்டதற்கு ஊடாகவும், விரிந்த பணநிரம்பலில் விஸ்தரிப்புத் தாக்கமொன்றினை ஏற்படுத்தியதற்கு ஊடாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. பணவீக்கத்தின் கேள்வித் தாக்கமும் கூட அதிகரித்த அளவிலான திரவத்தன்மைக் கூடாக பணநிரம்பல் தாக்கங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளது போல தோன்றுகின்றது. எனவே, இந்தக் கலந்துரையாடலில், ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் கேள்வியையும் திரவத்தன்மைத் தாக்கத்தினையும் ஒன்றாகக் கவனத்தில் எடுக்க முடியும். பணவீக்கம் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட பல கோட்பாட்டு ரீதியான ஆய்வுகளும், உண்மையான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளும் பணப் பெருக்கமே நாட்டின் பணவீக்கத்துக்கான முக்கியமான காரணமாக இருந்து வந்துள்ளது என்பதனை இனங்கண்டுள்ளன. பணப் பெருக்கத்துக்காக இனங்காணப்பட்ட காரணிகளில், வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே பணவீக்கத்துக்கான மிக முக்கியமான காரணமாகக் கருதப்பட்டது. சமீபத்திய நாணய ஆய்வு, தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படும் மாற்றங்களையும், அதனுடன் இணைந்த அரசாங்கத்துக்கான தேறிய கடனையும் உள்நாட்டுப் பண கூட்டு மொத்தத்தில் மாற்றங்களை எடுத்துவரும் இரு பிரதான காரணிகளாக இனங்கண்டுள்ளது (கருணாசேன, 1988). உயர்ந்த ஏற்றுமதி விலைகள் பண நிரம்பலிலும் பண வீக்கத்திலும் எடுத்து வரும் தாக்கம் சில சந்தர்ப்பங்களில் பாரம்பரிய நாணயக் கோட்பாட்டின் அடிப்படையில் விளக்கப்படுகின்றது. எனவே, இந்த வகையில், நிலையான, நிர்வகிக்கப்பட்ட மிதக்கும் செலாவணி முறையின் கீழ் உயர் ஏற்றுமதி விலைகளின் விளைவாகத் தோன்றும் வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பு, ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் எதிரெதிர் திசைகளில் நகர்ந்து செல்லும் ஒரு போக்கினை எடுத்துவரும் என்றும், அதன் மூலம், ஆரம்ப இடைவெளியை அது மேலும் விரிவாக்கிவிடும் என்றும் கூறப்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், செயற்கையாகப் பெறுமதி இறக்கம் செய்யப்பட்ட உள்நாட்டு நாண

யத்திலிருந்து தோன்றும் புதிய வர்த்தக மிகை காரணமாக, நாணயக் கூட்டு மொத்தங்களின் ஆரம்ப அதிகரிப்பு உயர்ந்த மட்டங்களில் அதிகரித்துச் செல்லும். இதன் விளைவாக, மிதமிஞ்சிய திரவத்தன்மையும், பணவீக்க அழுக்கங்களும் தோன்றும் (கருணாசேன, 1988).

1978/1987 காலப் பிரிவு தொடர்பாக வெளியிலிருந்து வந்த பொருளாதார அதிர்ச்சிகளை எதிர்கொள்வதற்கென நாணயக் கொள்கை மேற்கொண்ட வழி முறைகளை பரிசீலனை செய்வதற்காக உருவாக்கப்பட்ட சமீபத்திய மாதிரி, ஏற்றுமதி விலைகள் பெருமளவுக்கு பண நிரம்பலுடன் சம்பந்தப்பட்டுள்ளன என்பதனையும், பண நிரம்பலின் மீது தாக்கத்தை எடுத்து வருவதில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றங்கள் மிகுந்த முக்கியத்துவம் கொண்டுள்ளன என்பதனையும் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

எவ்வாறிருப்பினும், இலங்கையைப் பொறுத்தவரையில், பண நிரம்பலின் மீதான விஸ்தரிப்புத் தாக்கத்தினை குறைத்துவிடக் கூடிய ஒரு முக்கியமான காரணி, ஏற்றுமதித் துறையில் இருந்தே தோன்றி வருவதனைக் காணமுடிகின்றது. பெருந்தோட்டப் பயிர்களின் (குறிப்பாக தேயிலையின்) ஏற்றுமதி விலைகள் உயர் மட்டங்களில் நிலவி வரும் கால கட்டங்களில், அரசாங்கமும் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களும் தமது வருமானங்களை பெருக்கிக் கொள்வதில் காட்டும் ஆற்றலும், வங்கித் துறையிலிருந்து கடன் பெறும் தேவையை குறைத்துக் கொள்வதற்காக காட்டி வரும் ஆற்றலுமே இந்தக் காரணியாக உள்ளது. உதாரணமாக, தேயிலை ஏற்றுமதி விலையில் 1984–85 காலப் பிரிவில் காணப்பட்ட செழிப்பு நிலைகளின் போது, தேயிலையிலிருந்து பெறப்பட்ட உயர் அளவிலான தீர்வைச் சம்பாத்தியங்கள் காரணமாக அரசாங்கம் வங்கிக் கடன்களை பெருமளவுக்குக் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்து வந்ததுடன், இரு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களும் நிலுவையில் இருக்கும் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு, எதிர்பாராத விதத்தில் பெறப்பட்ட வருமானத்தின் ஒரு பகுதியை உபயோகித்துக் கொண்டதன் மூலம் வங்கித் துறைகளிலிருந்து பெறும் கடன்களின் அளவை குறைத்துக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்தன. எனவே, விரிந்த பண நிரம்பலின் மீது ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின் அதிகரிப்பு எடுத்து வரும் தேறிய தாக்கம், வெளி வங்கிச் சொத்துக்களில் ஏற்பட்டு வரும் மாற்றம் அரசாங்கத்துக்கான தேறிய, கடனில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், கூட்டுத் தாபனங்களுக்கான உள்நாட்டுக் கடன்கள் என்பவற்றில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் என்பவற்றையும் உள்ளடக்க வேண்டியிருக்கின்றது. எவ்வாறிருப்பினும், 1984ன் தேயிலை செழிப்பு நிலை தொடர்பான சமீபத்திய அனுபவம், அரசாங்கமும் பெருந்தோட்டத் துறையும் கடன் பெறாமலே இருக்கும் ஒரு நிலையில் இயங்கும் ஆற்றலை கொண்டதாக இருந்து வரவில்லை என்பதனையும், பண நிரம்பலின் விஸ்தரிப்பு தாக்கங்களை கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் இருந்து வரவில்லை என்பதனையும் தெளிவாக நிரூபித்துக் காட்டியுள்ளது. உதாரணமாக, அண்மைய மதிப்பீடொன்று, 1978ல் 52.2 கோடி ரூபாவாக ஏற்றுமதிச் சம்பாத்தியம் அதிகரித்தது என்பதனையும் (அது அரசாங்கத்துக்கும் கூட்டுத் தாபனங்களுக்குமான தேறிய கடனின் மாற்றங்களில் குறைவுகளை ஏற்படுத்தியதற் கூடாக) உள்நாட்டுக் கடனை 20.7 கோடி ரூபாவினால் மட்டுமே குறைத்து விட்டுள்ளது என்பதனையும் காட்டுகின்றது. இந்த நிலையில், 30.5 கோடி ரூபா மேலதிப் பணம் பணவீக்க அழுக்கத்துக்கு விடப்பட்டது. எது எப்படியாக இருந்த போதிலும், ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் மூலம் உருவாக்கப்பட்ட பணவீக்கத் தாக்கங்கள் பொருளாதாரத்தின் பண நிரம்பலின் மீது அவசியமாகவே ஒரு நேரடித் தாக்கத்தைக் கொண்டுள்ளன. எனவே, ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது, கேள்வி மற்றும் திரவத் தன்மை தாக்கங்களுக் கூடாக, ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் பண வீக்கத்துக்குப் பங்களிப்புச் செய்து வருகின்றன என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஏற்றுமதிப் பொருட்களின் விலை மற்றும் பணவீக்கத்துக்கு பங்களிப்புச் செய்யும் அவற்றின் சம்பாத்திய ஆற்றல் என்பவற்றை கவனத்தில் எடுக்கும் பொழுது, ஏற்றுமதிச் செயற்பாட்டின் புள்ளிவிபர ரீதியான முக்கியத்துவத்தையும், உள் நாட்டு பொருள் விலை மட்டத்தையும், உள்நாட்டு விலை மட்டத்துக்கும் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள்/விலைகள் என்பவற்றுக்குமிடையிலான நிர்ணய குணகத்தினை மதிப்பிடுவதன் மூலம் ஒருவர் கண்டறிந்து கொள்ள முடியும். மேலும், ஏற்றுமதி அளவுகளும் சமன்பாடுகளுக்கான சுதந்திரமான மாறிகளாக உள்ளடக்கப்படுகின்றன. அதன் மூலம் பெறப்படும் பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

மேலே காணப்படும் பெறுபேறுகள், ஏற்றுமதி விலைகள் தொடர்பான மாறிகளுக்கும் ஏற்றுமதியளவு, உள்நாட்டு விலை மட்டத்துடன் கொண்டிருக்கும் தொடர்பு என்பவற்றுக்கிடையே முக்கியத்துவம் குறைந்த ஒரு தொடர்பே இருந்து வருவதனைச் சுட்டிக் காட்டுகின்றன. எவ்வாறெனினும், ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் மற்றும் உள்நாட்டு விலைகள் என்பன தொடர்பான குணகம் 0.38 ஆக இருந்து வருவது சார்பு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே உள்ளது.

எனவே, சமீப காலத்தில் பணவீக்கத்துக்குப் பங்களிப்புச் செய்யும் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின் ஆற்றல் மிதமானதாக இருந்து வந்துள்ளது போல் தோன்றுகின்றது.

அட்டவணை 1

**உள்நாட்டு விலை மட்டத்தில் ஏற்றுமதித்துறையின் தாக்கம் 1978-1989**

| சுயாதீன மாறி | தங்கியிருக்கும் மாறி | நிலையானது | $R^2$ |
|---|---|---|---|
| (i) Pt | Pt | 9.9 | 0.03 |
| (ii) Xt | Pt | 7.5 | 0.38 |
| (iii) Vt | Pt | 9.5 | 0.04 |

$R^2$ — நிர்ணய குணகம்
X — ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின் மாற்ற விகிதம்
P — ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணின் மாற்ற விகிதம்
V — ஏற்றுமதி மொத்த சுட்டெண்ணின் மாற்ற விகிதம்
T — காலகட்டம்
P — மொ.தே.உ. சுருக்கியின் மாற்ற விகிதம்

## ஏற்றுமதித் துறையின் வேதன அதிகரிப்புக்களும் பணவீக்கமும்

சமீப காலத்தில் பெருந்தோட்ட உப துறையில் ஏற்பட்ட மாற்றங்கள், ஏற்றுமதித் துறையின் போக்குகள் காரணமாக கூலி விகிதம் உயர்வடைவதற்கு பங்களிப்புச் செய்து வருகின்றன என்பதனை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. பெருந் தோட்டத் துறையில் அமர்த்தப் பட்டுள்ளோரில் ஆகக் குறைந்தது 600,000 பேர் தொழிற் சங்கங்களின் கீழ் இருந்து வருகிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. வேலைக்கு உத்தரவாதமளிக்கும் சட்டம், ஆண் - பெண் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம சம்பள விகிதங்கள் போன்ற காரணிகள், 1984 தொடக்கம் பெருந்தோட்டத் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஏறுமுகமான கூலி உயர்வுகளுடன் இணைந்த வகையில், குடித்தொகையில் கணிசமான ஒரு பிரிவினரின் கொள்வனவுச் சக்தியை அதிகரித்து, அதன் மூலம் நாட்டின் சம்பள விலைச் சுட்டெண்ணைப் பலப்படுத்தியுள்ளது. எனவே, பெருந் தோட்டத் துறையின் கூலி அதிகரிப்புக்கள், ஒருபுறத்தில், மொத்தக் கேள்வியை அதிகரிக்கச் செய்வதன் மூலமும், மறுபுறத்தில், பண நிரம்பலை அதிகரிக்கச் செய்வதன் மூலமும் பணவீக்கத்தை மேலும் தூண்டி விட முடியும். பணவீக்கம், நிலவி வரும் ஒரு நிலைமையில் காணப்படும் உயர்ந்த உள்நாட்டு விலைகள், கூலிகள் மேலும் அதிகரிக்கப்படுவதற்கு வகை செய்யும். கூலி அதிகரிப்புக்கள் நாட்டில் ஏற்கனவே ஒரு பணவீக்க மூலமாக மாறியுள்ளதென்பதனை நாம் மறந்துவிட முடியாது.

உண்மையிலேயே வேளாண்மைத் துறை தொழிலாளர்களின் வேதன சபையின் மெய்க் கூலி விகித சுட்டெண்கள் (பெருந்தோட்ட தொழிலாளர்களின் கூலிகளும் இதற்குள்ளேயே அடங்குகின்றன) ஏனைய கூலி விகிதங்களுடன் ஒப்பிடும் பொழுது, - குறிப்பாக 1984 வேதன அதிகரிப்புக்களின் பின்னர் - ஓர் ஏறுமுகமான போக்கினைக் காட்டி வந்துள்ளன. பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுடன் ஒப்பிடும் பொழுது, வேளாண்மைத் துறைத் தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் அதிகரித்துச் சென்றுள்ளன என்பதனை அட்டவணை 2 எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 2

ஒழுங்கமைந்த தனியார்துறையினதும் அரசாங்க ஊழியர்களினதும் கூலி விகித சுட்டெண்கள் (1980-1989) டிசம்பர் 1978= 100

| | ஒழுங்கமைந்த விவசாய தொழிலாளர் | | தனியார்துறை கைத்தொழில், வர்த்தக தொழிலாளர் | | சேவைத்துறை தொழிலாளர் | | மத்திய அரசாங்க ஊழியர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | குறைந்தபட்ச கூலி விகித சுட்டெண் | மெய் கூலி விகித சுட்டெண் | குறைந்தபட்ச கூலிவிகித சுட்டெண் | மெய் கூலி விகித சுட்டெண் | குறைந்தபட்ச கூலி விகித சுட்டெண் | மெய் கூலி விகித சுட்டெண் | குறைந்தபட்ச கூலிவிகித சுட்டெண் | மெய் கூலி விகித சுட்டெண் |
| 1979 | 123.1 | 116.0 | 111.3 | 105.2 | 113.9 | 107.8 | 117.2 | 111.2 |
| 1980 | 153.6 | 115.9 | 138.8 | 105.4 | 130.5 | 98.9 | 129.1 | 97.2 |
| 1981 | 153.9 | 99.3 | 151.0 | 96.2 | 146.4 | 93.2 | 146.1 | 93.2 |
| 1982 | 181.2 | 104.2 | 161.0 | 92.6 | 169.7 | 97.7 | 187.6 | 108.6 |
| 1983 | 198.7 | 100.4 | 163.1 | 82.5 | 177.8 | 89.7 | 215.7 | 109.0 |
| 1984 | 250.3 | 108.0 | 183.3 | 79.3 | 190.7 | 82.6 | 246.6 | 106.0 |
| 1985 | 273.5 | 116.6 | 203.9 | 86.9 | 190.7 | 81.3 | 284.3 | 121.2 |
| 1986 | 288.1 | 113.8 | 224.3 | 88.6 | 190.7 | 75.3 | 297.4 | 117.5 |
| 1987 | 307.3 | 110.8 | 256.3 | [illegible] | 196.6 | 72.0 | 297.4 | 109.1 |
| 1988 | 378.4 | 121.6 | 271.7 | 57.4 | 229.5 | 73.8 | 290.0 | 125.4 |
| 1989 | 435.9 | 125.7 | 334.9 | [illegible] | 245.9 | 71.6 | 471.8 | 121.5 |
| % அதிகரிப்பு 1979-1989 இடையில் | 254 | 8.3 | 300 | 6.2 | 115 | 34 | 25? | 9.6 |
| % அதிகரிப்பு 1984-1989 இடையில் | 74.1 | 16.3 | 82.7 | 21.8 | 28.9 | —14 | 71.0 | 15 |

## ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள் தொகுதியின் பெறுமதி இறக்கத்தின் பணவீக்க விளைவுகள்

உயர்ந்த ரூபா விகிதம் ஒன்றுக்கூடாக, ஏற்றுமதி முயற்சிகளுக்கு நட்டஈடு அளிப்பதற்குப் போதுமான பெறுமதி இறக்கம் செய்யப்பட்ட ஒரு செலாவணி விகிதம் நாட்டின் தேசிய ஏற்றுமதி அபிவிருத்தி திட்டங்களின் மிக முக்கியமான உத்திகளில் ஒன்றாகக் கருதப்பட்டு வந்துள்ளது (தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டங்கள், 1983 - 1987, 1990 - 1994). இதனையடுத்து, நாட்டின் செலாவணிவிகிதப் பெறுமதியிறக்கங்கள் வியாபார பங்காளர் நாட்டின் மீது நிறையேற்றப்பட்ட செலாவணி விகிதம் அல்லது போட்டியாளரின் நிறையேற்றப்பட்ட செலாவணி விகிதம் என்பற்றின் அடிப்படையில் யதார்த்தபூர்வமானதாக இருத்தல் வேண்டுமென வாதிக்கப்படுகின்றது. அதாவது, இந்த விகிதம், ஏற்றுமதி அபிவிருத்திக்கு கணிசமான அளவில் பங்களிப்பினை நல்கும் பொருட்டு இவ்விதம் இருக்க வேண்டியுள்ளது (யாபா, 1998). ஏற்றுமதி அபிவிருத்திக்காக பெறுமதியிறக்கத்தை ஆதரித்துப் பேசும் அதேவேளையில் பெறுமதியிறக்கத்தின் பணவீக்கத் தாக்கங்களையும் முதலாவது தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் ஏற்றுக் கொண்டிருந்தது. "பெறுமதியிறக்கத்தின் 25 சதவீதம் 10-12% உள்நாட்டு விலை அதிகரிப்புக்குக் காரணமாக இருக்க முடியும்" (தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம், 1983 - 1987). இந்தக் கூற்றின்

(29 பக்கம் பார்க்க)

அட்டவணை 3

இறக்குமதிகளின் அலகுப் பெறுமதி சுட்டெண்கள் — ரூபாவிலும் எஸ்.டி.ஆரிலும்

| | நுகர் பொருட்கள் | | இடைத்தர பொருட்கள் | | மூலதனப் பொருட்கள் | | மொத்த இறக்குமதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | எஸ்.டி.ஆர். | ரூபா | எஸ்.டி.ஆர். | ரூபா | எஸ்.டி.ஆர் | ரூபா | எஸ்.டி.ஆர். |
| 1978 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1979 | 139 | 135 | 163 | 158 | 162 | 157 | 153 | 144 |
| 1980 | 181 | 164 | 277 | 252 | 241 | 220 | 231 | 203 |
| 1981 | 164 | 103 | 344 | 297 | 236 | 204 | 249 | 208 |
| 1982 | 153 | 131 | 387 | 329 | 344 | 293 | 285 | 235 |
| 1983 | 207 | 161 | 388 | 301 | 358 | 279 | 310 | 234 |
| 1984 | 196 | 147 | 424 | 318 | 358 | 271 | 323 | 235 |
| 1985 | 186 | 132 | 524 | 371 | 308 | 218 | 368 | 252 |
| 1986 | 218 | 130 | 512 | 304 | 313 | 186 | 371 | 214 |
| 1987 | 246 | 126 | 619 | 317 | 336 | 172 | 412 | 205 |
| 1988 | 310 | 142 | 721 | 329 | 359 | 164 | 483 | 214 |
| 1989 | 373 | 158 | 809 | 343 | 356 | 151 | 546 | 224 |

குறிப்பு: கணக்கிடப்பட்ட சுட்டெண்கள் மத்திய வங்கி தரவுகளை அடிப்படையாக கொண்டவையாகும்.

# வறுமை ஒழிப்பும் சனசக்தி நிகழ்ச்சித்திட்டமும்

ஸ்டீவன் பெர்னாண்டோ

ஸ்டீவன் பெர்னாண்டோ சிறப்புக் கலைமாணிப் பட்டதாரியும் முதுமாணிப் பட்டதாரியும் ஆவார். மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவில் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த அவர், தற்பொழுது, அவுஸ்திரேலியாவின் சால்ஸ் ஸ்டர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பினை மேற்கொண்டு வருகிறார். அவருடைய ஆராய்ச்சி ஈடுபாடு பெருமளவுக்கு கிராமியக் கடன் துறையிலேயே குவிமையப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை, ஒரு வளர்முக நாடு என்ற முறையில், 1990களின் தொடக்கத்தில் ஒரு கோடியே எழுபது இலட்சம் குடித்தொகையைக் கொண்ட ஒரு நாடாக இருந்து வந்தது. நாட்டின் மொத்தக் குடித்தொகையில் சுமார் 48 சதவீதமானோர் மாதமொன்றுக்கு 1500 ரூபாவுக்குக் குறைந்த வருமானங்களை பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களாக இருந்து வந்ததுடன், 28 சதவீதமான குடும்பங்கள் மாதமொன்றுக்கு 700 ரூபாவுக்கும் குறைந்த வருமானத்தையே பெற்றுக் கொண்டிருந்தன. மேலும், இலங்கை மக்களில் சுமார் 74 சதவீதமானோர் தங்கியிருப்போராக இருந்து வந்தனர். மாதமொன்றுக்கு 750 ரூபாவுக்குக் குறைந்த வருமானத்தைப் பெற்றுவந்த குடும்பங்களுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால், குறைவருமானச் சமூகப் பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு இந்த உதவித் திட்டம் போதியதாக இருக்கவில்லை என்பது பின்னர் கண்டறியப்பட்டது.

வறுமையின் நச்சுச் சுழலில் சிக்குண்டு போய், பிழைப்பூதிய மட்டத்துக்கும் குறைவான வருமானத்தை உழைத்துக் கொண்டிருந்த வறியோரிலும் வறியோரான மக்கள் பிரிவைப் பொறுத்த வரையில், சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் ஓர் ஆசீர்வாதமாக இருந்து வருகின்றது எனக் கூறமுடியும். அது, வளர்முக நாடொன்றில் முதன் முதலில் செயலில் விடப்பட்ட ஒரு சிறப்புக் கருதுகோளாக இருந்து வருகின்றது. இந்தக் கருதுகோளின் மிக முக்கியமான குறிக்கோள், குடித்தொகையின் மிக வறிய பிரிவினரின் வறுமையை ஒழித்துக் கட்டுவதாகும். வறியவர்கள் குறித்த இத்தகைய ஒரு ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டம் உலக வரலாற்றில் இது வரையில் எந்த ஒரு அரசியல்வாதியாலோ அல்லது தத்துவஞானியாலோ முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகின் மிக மதிப்புமிக்க மூல வளமான மனித மூலவளத்தின் பெறுமதியையே சனசக்திக் கோட்பாடு அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே, இந்த நிலையில், மக்களின் விரக்தியையும், துன்பத்தையும் ஒழித்துக் கட்டுவதற்கு மனித மூலவளங்களை ஒன்று திரட்டுவதற்கு ஒரு பாரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனித மூலவளங்களின் அபிவிருத்தியின் அத்தியாவசியத் தேவையை இவ்வளவு தூரத்துக்கு வலியுறுத்தும் ஒரு மனிதாபிமான கோட்பாட்டினை வளர்த்தெடுத்துக் கொள்வது மிகவும் கடினமான ஒரு பணியாகும்.

சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ஆம் திகதி அதன் மூன்றாவது ஆண்டினை நிறைவு செய்கின்றது. இலங்கையில் பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மூன்று சனசக்தி உதவி சுற்றுக்கள் வெற்றிகரமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. சனசக்தி உதவி பெறுவோர் தமது வருமானங்களை உயர்த்திக் கொள்ளும் பொருட்டு, அரச வங்கிகளிலிருந்து கடன்களைப் பெறுவதற்கு உதவிகளை வழங்குவதன் மூலம் சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் மேலும் ஒரு படி முன்னே சென்றுள்ளது.

உலக அபிவிருத்தி அறிக்கையின் (1992) பிரகாரம் இலங்கையின் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி 470 அமெரிக்க டொலர்களாக இருந்து வருகின்றது. உலகில் ஆகக் கூடிய வருமானத்தைப் பெறும் நாடான சுவிட்சர்லாந்தின் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி 32,680 அமெரிக்க டொலர்களாக இருந்து வருகின்றது. இந்த வகையில், குறை வருமானம் உழைத்து வரும் நாடுகளிடையே இலங்கை 32வது இடத்தில் இருந்து வருகின்றது. இலங்கையின் மாதாந்த தலைக்குரிய வருமானம் ரூபா 1,840 என கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், "ஏஷியா வீக்" சஞ்சிகையில் வெளியாகியுள்ள கட்டுரை ஒன்றின்படி 1992ம் ஆண்டில் இலங்கையின் தலைக்குரிய வருமானம் 510 அமெரிக்க டொலர்களாக உள்ளது. சுவிட்சர்லாந்தின் தலைக்குரிய வருமானம் 35,020 அமெரிக்க

டொலர்களாக இருந்து வருகின்றது. இந்த அடிப்படையில், இலங்கை ஏனைய நாடுகளிடையே 28வது ஸ்தானத்தைப் பெறுகின்றது (அட்டவணை 2).

மாதமொன்றுக்கு 750 ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறுபவர்களிலிருந்து சன சக்தி உதவி பெறுபவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நிறைவுடன், இவர்கள் மாதமொன்றுக்கு ரூபா 2500 சம்பாதிக்க முடியுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, குறைந்த வருமானக் குழுவினரின் வருமானம் அதிகரிப்பதனையடுத்து, தலைக்குரிய வருமானம் 638 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. சனசக்தி உதவி காரணமாக ஒரு குடும்பம் ஆண்டு வருமானமாக 638 அமெரிக்க டொலர்களை உழைக்கக் கூடிய நிலையிலிருந்தால், இலங்கை குறைந்த நடுத்தர வருமானம் உழைக்கும் நாடுகள் வரிசையில் 48வது இடத்தினை பிடித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## சனசக்தி நடவடிக்கைகள்

சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தை நாடெங்கிலும் படிப்படியாகச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு படியும் "ஒரு சுற்று" என அறியப்படுவதுடன், அது ஒரு நிர்வாக மாவட்டத்தின் ஒன்று அல்லது இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்குகின்றது. ஒவ்வொரு சன சக்தி சுற்றும் இரண்டு வருடகாலப் பிரிவின் போது அமுல் செய்யப்படும். முழு சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தினையும் 11 சுற்றுக்களில் அமுல் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு சுற்று பூர்த்தியடைவதற்கு 24 மாத காலம் எடுப்பதனால், முழு நிகழ்ச்சித்திட்டமும் 22 வருட காலப் பிரிவின் போது நாடெங்கிலும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும். சனசக்தி சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் அனைத்தும், 22 வருடங்கள் முடிவில் நிகழ்ச்சித்திட்டம் முற்றுப் பெறுவதுடன் மூடப்பட்டுவிடும் என சனசக்திச் செயலகம் தெரிவிக்கின்றது. மேலும், அதன் பின்னர், நாட்டில் வறிய மக்கள் பிரிவினர் இருக்க மாட்டார்கள்.

அட்டவணை 1

சனசக்தி உதவி பெறும் குடும்பங்கள்

| சுற்றுக்கள் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 154,345 |
| 2 | 101,779 |
| 3 | 99,000 |

அட்டவணை 2

| | தலாநபர் மொ.தே.உ. | மொ.உ.உ. வளர்ச்சி | ஏற்றுமதிகள் 12 மாதங்கள் | நடைமுறை க/கு மிகை/குறை | வெளிநாட்டு கடன் | பண வீக்கம் நு.வி.சு. |
|---|---|---|---|---|---|---|
| சுவிட்சர்லாந்து | $ 35,020 | -0.5% | $ 61.3b. | $ 6,941m. | 0† | 3.8% |
| ஜப்பான் | $ 27,305 | 1.1% | $ 320.6b. | $ 90,080m. | 0† | 2.4% |
| ஐ. அமெரிக்கா | $ 22,550 | 1.5% | $ 430b. | -$ 34,240m. | $ 664b | 3.0% |
| கனடா | $ 21,500 | 1.9% | $ 129b. | -$ 23,374m. | $ 149b. | 1.7% |
| ஜேர்மனி | $ 21,475 | 1,2% | $403b. | -$ 20,480m. | 0† | 4.8% |
| பிரான்ஸ் | $ 21,085 | 1.0% | $ 217 b. | -$ 13,331m. | $ 9.6b. | 3.2% |
| இத்தாலி | $ 18,685 | 2.0% | $ 169.9b. | -$ 12,733m. | $ 36.9b | 5.2% |
| ஐ. இராச்சியம் | $ 18,250 | -0.7% | $ 188.3b | -$ 7,769m. | 0† | 3.6% |
| புரூனை | $ 17,000 | 3.5% | $ 1.9b. | $ 1,900m. | 0† | 3.0% |
| அவுஸ்திரேலியா | $ 16,180 | 1.6% | $ 41.9b. | -$ 9,050m. | $ 114b. | 1.2% |
| ஹொங்கொங் | $ 14,102 | 4.7% | $ 104.2b. | $ 1,300m. | 0† | 8.3% |
| சிங்கப்பூர் | $ 13,600 | 4.7% | $ 58.8b. | $ 3,823m. | 0† | 2.3% |
| நியூசிலாந்து | $ 11,875 | 1.5% | $ 9.5b. | $ 67m. | $ 33.5b. | 1.0% |
| மகாவு | $ 9,050 | 5.0% | $ 1.8b. | N. A. | $ 1.5 | 7.5% |
| தைவான் | $ 8,685 | 7.3% | $ 79.3b. | $ 12,014m. | 0† | 7.4% |
| தென்கொரியா | $ 6,489 | 6.7% | $ 74.0b. | -$ 6,251m. | $ 40.2b. | 5.7% |
| சவூதி அரேபியா | $ 5,838 | 9.5% | $ 44.3b. | -$ 4,107m. | $ 16.7b. | 4.8% |
| மெக்ஸிக்கோ | $ 3,200 | 3.6% | $ 28.8b. | -$ 7,487m. | $ 80.6b. | 27.7% |
| தென் ஆபிரிக்கா | $ 2,810 | -0.6% | $ 23.8b. | $ 2,685m. | $ 0.8b. | 15.3% |
| மலேசியா | $ 2,475 | 8.8% | $ 34.7b. | -$ 4,300m. | $ 14.8b. | 5.0% |
| பிரேஸில் | $ 2,000 | 1.2% | $ 31.4b. | $ 6,580m. | $ 110b. | 44.1% |
| பிஜி | $ 1,712 | 0.4% | $ 0.46b. | -$ 4m. | $ 0.4b. | 7.0% |
| துருக்கி | $ 1,670 | 1.5% | $ 13.7b. | $ 272m. | $ 41.4b. | 56.3% |
| தாய்லாந்து | $ 1,605 | 7.9% | $ 30.4b. | -$ 7,450m. | $ 27.3b. | 4.7% |
| பாபுவா நியூகினியா | $ 880 | 9.3% | $ 1.6b. | -$ 584m. | $ 2.4b. | 5.3% |
| எகிப்து | $ 753 | 2.3% | $ 4.7b. | $ 237m. | $ 38.4b. | 19.8% |
| பிலிப்பைன்ஸ் | $ 725 | -0.4% | $ 8.9b. | -$ 1,676m. | $ 29.6b. | 8.9% |
| இந்தோனேஷியா | $ 605 | 6.4% | $ 29.4b. | -$ 4,837m. | $ 70.1b. | 8.7% |
| இலங்கை | $ 510 | 5.0% | $ 2.1b. | -$ 363m. | $ 6.1b. | 12.0% |
| மாலைதீவு | $ 470 | 8.0% | $ 0.06b. | -$ 4m. | $ 0.09b. | 8.0%* |
| பாகிஸ்தான் | $ 430 | 6.4% | $ 6.9b. | -$ 2,172m. | $ 22.3b. | 12.7% |
| பூட்டான் | $ 415 | 3.5% | $ 0.8b. | -$ 58.m. | $ 0.09b. | 11.5% |
| கென்யா | $ 346 | 4.0% | $ 1.01b. | -$ 477m. | $ 6.4b. | 14.8% |
| நைஜீரியா | $ 330 | 4.2% | $ 10.6b. | $ 3,500m. | $ 33b. | 13.0% |
| சீனா | $ 325 | 12.0% | $ 71.9b. | $ 13.300m. | $ 60.5b. | 5.0% |
| இந்தியா | $ 310 | 2.5% | $ 19.3b. | -$ 4,848m. | $ 73.5b. | 11.8% |
| பர்மா | $ 250* | 3.7% | $ 0.44b. | -$ 659m. | $ 4.8b. | 28.7% |
| பங்களாதேஷ் | $ 208 | 3.3% | $ 1.7b. | -$ 306m. | $ 11.9b. | 7.4% |
| வியட்னாம் | $ 200 | 3.8% | $ 1.9b. | -$ 440m. | $ 15.3b. | 78.9% |
| லாவோஸ் | $ 180 | 4.0% | $ 0.08b. | -$ 65m. | $ 0.7b. | 10.4% |
| நேபாளம் | $ 160 | 4.0% | $ 0.24b. | -$ 279m. | $ 1.7b. | 15.4% |
| ஆப்கானிஸ்தான் | $ 150* | -2.2% | $ 0.25b. | -$ 142m. | $ 1.6b. | 56.7% |
| கம்போடியா | $ 150 | 5.0%* | $ 0.04b. | N. A. | $ 1.4b. | 150% |
| மங்கோலியா | $ 100* | -18.0% | $ 0.44b. | -$ 100m. | $ 7.1b. | 130% |

$ - அ. டொலர் m. - 10 இலட்சம் 0† - கடன் கொடுத்தவர்
b. - 100 கோடி. N. A. - கிடைக்கவில்லை

கிடைக்கக் கூடியதாக இருக்கும் பிந்திய தேசிய, பல்தேசிய தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது, ஒரு நாட்டில் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்களினதும் சேவைகளினதும் பெறுமதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் வர்த்தகத்தில் ஏற்படும் மாற்றங்களின் மிகையை அல்லது குறையை கூட்டி அல்லது கழித்து மொத்தக் குடித்தொகையினால் அதனை வகுக்கும் பொழுது கிடைப்பது தலா நபர் மொ.தே. உற்பத்தியாகும். நுகர்வோர் விலைச்சுட்டெண் (நு. வி. சு.) சாதாரண குடும்பமொன்று வாங்கும் பொருட்களில் ஒரு வருட காலத்தில் ஏற்படும் விலை மாற்றங்களை அளவிடுகிறது.

ஆதாரம் : "ஏஷியாவீக்"

தற்பொழுது சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் 3 சுற்றுக்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அது இப்பொழுது 4வது சுற்றுக்குள் பிரவேசித்திருக்கிறது. எனவே, இந்தக் கட்டத்தில், இந்த நிகழ்ச்சித்திட்டம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும், இடையூறுகளையும் பரிசீலனை செய்வது மிகப் பொருத்தமானதாகும். இந்த வகையில், இதுவரையில் நிறைவு செய்யப்பட்டுள்ள 3 சுற்றுக்களையும் நோக்கினால், எதிர் கால இலக்குகள் குறித்த சில ஊகங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

சனசக்தி உதவி பெறுபவர்களுக்கு, இரண்டு வருட காலப் பிரிவின் போது மாதமொன்றுக்கு ரூபா 2500 வீதம் வழங்கப்படும். இந்தத் தொகையில், சுமார் 1000 ரூபா வரையிலான தொகையை பொருட்களை கொள்வனவு செய்வதற்கு உபயோகப்படுத்திக் கொள்ள முடியும். அதேவேளையில், 458 ரூபா ஒரு சேமிப்புக் கணக்கில் சேமிக்கப்படுதல் வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு வழங்கப்படும் 2500 ரூபாவில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான தொகையான 1458 ரூபாவை கழித்துவிடும் போது, மாதமொன்றுக்கு அவர்களுக்கு 1042 ரூபா மிஞ்சுகின்றது. அவர்கள் 24 மாத காலத்துக்கு இந்தத் தொகையை சேமித்து வருவதன் மூலம், 25000 ரூபா பெறுமதியான நிதியமொன்றைக் கட்டியெழுப்பிக் கொள்ள முடியும். உதவி பெறுபவர்கள், இந்தச் சேமிப்புக்களின் பற்றுச்சீட்டுக்களை வங்கிகளில் பிணையாக வைத்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த சேமிப்புத் தொகைக்கான வட்டிப் பணமாக ஆண்டொன்றுக்கு ரூபா 3000 வழங்கப்படும். இந்தத் தொகை இரண்டுவருட முடிவில் 250 ரூபா மாதத் தவணைகளில் வழங்கப்படும்.

சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டு முக்கிய கூறுகளும் பின்வருமாறு:

### முதலாவது கட்டம்

சனசக்தி உதவியை வழங்குவதும் சேமிப்பை ஊக்குவிப்பதும்.

### இரண்டாவது கட்டம்

24மாத காலத்தின் போது 25000 ரூபா கட்டாய சேமிப்பும், அதனையடுத்து வட்டியாக மாதமொன்றுக்கு 250 ரூபா கொடுப்பனவும்.

### முதல் கட்டம்

முதல் கட்டத்தின் கீழ், சனசக்தி கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்களை இனங்கண்டு கொள்வதிலும், அவற்றின் விநியோக முறைகளைப் பகுப்பாய்வு செய்வதிலும் எமது கவனம் திரும்புகிறது. சுமார் 25 பொருட்களை உள்ளடக்கிய சனசக்தி உதவிக் கூடையை வழங்குவதன் நோக்கம், பிழைப்பூதிய மட்டத்துக்குக் குறைவான வருமானங்களை உழைத்து வரும் மிக வறிய சமூகப் பிரிவினரின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு உசிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதாகும். எனவே, போஷாக்கு உணவுகளை வழங்குவதற்கு ஊடாக அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம், அபிவிருத்தி நிகழ்வுப் போக்கில் இந்த வறிய மக்களின் பங்களிப்பினை முழு அளவில் பெற்றுக் கொள்வதே முக்கியமான குறிக்கோளாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மனித மூலவளங்களை அபிவிருத்தி செய்வதற்கூடாக அபிவிருத்தியை சாதித்துக் கொள்வதற்கு இங்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

சமூகத்தின் மிகப் பெரிய ஒரு பிரிவினரின் கொள்வனவுச் சக்தியை உயர்வடையச் செய்ததன் மூலம் சந்தைக் கேள்வி கணிசமான அளவில் அதிகரித்துச் சென்றுள்ளதென்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. இந்தக் கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்துப் பொருட்களும் உதவி பெறுபவர்களினால் கொள்வனவு செய்யப்பட்டு வருவதனால், சனசக்தி உதவிப் பொருட்களின் எண்ணிக்கையை உதவி பெறுவோரின் எண்ணிக்கையினால் பெருக்குவதன் மூலம் சந்தை நிலவரம் குறித்த ஒரு சரியான கருத்தினை பெற்றுக் கொள்ள முடியும்.

### சனசக்திக் கூடை உள்ளடக்கும் பொருட்கள்

1. அரிசி
2. சீனி
3. கப்பி
4. பயறு
5. பெரிய வெங்காயம்
6. சின்ன வெங்காயம்
7. உருளைக் கிழங்கு
8. மரக்கறி வகைகள்
9. பழ வகைகள்
10. தேங்காய்
11. கருவாடு
12. விட்டாமில்க்
13. முட்டை
14. மீன்
15. ஆடைகள்
16. அப்பியாசப் புத்தகங்கள், பென்சில்கள்
17. விவசாய உபகரணங்கள்
18. குடைகள்
19. கருவிகளும், உபகரணங்களும்
20. உரம்
21. மண்ணெண்ணெய்
22. மட்பாண்டங்கள், அலுமினியப் பொருட்கள்
23. நுளம்பு வலைகள்
24. துடைப்பங்கள், தும்புத்தடிகள்
25. கயிறு

சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் உதவி பெறுபவர்களின் உச்சமட்ட ஒத்துழைப்பினை மொத்த உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதற்காகப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தாம் நுகரும் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்கு ஊக்கமளித்து வருகின்றது. இந்தப் பட்டியலில் உள்ள பொருட்களை கவனத்திலெடுக்கும் பொழுது, இந்த நிகழ்வுப்போக்கு விரிவான ஒரு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. உற்பத்தி செய்யும் பொருட்களின் அளவினை அதிகரிப்பதற்கும், நியாயமற்ற இலாப எல்லைகளை குறைத்து விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியமாகும். தனியார் நிறுவனங்கள் உயர் அளவிலான இலாப எல்லைகளுடன் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட்டால் சனசக்தி உதவி பெறுபவர்களின் சுய சார்பு நிலை முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிடும். மேலும், உதவி பெறுபவர்கள் வரையறுக்கப்பட்ட சில பொருட்களை மட்டுமே கொள்வனவு செய்யக் கூடியதாகவும் இருக்கும்.

இந்தச் சூழ்நிலையில், நாம் கூட்டுறவுத் துறையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்தத் துறை தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உச்சமட்ட இலாபத்தினைப் பெறுவதில் நின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது. சனசக்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், அதேபோல விநியோகிப்பதற்கும் உதவுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்க வேண்டிய தேவையுள்ளது. நாடெங்கிலும் இயங்கி வரும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் சனசக்திப் பொருட்களை விநியோகிப்பதில் இப்பொழுது மிக முக்கியமான பங்கினை வகித்து வருகின்றன. எனவே, உற்பத்தியை பெருக்குவதற்கும் விநியோகத்தனை அதிகரிப்பதற்கும் இன்னும் அதிக அளவிலான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க வேண்டியுள்ளது. இந்த விடயத்தில், உச்ச நிலையில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களும் ஒரு முக்கியமான பங்கினை வகிக்க முடியும்.

சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் அனைத்து உதவி அரசாங்க பிரிவுகளிலும் உச்ச நிலை கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்துக் கொள்ள முடியும். அதேவேளையில்,ஒரு உதவி அரசாங்க அதிபர், பிரிவுக்குள் வரும் அனைத்துக் கிராமங்களிலும்

கூட்டுறவுக் கிராமங்களை ஆரம்பிக்கலாம். கிராம மட்டத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் மூல வளங்களை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப அறிவுக்கூடாக பொருத்தமான செய்திட்டங்களை இனங்கண்டு கொள்வதன் மூலம் கூட்டுறவுக் கிராமங்களை ஆரம்பித்துக் கொள்ள முடியும். அதே வேளையில், சனசக்திப் பொருட்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனை என்பவற்றை உச்சமட்டச் சங்கங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்கள், சம்பந்தப்பட்ட நிர்வாகப் பிரிவுகளைச் சேர்ந்த சனசக்தி உதவி பெறுவோரை ஓர் ஒப்பந்த அடிப்படையில் ஒன்றுதிரட்ட முடியும். அல்லது பொருட்களின் உற்பத்திக்கென அவர்களால் உருவாக்கிக் கொள்ளப்பட்டுள்ள கூட்டுறவுக் கிராமங்களுக்கு (கூட்டுப் பண்ணைகளுக்கு) உப ஒப்பந்தங்களை வழங்க முடியும். உற்பத்தி செய்யப்படும் பொருட்களை, நாடளாவிய ரீதியில் விநியோகிப்பதற்கென, உச்ச நிலைக் கூட்டுறவுச் சங்கங்களினால் கொள்வனவு செய்ய முடியும். இந்நடவடிக்கைகளை, மக்கள் வங்கியுடன் இணைந்த விதத்தில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் பொறுப்பேற்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்கு செய்யும் பணியை கூட்டுறவுத் திணைக்களம் ஏற்க வேண்டியுள்ளதுடன், பண உதவியினை மக்கள் வங்கி வழங்க முடியும். இதன் மூலம் மக்கள் வங்கியின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இருந்து வரும் கூட்டுறவு இயக்கத்தையும் மேம்படுத்த முடியும்.

## இரண்டாவது கட்டம் – சேமிப்பு நிதியம்

சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது வருட முடிவில் ரூபா 25,000 கட்டாய சேமிப்பினை உருவாக்குவதாகும். அதன் பின்னர் வட்டிப் பணமாக மாதாந்தம் 250 ரூபா செலுத்தப்பட்டு வரும். அதேவேளையில், வருமானத்தை உருவாக்கக் கூடிய செய்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக அரச வங்கியொன்றிலிருந்து கடன் பெற்றுக் கொள்வதற்காக இந்த சேமிப்பு நிதியத்தின் பற்றுச்சீட்டினை பிணையாக வைக்க முடியும். இது தவிர இரண்டு வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர், உதவி பெறுபவர்கள் தாம் பெற்றிருக்கும் திறன்களுக்கு ஏற்ற விதத்தில், செய்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தமது பெயர்களை பதிவுசெய்து கொண்டதுடன், அரச வங்கிகளிலிருந்து கடன்களைப் பெற முடியும்.

இந்த வகையில், சேமிப்பு நிதியத்தில் ஏற்படக்கூடிய அதிகரிப்பினை மதிப்பிட்டு அதன் அடிப்படையில் சனசக்தி உதவி பெறுபவர்களுக்குக் கடன்களை வழங்குவதானது மிக முக்கியமான கருதுகோளாக இருந்து வருகின்றது. இந்தத் திட்டம், அரச வங்கிகளின் கொடுகடன் நடைமுறைகளுடன் இணைக்கப்பட்ட சேமிப்புக் கணக்குகள் திட்டத்தை ஒத்த ஒரு திட்டமாக உள்ளது. மக்கள் வங்கியின் முதலீட்டுச் சேமிப்புக் கணக்குத் திட்டம் இதற்கான ஓர் உதாரணமாகும். கடன் மீளச் செலுத்துகையும், முதலீட்டுச் சேமிப்பின் அதிகரிப்புக்கூடாக பிணையின் பெறுமதி யேற்றமும் ஒரே நேரத்தில் இடம் பெறுகின்றது. பங்களாதேஷில் செயற்பட்டு வரும் கிராமீன் வங்கி முறையும் இதனை ஒத்த குணாம்சங்களைக் கொண்டுள்ளது.

வங்கிக் கடன்களைப் பெறும் பொருட்டு பிணைகளைச் சமர்ப்பிப்பதில் சனசக்தி உதவி பெறுவோர் எதிர்நோக்கக்கூடிய இடையூறுகளை அகற்றும் நோக்குடனேயே இந்தத் திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சனசக்தியின் இரண்டாவது கட்டத்தின் கீழ் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள கட்டாய சேமிப்புத் திட்டம் பொருத்தமான பிணைகளை சமர்ப்பிக்கக்கூடிய ஆற்றல் இன்மையினால் இதுவரை காலமும் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்துவந்த வறியோரிலும் வறியோரான மக்கள் பிரிவினருக்கு பெருமளவுக்கு நிவாரணம் வழங்குகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் அவர்கள் நேரடிக் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(25 பக்கத் தொடர்ச்சி)

அனுபவரீதியான கணிப்பின் அடிப்படை தெளிவானதாக இல்லாதிருந்த போதிலும், பொதுவிலை மட்ட அதிகரிப்புக்களில் இறக்குமதி செய்யப்பட்ட விலைகளுக்கூடாக பெறுமதியிறக்கம் எடுத்து வரும் தாக்கம் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட இறக்குமதி விலைச் சுட்டெண்களுக்கும், வெளிநாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட விலைச் சுட்டெண்களுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம், இறக்குமதி செய்யப்படும் விலைகளின் மீது பெறுமதியிறக்கம் எடுத்துவரும் தாக்கத்தினை ஒருவர் தெளிவாகக் கண்டுகொள்ள முடியும். இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை 3 ஏற்றுமதி அலகுப் பெறுமதி சுட்டெண்களை ரூபா நியதிகளிலும், விசேஷ எடுப்புரிமை நியதிகளிலும் முன் வைக்கின்றது.

சமீப காலத்தில் 1985லும், 1986லும் வீழ்ச்சியடைந்து கொண்டு சென்ற பணவீக்க விகிதங்களின் அடிப்படையில் (இவ்வாண்டுகளில் வீழ்ச்சி முறையே 1.5 சத விகிதமாகவும் 6 சத விகிதமாகவும் இருந்தது) ஏற்றுமதித் தீர்வைகளை கீழ்நோக்கிய விதத்தில் சீரமைத்தல், கடன் விஸ்தரிப்பினைக் கட்டுப்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்கிய கொள்கைத் தொகுதியொன்றுக்கூடாக, விலைகளில் தாக்கம் ஏற்படாத விதத்தில், ஏற்றுமதி மேம்பாட்டுக்காக பெறுமதியிறக்கத்தை கையாளக்கூடிய ஒரு சாத்தியம் உள்ளது என்பதனை அறிய முடிகின்றது. எவ்வாறிருந்த போதிலும், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல, நாட்டின் பணவீக்கம் பல்வேறு மாறிகளின் ஒரு செயற்பாடாகவே இருந்து வருகின்றது. அவற்றுள், ஏனையவற்றுக்கு மத்தியில், இறக்குமதி விலைகள், வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறைகள், பண நிரம்பல், ஏற்றுமதிச் சம்பாத்தியம், ஏற்றுமதி விலைகள் மற்றும் கூலிகளின் பெறுமதியிறக்கம் என்பன மிக முக்கியமான மாறிகளாக இருந்து வருகின்றன. எனவே, குறிப்பிட்ட ஒரு காலப் பகுதிக்கு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான சில மாறிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் முடிவு, மேற்குறிப்பிடப்பட்ட கருத்தினை நாம் ஏற்பதற்கு இடமளிக்கவில்லை. மறுபுறத்தில், இந்த அனைத்து மாறிகளும் ஒன்றாகக் கவனத்திலெடுக்கப்பட்டாலும் கூட, பணவீக்கத்தின் மீதான பெறுமதியிறக்கத்தின் தாக்கத்தினை தனித்துப் பிரித்து எடுப்பது மிகக் கடினமாகும். இறக்குமதிகளுக்கூடாக பணவீக்க நிகழ்வுப்போக்கின் மீது சுதந்திரமாகத் தாக்கத்தினை எடுத்து வரும் அதே வேளையில், பெறுமதியிறக்கம், மேலே குறிப்பிடப்பட்ட பணவீக்கத்தின் மீதான பெறுமதியிறக்கத்தின் தாக்கத்தினை ஏனைய பணவீக்க காரணிகளைக் கையாள்வதன் மூலம் அடக்கி வைக்க முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதாகும்.

# கடலில் எண்ணெய் மாசுபடலும் தென்னாசிய நாடுகளின் கடற்கரை சார்ந்த சுற்றுச்சூழலில் அதன் தாக்கங்களும்

எஸ். அன்ரனி நோபேர்ட்
(சர்வதேச கற்கைகள் பிரிவு, மார்கா நிறுவனம்)

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

## மாலைதீவுகள்

இற்றைவரை மாலைதீவுகள் எண்ணெய் மாசுபடுதலை ஒரு பிரச்சினையாக அனுபவிக்கவில்லையென அவதானிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், எதிர்கால அச்சுறுத்தல்கள், பிரச்சினையை உருவாக்கக் கூடிய அளவிற்கு இடம் பெறக்கூடும். எனினும், இவ் அச்சுறுத்தல்களை, புவிவரலாற்றியல், காற்றும் சுழிகளும், சமுத்திரத்தோடிணைந்துள்ள நிலப்பிரதேசம், கடல் போக்குவரத்து, சிந்தப்படக்கூடிய எண்ணெய்களின் வகைகள், பிரதான எண்ணெய்த் தாங்கிக் கப்பல் பாதைகளுக்கு அருகிலிருத்தல், எண்ணெய் சிந்தப்படுகின்ற தடவைகள், சேதவிளைவுகளுக்கு இயற்கை அம்சங்களின் உணர்திறன் ஆகிய விடயங்களின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்யலாம். எனினும், கடந்த காலத்தில், கடலில் செல்லும் கப்பல்கள் மூலம் வெளித்தள்ளப்படும் எண்ணெயினால் மீன்கள் கொல்லப்பட்டதுமன்றி, சில உல்லாசப் பயண தங்குமிடங்களும் பாழடிக்கப்பட்டுள்ளன. இவை, குற்றம் இழைக்கும் கப்பல் உரிமையாளர்களுக்கு கடுமையான அபராதங்களை விதிக்க வேண்டிய நிலைமைக்கு வழிவகுத்தது (அனோன், 1985).

இங்கு தீவுகள் பரந்து, சிதறுண்டு இருப்பதன் விளைவாக, எந்த ஒரு தீவிலும், எண்ணெய் படிவினால் உண்டாக்கக்கூடிய கரையோரத் தாக்கங்களின் நிகழ்தன்மை மிகவும் குறைவாகவே உள்ளது. மிகவும் தாழ்வான அலைகளுள்ள காலத்தில் எண்ணெய் மாசுபடலுக்குள்ளாகும் முருகைக் கற்கள், அவை மாசுபடலுக்குள்ளாகும் பரப்பளவு என்பன ஒவ்வொரு தீவையும் பொறுத்து வேறுபடுகின்றன. எண்ணெய்ப் பதார்த்தம் முருகைக் கற்களில் தங்கி நிற்கும் போது அவை சேதமடைகின்றன. மாசுபடுதலுக்குள்ளாகும் பரப்பின் விகிதாசாரத்துக்கேற்ப சேதத்தின் அளவும் இருக்கும் (ஜோஹான்ஸ், 1975; யுனெஸ்கோ 1980). எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களின் விபத்துகள், வெற்றுக் கப்பல்களை சமநிலையில் பேணுவதற்கான செயற்பாடுகள், எண்ணெய்த் தாங்கி கழுவுதல்கள், சுத்திகரிப்பு மீதிகள் ஆகியவையே மாலைதீவுக் கடல் மாசு அடைவதற்கான பொதுவான மூலங்களாக இருக்கின்றன. பொறிமுறைப்படுத்தப்பட்ட கப்பல்களில் ஏற்படுகின்ற அடிக்கலத்தாறும் நீரினை நேரடியாக கடலுக்குள் வெளித் தள்ளுவதும் இன்னொரு மூலமாகும். ஒரு எண்ணெய்த் தாங்கிக் கப்பல் சிங்கப்பூரிலிருந்து மாலைதீவுகளுக்கு எண்ணெயினைக் கொண்டு செல்கையில், இப் பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் தவறுதலாக எண்ணெய் சிந்துதல்களை ஏற்படுத்தலாம். இதுவரை ஒரேயொரு எண்ணெய்ச் சிந்துதல் மாத்திரமே இடம் பெற்றதாக பதிவுள்ளது.

மாலைதீவுக் குடியரசின் வடக்குப் பக்கமாக அமைந்துள்ள தீவுகளுக்கு வடக்கே 60 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ள எட்டுப்பாகை கால்வாய் ஊடாக 30,000 மெட். தொன்னுக்கும் அதிகமான பாரத்தினைக் கொண்ட மசகு எண்ணெய்த் தாங்கிக் கப்பல்கள் சென்று வருகின்றன. இந்தச் சர்வதேசக் கால் வாய்க்கு தென் பக்கமாக 250 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ள தீவுகளின் கடற்கரையோரங்களில் தார் உருண்டைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணம், தூர கிழக்கு நாடுகளுக்கு மசகு எண்ணெயை விநியோகித்த பின்பு மத்திய கிழக்கு நாடுகளுக்கு திரும்பும் வழியில், இக்கப்பல்களின் தாங்கிகள் கழுவப்பட்டு எஞ்சிய மசகு எண்ணெய் நீருடன் கலப்பதனால் இத்தார் உருண்டைகள் உருவாகின்றன. மாலைதீவுக்கு எரிபொருள் ரக எண்ணெயினை விநியோகிக்கும் எண்ணெய்த் தாங்கிக் கப்பலில் இருந்து எண்ணெய் சிந்தப்படுவதால் ஏற்படுகின்ற மெல்லிய எண்ணெய் மாசுபடுதலும், இத்தகைய சிந்துதலில் காணப்படுகின்ற பெருமளவிலான நச்சுக் கலவைகளும் கடற் பிரதேச வாழினங்களுக்கு ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அமையக் கூடும். மாலேக்கருகாமையில் அமைந்துள்ள வில்லிங்கிலி போன்ற உல்லாசப் பயண கடற்கரைகளிலும் இத் தார் உருண்டைகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது (நேர்லண்ட், 1986).

## பாகிஸ்தான்

பாகிஸ்தானிலுள்ள கடற்கரைப் பிரதேசமானது, ரான் ஒவ் கச் என அழைக்கப்படும் உப்புப் பிரதேசத்தின் மேற்குப் பக்கத்திலிருந்து இன்டஸ் டெல்டா என்ற பிரதேசத்தினூடாக இயாஸ் பெலா மக்றான் என்ற கரையோரப் பிரதேசம் வரை நீடித்துள்ளது. கராச்சி நகரின் மேற்குப் புறமாகவுள்ள பகுதிகள், உலகில் எண்ணெய் எடுத்துச் செல்லப்படுகின்ற முக்கிய கப்பல் பாதைகளில் ஒன்றாக அமைந்துள்ளன. எண்ணெய்க் கப்பல்களிலிருந்தும், சரக்குக் கப்பல்களில் இருந்தும் கடலுக்குள் குவிக்கப்படுகின்ற நச்சுக் கழிவுகள், அபாயத்தை உண்டு பண்ணக்கூடிய கழிவுகள், எண்ணெய்ச் சிந்தல்கள் ஆகியன பரவக்கூடியனவாக இருப்பதால் அவை கரையோரத்தை நோக்கி மிதந்து செல்கின்றன. கராச்சி நகரத்தின் தென்பக்கத்தில் "லண்டி கைத்தொழில்

வர்த்தகப் பெருந்தோட்டம்", "கொறஞ்சி கைத்தொழில் பிரதேசம்", "பாகிஸ்தான் உருக்கு ஆலை பல்கூட்டுத் தொகுதி" ஆகிய மூன்று பிரதான கைத்தொழில் பல்கூட்டுத்தொகுதிகள் கேறோ, கொறாங்கி சிற்றோடையோரங்களில் அமைந்துள்ளன. இவற்றுள் பாகிஸ்தான் உருக்கு, காசிம் துறைமுகம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், இப்பகுதியிலுள்ள ஏனைய பல கைத்தொழில்கள் ஆகியன தங்களின் உற்பத்திக் கழிவுகளை அருகிலுள்ள சிற்றோடைகளுக்குள் நேரடியாக வெளித் தள்ளுகின்றன.

எண்ணெய்த் தாங்கிக் கப்பல் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற குறுக்குப் பாதையில் பாகிஸ்தான் அமைந்துள்ளதால், கரையோரப் பிரதேசங்களையும், கடல் வாழ் உயிரினங்களையும் பாரதூரமாக சேதப்படுத்தக்கூடிய பயங்கர விபத்துகள் இங்கு இடம் பெறலாம். இதைத் தவிர, மீன்பிடி வள்ளங்களிலிருந்தும், மீன்பிடிக் கப்பல்களிலிருந்தும் வெளித் தள்ளப்படுகின்ற எண்ணெய்யும் மாசுபடுத்தல் பிரச்சினைகளை இன்னும் அதிகமாக்குகின்றன. சில சமயங்களில், இன்டஸ் டெல்டாவுக்கு அயலிலுள்ள கரையோரப் பகுதிகளில் ஏற்படும் எண்ணெய்ச் சிந்தல்கள், அலைகளுடாக மிதந்தும், மேற்பரப்பிலுள்ள சுழிகளினூடாகவும் டெல்டாவின் உட்பகுதியைச் சென்றடைகிறது.

## இலங்கை

மிகவும் பிரசித்திபெற்ற சுற்றுலாத் தலமாக இருக்கின்ற (ஹிக்கடுவ) தென் மேற்குக் கரையோரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வமான சுற்றாடல் மதிப்பீட்டு ஆய்வின்படி, ஆய்வுக்கு எடுக்கப்பட்ட பிரதேசத்தில் எண்ணெய் மாசுபடுதல் ஏற்படுவதற்கு இரண்டு பிரதான மூலங்கள் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது:

(அ) கரையிலிருந்து ஒரு சிறிதளவு தூரத்தில் கழிவு எண்ணெய் ஊற்றப்படுதல்;

(ஆ) முருகைக் கற்களால் சூழப்பட்டுள்ள குடாக்கடலுக்குள்ளும்கூட மீன்பிடி வள்ளங்களிலிருந்து கழிவு எண்ணெய் ஊற்றப்படுதல் (மத்திய சுற்றாடல் அதிகாரசபை, 1980).

இலங்கையின் கடற்பிரதேசத்தில் எண்ணெய்ச் சிந்துதல்கள் பற்றி இது வரை அறிவிக்கப்படவில்லையாயினும், கழிவு எண்ணெய்யின் மாசுபடுதலின் மூலம் பெற்றோலியப் பொருள்வகை (தார் உருண்டைகள்) இலங்கையின் தென்கரையோரப் பகுதிகளில் காணப்பட்டுள்ளது. உண்மையில், குப்தா, குரேஷ் (1981) ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி, தென் இந்தியாவையும், இலங்கையையும் சூழவுள்ள கடற்பகுதிகளில் அதிக செறிவான எண்ணெய்ப் படிவுகள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. 1983ல், இலங்கையின் கடல் பிரதேசத்தில் காணப்படுகின்ற பெற்றோலிய ஐதரோகாபன்களின் அளவினை அறிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சமுத்திரவியல் ஆய்வின் பிரகாரம், மாசுபடுத்தல் காரணிகளின் மட்டங்கள், ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச நியமங்களுக்குள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த ஆய்வானது ஆரம்ப முன்னாய்வாக இருப்பதால், ஒரு திட்டமான முடிவுக்கு வருவதற்கு மிகவும் பரந்த கண்காணிப்பு தேவையாகவுள்ளது.

## முடிவுரை

எண்ணெய்ச் சிந்துதல் எந்த ஒரு நாட்டினதும் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள்ளேயோ அல்லது அதற்கு வெளியிலேயோ இடம்பெறலாம். அவை பௌதீக ரீதியில் அமையாத சர்வதேச கடல் எல்லைகளை இனங்காண்பதில்லை. இவை, நாடுகளினது கரையோரங்களிலிருந்து குறிப்பிடப்பட்ட தூரத்தின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ள எல்லை நிர்ணயங்களாகும். வட இந்திய சமுத்திரம், வங்காள விரிகுடா, அரபிக் கடல் ஆகியவற்றைக் கொண்டுள்ள சர்வதேச கடல் பிரதேசத்தில் தவறுதலாக எண்ணெய்ச் சிந்தல் ஏற்படுமாயின், அது தெற்காசியாவின் கடலோர நாடுகளை காற்றின் திசையினாலும், அலைச் சுழிகளினாலும் பாதிக்கக்கூடும். மேற்கூறப்பட்டுள்ளவாறு அமைந்துள்ள அதே நிலைமைகளில் ஏற்படுகின்ற கடல் மாசுபடுதலைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு பிராந்திய ரீதியிலான அணுகுமுறையும், உபாயமும் தேவையாகவுள்ளது. எண்ணெய் மாசுபடுதலைத் தடுப்பதற்கு தெற்காசிய நாடுகள் தங்களிடையே இருதரப்பு அடிப்படையிலும், பிராந்திய அடிப்படையிலும் ஒத்துழைப்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். (31 ஆகஸ்ட் – 2 செப்ரம்பர் 1981) கொழும்பில் நடைபெற்ற சார்க் நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களின் கூட்டத்தில், சூழல் மாசுபடுதலைக் கட்டுப்படுத்துவதிலும், கடல் மாசுபடுதலைக் கட்டுப்படுத்துவதிலும், தெற்காசிய நாடுகள் தங்களிடையே இருதரப்பு, பிராந்திய ரீதியில் ஒத்துழைப்பினை வழங்கக்கூடிய சாத்தியங்கள் உள்ளனவென இனங் காணப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையின் பாரிய தன்மை பற்றியும், இப்பிரச்சினையை எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய மிகவும் பொருத்தமான உபாயத்தினை திட்டமிட வேண்டியதன் அவசரத் தேவை பற்றியும் தேசிய மட்டத்திலுள்ள திட்டமிடலாளர்களும், கொள்கை வகுப்பாளர்களும், கடல் விஞ்ஞானிகளும், சுற்றாடலியலாளர்களும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. பிராந்திய அடிப்படையில் எண்ணெய் மாசுபடல் தற்காப்புத் திட்டமொன்று அமைக்கப்படல் வேண்டும். இத்திட்டமானது, ஏனைய பல விடயங்களுக்கிடையே, ஒரு பிராந்திய செயற்பாட்டு பணிப்படையை அமைப்பதற்கு வழிகோல வேண்டும். ஆராய்ச்சி, பகுப்பாய்வு ஆகிய விடயங்களில் பயிற்சி அளிப்பதற்கான பிராந்திய ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், மேற்பார்வை, கண்காணிப்பு தொடர்பான திட்டங்கள், எண்ணெய் மாசுபடுதலைத் தடுப்பதற்கான திட்டங்கள் ஆகியன உருவாக்கப்பட வேண்டும்.

பயிற்சியினை அமுல்படுத்தக்கூடிய வகையிலும், பயிலுனர்-பயிற்றுனர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தக் கூடிய வகையிலும் உகந்த திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். மாசுபடுத்தும் காரணிகளை கட்டுப்படுத்துவதிலும், கண்டுபிடிப்பதிலும், பகுப்பாய்வு செய்வதிலும் அதிநுட்பமான தொழில்நுட்பங்களைக் குறிப்பாக தூர இருந்தே உணர்ந்து கொள்ளக் கூடியதான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். கடலில் எண்ணெய் மாசுபடுதலை மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், அதனை தடுப்பதற்கும் முதல் நடவடிக்கையாக மேலதிகமான பரந்த சட்டவாக்கங்கள் தேசிய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் தேவையாக இருக்கும். எண்ணெய் மாசுபடுதலுக்கான தகவற் சேகரிப்புகளை, ஆழ்கடலில் மீன்பிடித்தலுக்கான தகவல் தேவைகளுடன் ஒருங்கிணைக்கக்கூடிய வழிவகைகளைத் திட்டமிட வேண்டியது இன்றியமையாததாகும். தெற்காசியாவில் சுற்றாடல் மாசுபடுதல் பற்றிய ஒரு சுயாதீன தகவல் வங்கியினை கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

( முன் உள்ளட்டைத் தொடர்ச்சி )

மிக்க ஒரு நடவடிக்கையாக இருந்து வரவில்லை என்றும், காருண்யம் மிக்க ஒரேயொரு நடவடிக்கை விலங்குகளை வெட்டாமல் இருப்பதேயாகுமென்றும் ஒருவர் வாதிக்க முடியும். ஆனால், இன்றைய சூழ்நிலையில், அத்தகைய ஒரு கோரிக்கை வெறும் கற்பனாவாதமாக மட்டுமே இருக்க முடியுமென நாம் நம்புகிறோம். சர்வதேச அளவில் புகழ் பெற்றுள்ள விலங்குரிமை ஆதரவாளரான ஹென்றி ஸ்பைரா பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்: "மக்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்தில் குறிப்பிட்ட ஓர் அளவிலான மாற்றத்தை மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும். இன்று நாங்கள் எதனைச் செய்ய முடியுமோ அதனைச் செய்வோம். பின்னர் நாளை இன்னும் அதிகமாகச் செய்வதற்கு முயற்சிப்போம்". எனவே, இந்த வகையில், விலங்குகளை (குறிப்பாக மாடுகளை) உணவுக்காக வெட்டுவதனை நிறுத்திவிட வேண்டும் என கோரிக்கை விடுப்பவர்களைப் பொறுத்தவரையிலும் கூட, உடனடியாக காருண்யம் மிக்க ஆடுமாடு வெட்டும் முறைகளை பின்பற்றுவதானது ஓர் இடைக்கால குறிக்கோளாக கொள்ள முடியும். விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதனை தடுத்து நிறுத்துவதனை நோக்கிய சரியான வழியில் அது முதல் படியாக இருக்க முடியும். உடனடி எதிர்காலத்தில், உணவுக்காக விலங்குகளைக் கொல்வதனை நிறுத்துவது அநேகமாக சாத்தியமற்றதாக இருந்து வருவதனால், இரக்க சிந்தையுடன் கூடிய விலங்குகளைக் கொல்லும் முறைகளுக்கு ஆதரவு வழங்காது இருப்பவர்கள், பல இலட்சக் கணக்கான வாயில்லாப் பிராணிகள் கடும் வேதனையுடன் கூடிய மரணத்தை தழுவுவதற்கு உதவுபவர்களாகவே இருந்து வருகின்றனர்.

தற்பொழுது, "ஹலால்" இறைச்சி தொடர்பாக இடம்பெற்று வரும் சர்ச்சை குறித்தும் ஓரிரு வார்த்தைகளை சொல்ல வேண்டியுள்ளது. (இஸ்லாமிய நம்பிக்கை, இறந்த விலங்குகளின் இறைச்சியை புசிப்பதற்கு அனுமதி வழங்குவதில்லையாதலால், "ஹலால்" முறையின் கீழ் இறைவனின் பெயரில் ஓதல் நடத்தி முஸ்லிம் ஒருவரால், விலங்கு இரத்தம் பீறிட்டு ஓடும் விதத்தில் மரணிக்கச் செய்யப்படுகின்றது). இலங்கை ஒரு பல்லின நாடாகவும், பலமத நம்பிக்கைகள் நிலவிவரும் ஒரு நாடாக இருந்து வருவதனால் சிறுபான்மை சமூகப் பிரிவினரின் மத நம்பிக்கைகளுக்கு உரிய மதிப்பினை அளிப்பது மிகவும் அத்தியாவசியமானதாக உள்ளது என்பதனை இங்கு வலியுறுத்திக் கூற வேண்டியுள்ளது. "ஹலால்" முறை குறித்த எந்த ஒரு விவாதமும், இதனை, ஒரு முன் நிபந்தனையாக கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. ஆனால், அதே வேளையில், திருத்தூதர் நபி (ஸல்) அவர்கள் தம்மைப் பின்பற்றுவோருக்கு வழங்கிய அறிவுரை குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும், பிராணிகள் மீது கருணை காட்ட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. நீங்கள் (விலங்குகளை) கொல்லும் பொழுது காருண்யமான முறைகளை பயன்படுத்த வேண்டும். ஒரு விலங்கினை வெட்டும் பொழுது மிருதுவாக நடந்து கொள்ளுங்கள்; விலங்கினை வெட்டுபவர் தனது கத்தியை நன்கு தீட்டிக் கொள்ள வேண்டியதுடன், விலங்குக்கு ஆறுதல் அளிக்கவும் வேண்டும்". மிகவும் தீவிரமானதும், பகைமை நிலையுடன் கூடியதுமான நிலைப்பாடுகளை எடுப்பதற்குப் பதிலாக, ஒவ்வொருவரினதும் அக்கறைகளை புரிந்துகொள்ள முயற்சி செய்வதும், இரு தரப்பினரையும் திருப்திப்படுத்தக் கூடிய சமரச நிலை ஒன்றினை எடுத்து வருவதற்கு முயற்சிப்பதுமே இன்றைய தேவையாக உள்ளது. விலங்கினை உணர்விழக்கச் செய்து, இறைச்சிக்காக வெட்டுவது "ஹலால்" தேவைப்பாடுகளுக்கு முரணானது அல்ல என்பதனை பிரித்தானியாவில் வாழும் இஸ்லாமிய சமூகத்தின் தலைவர்களும் விஞ்ஞான ரீதியாக நிரூபித்துக் காட்டுவதற்கு அந்நாட்டின் குறிப்பிட்ட சில பிராணிகள் நல்வாழ்வு குழுவினர் மேற்கொண்டு வரும் முயற்சிகளையும், இது தொடர்பாக பல்வேறு இஸ்லாமிய தலைவர்களும் வெளியிட்டுள்ள தீர்ப்புக்களையும் இந்த இரு தரப்பினரும் கவனத்திலெடுக்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக நாம் எழுப்ப விரும்பும் அடுத்த பிரச்சினை, கட்டாக்காலி நாய்கள் மீது விஷவாயுவைச் செலுத்தி கொலை செய்யும் இலங்கையின் நடைமுறை சம்பந்தப்பட்டதாகும். "மனிதனின் மிகச் சிறந்த நண்பன்" என்று கருதப்படும் ஒரு பிராணியின் மீது இந்தக் கொடூரத்தினை நிகழ்த்தி வருவதற்கு கூறப்படும் நியாயம், விசர்நாய் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு இந்நடைமுறை அவசியமாகியுள்ளது என்பதாகும். இங்கும் கூட, விசர் நாய் அபாயம் தொடர்பான அச்சுறுத்தலை நாம் கிஞ்சித்தும் குறைவாக மதிப்பிடவோ அல்லது அதன் முக்கியத்துவத்தை குறைத்து விடவோ முயற்சிக்கவில்லை என்பதனை முதலில் நாங்கள் தெரிவிக்க வேண்டியுள்ளது. இந்த நாய்களை அழித்துவிடுவதில் அநாவசியமான விதத்தில் மிகவும் கொடூரமான வழிமுறைகள் உபயோகப்படுத்தப்பட்டு வருவது குறித்தே நாம் இங்கு கேள்வி எழுப்புகின்றோம். இந்தக் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கென "கார்பன் மொனோக்ஸைட்" வாயுவினை உள்ளடக்கிய விஷவாயு உபயோகிக்கப்படுவதனால், விலங்கு, இறுதியில் முற்றாக உயிர் இழக்கும் வரையில் (சுமார் இருபது நிமிடங்கள் வரையில்) மிகக் கடுமையான வேதனையை அனுபவிக்க வேண்டியுள்ளது. இந்த விடயத்திலும் கூட காருண்யத்துடன் கூடிய பல மாற்று வழிகள் கிடைக்கக் கூடியதாக இருப்பதுடன், அவற்றை குறைந்த செலவில் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. (இந்த இதழில், இரு கால்நடை மருத்துவர்கள் எழுதியுள்ள கட்டுரைகளில், இது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது) எனவே, இந்தப் பின்னணியில், எம்மிடையேயுள்ள அவசரத் தேவை, இந்தக் கட்டாக்காலி நாய்களை அநாவசியமான முறையில் கொடுமைப்படுத்தி, விஷ வாயு அடித்துக் கொலை செய்யும் ஈவிரக்கமற்ற நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்து, காருண்யம் மிக்க வேதனை குறைந்த நடைமுறைகளை பின்பற்றுவதாகவே உள்ளது.

விசர் நாய் தொல்லையை தீர்த்து வைப்பதற்கான மிகுந்த யதார்த்தபூர்வமான, சாத்தியமான, கருணைமிக்க நீண்டகால நோக்குடைய செயல்திட்டங்கள் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. ஒவ்வோர் ஆண்டிலும் ஆயிரக் கணக்கான வீடற்ற நாய்களை விஷவாயு அடித்துக்கொலை செய்து விடுவதன் மூலம் இப்பிரச்சினையை நாம் சமாளித்துவிட முடியாது. இந்நாட்டிலுள்ள ஆயிரக் கணக்கான வீடற்ற நாய்களை ஒழித்து விடுவதற்கு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு முயற்சியையும் எமது சமூகம் பொறுத்துக்கொள்ள மாட்டாதென்றே நாம் நம்புகிறோம். வீடற்ற நாய்கள் அனைத்துக்கும் தடுப்பூசி போடும் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதும், வெகுசன தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி கல்விப் பிரச்சார முயற்சியொன்றை துவக்கி வைப்பதன் மூலம், தமது செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி ஏற்ற வேண்டிய அவசியத்தை நாய்களை வளர்ப்போரிடையே எடுத்துக் கூறுவதும் இதற்கு மாற்றுவழிகளாக இருக்க முடியும்.

வீடற்ற விலங்குகளுக்கு சரணாலயங்களை ஸ்தாபித்துக் கொடுப்பதற்கான செய்திட்டமொன்றை உருவாக்குவதும் அவசியமாக உள்ளது. (இலங்கையில் அத்தகைய ஒரேயொரு சரணாலயமே உள்ளது; அதனை விலங்கு நலன் மற்றும் பாதுகாப்பு சங்கம் நிர்வகித்து வருகின்றது). இந்த அனைத்து விதமான முயற்சிகளிலும் பிராணிகளின் நலன் பேணும் குழுக்களும், கொழும்பு

மாநகர சபையும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் தனியார் மற்றும் அரசாங்க கால்நடை மருத்துவர்களின் கழகங்களும் ஒருங்கிணைப்புடன் இணைந்து பணியாற்ற முடியும்.

இலங்கையின் பல்வேறு விலங்குரிமைகள் தொடர்பான குழுக்களும், விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை குறைத்து விடுவதற்கு அளப்பரிய பணியினை ஆற்றி வந்துள்ளதுடன், இப்பொழுதும் அவ்விதம் தொடர்ந்தும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆனால், இன்னமும் எவ்வளவோ பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளன. பொதுமக்களிடையே (குறிப்பாக இளைஞர்களிடையே) விலங்குகள் மீது இரக்கம் காட்ட வேண்டிய தேவை குறித்த பாரிய அளவிலான ஒரு விழிப்புணர்ச்சியை தோற்றுவிப்பது ஒரு முக்கியமான பணியாகவுள்ளது.

எமது பாடசாலை கல்வித் திட்டங்களில் ஜீவகாருண்யம் தொடர்பான கல்வியைப் புகுத்துவதற்கான சாத்தியப்பாடு குறித்தும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டால், இலங்கையின் சிறுவர்கள், விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை தடுத்து நிறுத்துவதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும். சிறு பிள்ளைகள் விலங்குகள் மீது அன்பும் கருணையும் காட்டுவதற்குப் பழகிக் கொள்வார்களேயானால் அவர்கள் பெரியவர்களாக வளர்ச்சியடையும் பொழுது ஏனைய ஜீவிகள் மீதும் இரக்கம் காட்டக் கூடியவர்களாக உருவாக முடியும். வேதனையில் துன்புற்றுக் கொண்டிருக்கும் ஒரு செல்லப் பிராணியைப் பார்த்து துயருறும் ஒரு பிள்ளையோ, அல்லது ஒரு செல்லப் பிராணியின் மரணத்தினால் துயருற்றிருக்கும் ஒரு பிள்ளையோ தனது சக மனிதர்களை வேண்டுமென்றே வேதனைப்படுத்துவதற்கோ அல்லது கொலை செய்வதற்கோ ஒருபோதும் முன்வர மாட்டார்கள். இது, கடந்த இரு தசாப்த காலத்துக்கும் மேலாக எமது சமூகத்தை ஆட்டிப் படைத்து வரும் வன்செயலினை குறைத்து, திசை திருப்பி விடுவதற்கும், இலங்கைச் சிறுவர்களின் உளவியலின் மீது அந்த வன்முறை எடுத்து வந்துள்ள மிகக் கொடூரமான தாக்கங் களை குறைத்து விடுவதற்கும் ஒரு வழிமுறையாக இருக்க முடியும்.

இறுதியாக, நாம் நன்கு நினைவில் இருத்திக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அதாவது, விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை தடுத்து நிறுத்துவது விலங்கு உரிமைகள் தொடர்பான அமைப்புக்களின் பொறுப்பாக மட்டும் இருக்கவில்லை; அது எம் அனைவரினதும் கடமையாகவும் பொறுப்பாகவும் உள்ளது. ஏனெனில், இந்த நாளாந்த கொடுமைகளை தடுத்து நிறுத்திவிட முடியாத எமது கையாலாகாத்தனமும், இந்த வாயில்லாப் பிராணிகள் அனுபவித்து வரும் வேதனைகள் குறித்து எமது அக்கறை இன்மையும் எம்மை குறைந்த அளவில் நாகரிகமடைந்த மனிதர்களாகவும், ஈவிரக்கமற்ற மனிதர்களாகவும் ஆக்கி விடுகின்றன.



எமது யுகத்தின் மிகப்பெரிய மார்க்ஸிஸ்ட் – லெனினிஸ்டுகளில் ஒருவரான ஏர்னெஸ்டோ சேகுவேரா ஒரு முறை இப்படிக் கூறினார்: "உண்மையான ஒரு புரட்சிவாதி காதல் உணர்வினால் தூண்டப்படுகின்றார் என்பதனை – அது சற்று அபத்தமாகத் தோன்றினாலும் கூட – நான் இங்கு கூறவேண்டியுள்ளது." சேகுவேராவின் காதல் மனித இனத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக இருந்து வரவில்லை; அவர் பிராணிகள் மீது – குறிப்பாக விலங்குகள் மீது – ஆறாத அன்பு செலுத்தி வந்தார். கியூபாவின் புரட்சிகரப் போரின் கலகக்கார இராணுவத்துக்கும் நகரின் தலைமறைவு இயக்கத்துக்குமிடையே அவர் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தபொழுது, தமக்கு ஒரு நாய்க்குட்டியை எடுத்து வரும்படி உத்தரவு இட்டிருந்தார். இந்த மாபெரும் கெரில்லாப் போராளி ஆஸ்துமா நோயின் தாக்குதல் ஒன்றிலிருந்து சியாரா மயிஸ்ராவில் குணமடைந்து வந்த வேளையில், நாய்க்குட்டியொன்றை தனது மடியில் வைத்திருந்த பொழுது 1957ல் இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது. புரட்சிகரப் போரின் நிகழ்வுகள் குறித்த அவருடைய எழுத்துக்களில் "செல்ல நாய்க்குட்டியொன்றின் படுகொலை" என்ற தலைப்பிலான கட்டுரை ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. பெருமளவுக்கு காட்டு விலங்குகளை வைத்தும், நாய்களை அடிப்படையாகக் கொண்டும் கதைகளைப் புனைந்து வந்த ஜக் லண்டன் சேகுவேராவின் அபிமான எழுத்தாளர்களில் ஒருவராக இருந்தார்.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண் : QD/57/News/93

ஒரு சமூகத்தின் பண்பட்ட இயல்பினை,
அச்சமூகம் பிராணிகள் மீது காட்டும் அன்பு,
கருணை மற்றும் அக்கறை என்பவற்றைக்
கொண்டு மதிப்பிட்டுக் கொள்ள முடியும்.

*- மகாத்மா காந்தி*

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவு வெளியீடு

பிரதி விலை : ரூ. 10/-
வருட சந்தா : ரூ. 120/-

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட், கொழும்பு 13.